# මහපොළ උසස් අධ්‍යාපන ශිෂ්‍යත්ව භාර අරමුදල
## மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்
## Mahapola Higher Education Scholarship Trust Fund

# 2012

## වාර්ෂික වාර්තාව හා ගිණුම්
## வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்
## ANNUAL REPORT & ACCOUNTS



# 2012

## வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்

**மஹபொல உயர்க்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்**

# பொருளடக்கம்


| | |
|---|---|
| நிதியத்தின் குறிக்கோள்களும் நோக்கங்களும் | 1 |
| நிதியத்தினதும் நிர்வாகத்தினதும் ஆரம்பம் - நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை | 2 |
| வருமானம் மற்றும் செலவு | 4 |
| பிரதான நிதியத்தின் நிலைமை - வருமானமும் முதலீடும் | 4 |
| புலமைப் பரிசில் வழங்குதல் | 5 |
| பாடசாலை அபிவிருத்தி நிதியம் | 8 |
| **துணைக்கம்பனிகள் / இணைந்த கம்பனிகள்** | |
| இலங்கை தகவல் தொழில்நுட்பவியல் நிறுவகம் | 9 |
| நெஷனல் வெல்த் கோப்பரேஷன் லிமிடட்/ நெட் வெல்த் சிக்கியுரிட்டீஸ் லிமிடட் | 13 |
| **நிதிக்கூற்றுக்கள்** | |
| திரட்டிய நிதிக்கூற்றுக்கள் | 17 |
| திரட்டிய நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 60 |

## தூர நோக்கு

“ வறுமை ஒழிப்பை இலக்காகக் கொண்ட கற்றறிந்த சமூகமொன்றை உருவாக்குதல்”

## செயற்பணி

“சலுகைகளைப் பெற்றிராத இளைஞர் யுவதிகளுக்கு உயர் கல்வி நடவடிக்கைகளை நிறைவு செய்துகொள்வதற்காக புலமைப் பரிசில்களை வழங்குதல் மற்றும் உயர் கல்விக்கான வசதிகளை மேம்படுத்துதல் ஊடாக சம வாய்ப்புக்களை ஏற்படுத்தல்”

## குறிக்கோள்கள் மற்றும் இலக்குகள்

இந்த நிதியத்தின் குறிக்கோள்கள் மற்றம் இலக்குகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- இளைஞர் யுவதிகளுக்கு உயர் கல்விக்கான வசதிகளை ஏற்படுத்தல்.
- இரண்டாம் நிலைக் கல்வியை திருப்திகரமான முறையில் நிறைவு செய்து உதவி பெறுவதற்குப் பொருத்தமான இளைஞர் யுவதிகளுக்கு உயர் கல்வி நிறுவனமொன்றில் தமது கல்வி, தொழில்நுட்ப அல்லது தொழில்துறை கல்வியை நிறைவு செய்துகொள்வதற்காக உதவி வழங்குதல்.
- இளைஞர்களின் ஆற்றல்களை விருத்தி செய்வதற்காக தொழிற் பயிற்சி நிறுவனங்களை அமைத்தல் மற்றும் அவற்றின் முகாமைத்துவத்திற்கு உதவி புரிதல்.
- கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பாடசாலைகள் மற்றும் நிறுவனங்களை அமைத்தல் மற்றும் அவற்றுக்கு உதவி புரிதல்.
- கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள நபர்களின் நிபுணத்தவ அறிவை மேம்படுத்தல் மற்றும் விருத்தி செய்துகொள்வதற்காக உதவி வழங்குதல். (தற்போது முக்கியமாக கல்வி நடவடிக்கைகளுக்காக புலமைப் பரிசிலை வழங்குவதனை ஆரம்ப மற்றும் முக்கிய அலுவலாக கருதி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது)

## நிதியத்தின் ஆரம்பம்

மகாபொல உயர் கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியம் 1981 இன் 66 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் ஊடாக கூட்டிணைக்கப்பட்டுள்ளது. அந்தச் சட்டத்தின் 3 ஆவது உறுப்புரைக்கமைய நிதியத்தின் நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாடு நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மறைந்த கௌரவ லலித் அத்துலத்முதலி அவர்கள் 1980 ஆம் அண்டில் கௌரவ வர்த்தக மற்றும் கப்பற்துறை அமைச்சராக பதவி வகிக்கும் காலத்தில் அறிமுகஞ் செய்யப்பட்ட "மஹாபொல" எண்ணக்கரு முதன்முதலாக வர்த்தக கண்காட்சியின் ஊடாக கிராமிய மக்களுக்கு திறந்த பொருளாதாரத்தின் நன்மைகள் மற்றும் அறிவைப் பெற்றுக்கொடுக்கும் அடிப்படை நோக்கத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

அதன் பெறுபேறாக 422 புலமைப் பரிசில்கள் வழங்கலுடன் ஆரம்பிக்கப்பட்டு 1981 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட மஹாபொல புலமைப் பரிசில் வேலைத் திட்டத்தின் ஊடாக கடந்த முப்பது வருடங்களில் 200,000 இற்கும் அதிகமான புலமைப் பரிசில்கள் உயர் கல்வி கற்பதற்காக மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், 2012 ஆம் ஆண்டிற்காக ரூபா 900 மில்லியனை புலமைப் பரிசிலுக்காக ஒதுக்குவதற்கு நிதியத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 2012 ஆம் ஆண்டின் இறுதியில் புலமைப் பரிசில்களை வழங்குவதற்காக ரூபா 680,573,470.00 செலவிடப்பட்டுள்ளது.

திரட்டு நிதியத்திற்குச் சொந்தமல்லாத உயர் கல்விக்கான நிறுவன ரீதியிலான மற்றும் நிதி சார்ந்த உதவிகளைப் போன்றே இளைஞர்களுக்கு அவர்களது உயர் கல்வி நடவடிக்கைகளை நிறைவு செய்துகொள்வதற்காக புலமைப் பரிசில்களை வழங்கும் இந்த நிதியத்தின் நிர்வாக நடவடிக்கைகள் கௌரவ பிரதம நீதியரசர் தலைமை வகிக்கும் சுயாதீன நம்பிக்கை பொறுப்பாளர் சபையின் ஊடாக சுயாதீனமாக இயங்கி வருகின்றது.

## நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை

பதவி அதிகாரத்தின் அடிப்படையில் :

| | | |
|---|---|---|
| 1. | பிரதம நீதியரசர்<br>கௌரவ கலாநிதி சிரானி பண்டாரநாயக்க அம்மையார் | (கௌரவ தலைவர்) |
| 2. | கூட்டுறவு மற்றும் உள்ளக வர்த்தக அமைச்சர் கௌரவ ஜொன்ஸ்டன் பெர்னாந்து | (கௌரவ ஆரம்ப பொறுப்பாளர்) |
| 3. | கூட்டுறவு மற்றும் உள்ளக வர்த்தக அமைச்சின் செயலாளர் திரு. சுனில் எஸ்.சிறிசேன | (கௌரவ பொறுப்பாளர்) |
| 4. | உயர் கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி திரு. சுனில் ஜயந்த நவரத்ன | (கௌரவ பொறுப்பாளர்) |
| 5. | கல்வி அமைச்சின் செயலாளர் திரு.கோத்தாபய ஜயரத்ன | (கௌரவ பொறுப்பாளர்) |
| | | |
| | **பெயர் குறிப்பிடப்பட்ட :** | |
| 6. | திரு. எஸ்.வீ.டீ.கேசரலால் குணசேக்கர | (கௌரவ பொறுப்பாளர்) |
| 7. | பேராசிரியர் திரு.மலிக் ரணசிங்க, துணைவேந்தர், மொரட்டுவை பல்கலைக்கழகம். | (கௌரவ பொறுப்பாளர்) |

(இந்த பொறுப்பாளர்களினால் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைக் கூட்டத்திற்கு எந்தவிதமான கொடுப்பனவையும் பெற்றுக்கொள்ளவில்லை.)

## வருமானம் மற்றும் செலவு

.நிதியத்தின் நிதிச் சொத்துக்களை முதலீடு செய்வதன் மூலம் கிடைக்கும் வருடாந்த வட்டி வருமானம் பிரதான வருமான மூலமாகும்.வட்டி வருமானமாக வருடத்தில் ரூபா 700,597,706/- கிடைக்கின்றது. அபிவிருத்தி லொத்தர் சபையின் மூலதனத்தின் சம பங்களிப்பின் 50% இலாபப் பங்காக ரூபா 734,128,031/- தொகையை மஹாபொல உயர் கல்வி புலமைப் பரிசில் நிதியத்திற்கு ஜனாதிபதி நிதியத்தின் மூலமும் இந்த ஆண்டிற்காக வழங்கப்பட்டுள்ளது. சந்தை வட்டி வீதம் குறைவடைந்துள்ளது.

ஆண்டின் மொத்தச் செலவான ரூபா 830,599,515/-வுடன் ஒப்பிடும்போது நிதியத்தின் மொத்த வருமானம் ரூபா 1,434,725,736/- ஆக இருந்தது. மஹாபொல புலமைப் பரிசிலுக்காக பணம் செலுத்துவது பிரதான அலுவலாக இருந்ததுடன் அந்த செலவின் பின்னர் அபிவிருத்தி லொத்தர் சபையின் மேற் குறிப்பிடப்பட்ட வருமானம் உட்பட ஆண்டின் ரூபா 718,920,138/- மேலதிக வருமானம் திரண்ட நிதியத்துடன் சேர்த்துக்கொள்ளப்பட்டது. இந்த நிதியம் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டிருப்பதனால் வரிக்குப் பின்னரான வருமானத்தில் மாற்றமெதுவும் ஏற்படாது.

## பிரதான நிதியத்தின் நிலைமை - வருமானமும் முதலீடும்

## முதலீடு




| | Rs. bn. |
|---|---|
| Fixed Dep. | 1.952 |
| T/ Bonds | 3.409 |
| P/Shares | 0.200 |
| Debenture | 0.202 |
| A/Back | 0.052 |
| R/Repo | 0.049 |
| **Total** | **5.864** |

## வருமானம்




## புலமைப் பரிசில் வழங்குதல்

மஹாபொல உயர் கல்வி புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பிப்பவர்களிடையே வருடாந்தம் வழங்கப்படும் வரையறுக்கப்பட்ட மஹாபொல திறமை புலமைப் பரிசில்களின் அளவு க.பொ.த (உ.த) பரீட்சையின் பெறுபேறுக்கமைய வழங்கப்படும். இங்கு அதிகளவு புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட மாணவர்களுக்கு திறமையை அடிப்படையாகக் கொண்டு மஹாபொல திறமை புலமைப் பரிசிலும் அதிலிருந்து திறமைக்கு முன்னுரிமை வழங்கி குடும்ப வருமானத்தை கவனத்திற்கொண்டு மஹாபொல பொதுவான புலமைப் பரிசிலும் வழங்கப்படும்.
வருடாந்தம் ஒதுக்கப்படும் மொத்த மஹாபொல புலமைப் பரிசில்களின் எண்ணிக்கையில் 10% திறமை அடிப்படையிலான புலமைப் பரிசில்களாக இருப்பதுடன் மீதி 90% பொதுவான புலமைப் பரிசில்களாக ஒதுக்கப்பட்டுள்ளது. பொதுவான புலமைப் பரிசிலைப் பார்க்கிலும் ரூபா 50/- அதிகமாக திறமை புலமைப் பரிசிலுக்காக செலுத்தப்படும்.

இந்த ஆண்டில் 2011/2012 கற்கை ஆண்டிற்காக 2011 க.பொ.த (உ.த) பெறுபேறுகளுக்கமைய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் பல்கலைக்கழகக் கல்விக்காக ஆண்டினுள் அனுமதிக்கப்பட்ட மாணவர்களுக்காக 13,500 புலமைப்பரிசில்களை வழங்குவதற்கு மஹாபொல புலமைப் பரிசில் நம்பிக்கைப்

பொறுப்பாளர் சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டது. இந்த எண்ணிக்கையில் சுமார் 1350 மாணவர்கள் திறமை அடிப்படையில் திறமை புலமைப் பரிசில்களைப் பெற்றுக்கொண்டதுடன், மீதி 12150 புலமைப் பரிசில்கள் திறமை அடிப்படையில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுக்கொண்ட மொத்த மாணவர்களின் எண்ணிக்கையான 22,943 உடன் ஒப்பிட்டு நோக்கம்போது மாணவர்களில் மாணவர்களில் 58.84% ஆனோர் இந்த மஹாபொல புலமைப் பரிசிலைப் பெற்றுக்கொள்கின்றனர். இதற்கமைய, 2012 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் ஊடாக சிபாரிசு செய்யப்பட்ட பாடநெறிகளுக்காக அனுமதிக்கப்பட்ட மாணவர்களுக்காக புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட புலமைப் பரிசில்களின் எண்ணிக்கையைப் பார்க்கிலும் மேலதிகமாக கீழ் குறிப்பிடப்படும் ஏனைய உயர் கல்வி நிறுவகங்களில் பட்டம் மற்றும் தொழிற் கல்வி டிப்ளோமா பாடநெறிகளுக்காக 1556 புலமைப் பரிசில்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில் கீழ் குறிப்பிடப்படும் பிரகாரம் அந்த நிறுவகங்களின் மாணவர்களுக்கு புலமைப் பரிசில்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டது.

| | நிறுவகம் | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | இலங்கை சட்டக் கல்லூரி | 37 |
| 2. | தேசிய தொழில்நுட்ப நிறுவகம், மொரட்டுவை | 70 |
| 3. | பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம் | 19 |
| 4. | புத்த சிராவக்க பிக்கு பல்கலைக்கழகம் | 20 |
| 5. | தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம் (10 பட்டங்கள், 14 டிப்ளோமா பாடநெறிகள்) | 10 |
| 6. | இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவகம் (15 பிரதேச நிறுவகங்கள்) | 1500 |
| 7. | இலங்கை திறந்த பல்கலைக்கழகம் | 400 |
| | **மொத்தம்** | **1556** |

## மஹாபொல புலமைப் பரிசில் வழங்கல் 1981 - 2012




### புலமைப் பரிசில் செலுத்தல்

மஹாபொல புலமைப் பரிசில் பெறும் ஒருவருக்கு ஒரு கற்கை ஆண்டொன்றுக்காக 10 தவணைகள் செலுத்தப்படுகின்றது. அதற்கமைய, புலமைப் பரிசிலைச் செலுத்துவதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் ஊடாக பொதுத் திறைசேரியிலிருந்து மாதாந்தம் வழங்கப்படும் ரூபா **350/-** உட்பட சகல புலமைப் பரிசில் பெறுபவருக்கும் முறையே திறமை புலமைப் பரிசிலுக்காக ரூபா **2,550/-** வும் பொதுவான புலமைப் பரிசிலுக்காக **2,500/-** வும் பல்கலைக்கழகங்களின் ஊடாக செலுத்தப்படுகின்றது.






**மஹாபொல உயர் கல்விக்கான புலமைப் பரிசில்கள் வழங்கல் - 1981 ஆம் ஆண்டு முதல்**

மஹாபொல உயர் கல்வி புலமைப் பரிசில் நிதியத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள பாடசாலை அபிவிருத்தி நிதியத்தின் வட்டி வருமானத்தின் ஊடாக 03 பாடசாலைகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு உதவி வழங்க முடியுமாகியது.

| | **பாடசாலையின் பெயர்** | **வழங்கிய தொகை (ரூ.)** |
|---|---|---|
| 1. | புனித அந்தோனியர் கல்லூரி – கண்டி | 5,775,930.40 |
| 2. | புனித ஆன் கல்லூரி – குருநாகல்<br>கேட்போர்கூடத்தை அமைத்தல் | 23,601,722.33 |
| 3. | ராஹுல கல்லரி மாத்தறை | 20,000,000.00 |
| | **மொத்தம்** | **49,377,652.73** |

**இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகம்**

பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுக்கொள்ள முடியாத மாணவர்களுக்கு உயர் கல்வியை பெற்றுக்கொள்ள முடியமான வகையில் தகவல் தொழில்நுட்பக் கல்வி நடவடிக்கைகளுக்காக 1999 ஆம் அண்டில் மஹாபொல நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையினால் மாலம்பேவில் அமைந்துள்ள மஹாபொல புலமைப் பரிசில் நிதியத்திற்குச் சொந்தமான ரனிஸ்தான்வத்த எனும் 25 ஏக்கர் காணியில் இந்த நிறுவகம் தாபிக்கப்பட்டது. இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகம் அதன் நிதியத்தின் ஊடாக புலமைப் பரிசிலை வழங்குவதற்கான ஒரு பணியை நிறைவேற்றியுள்ளது.

இந்த நிதியத்தின் கீழ் அந்த நிறுவகத்தை தாபிக்கும் நடவடிக்கைக்காக முகாமைத்துவ சபை என்ற வகையில் வரையறுக்கப்பட்ட இலங்கை தகவல் தொழில்நுட்பம் (கெரன்ட்) கம்பனி நிறுவப்பட்டது. 1999 ஆம் ஆண்டில் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட இந்த செயற் திட்டத்திற்காக மஹாபொல புலமைப் பரிசில் நிதியத்திலிருந்து ரூபா 472 மில்லியன் செலவிடப்பட்டது.

அந்த நிறுவகத்தின் ஊடாக தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா மற்றும் தகவல் தொழில்நுட்ப பட்டப் பாடநெறிகளுக்காக கீழ் குறிப்பிடப்படும் பிரகாரம் மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

| ஆண்டு | அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை |
|---|---|
| 2000 முதல் 2011 வரை டிப்ளோமா பாடநெறி | 13,192 |
| 2012 பட்டப் பாடநெறி | 1,146 |
| 2012 டிப்ளோமா பாடநெறி | 1,076 |
| **மொத்தம்** | 21,485 |

இதுவரை டிப்ளோமா பாடநெறி, பட்டப் பாடநெறிகளைப் போன்றே தகவல் தொழில்நுட்பம் சம்பந்தமான முதுமாணிப் பட்டங்கள் வரையிலான பாடநெறிகள் வரை அந்த நிறுவகத்தின் ஊடாக நடாத்தப்படுகின்றன. அந்தப் பாடநெறிகளைப் பயிலும் மாணவர்களுக்கு தகவல் தொழில்நுட்பத் துறையில் போதியளவு தொழில் வாய்ப்புக்கள் நிலவுகின்றன.

மேலும் பொறியியல் மற்றும் முகாமைத்துவப் பாடநெறிகளையும் அறிமுகஞ் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**2012.12.31 ஆம் திகதியன்று பணிப்பாளர் சபை**

**கணக்கீட்டுக் காலத்தின் இறுதியில் நிறுவகத்தின் பணிப்பாளர் சபை கீழ் குறிப்பிடப்பட்டவர்களைக் கொண்டுள்ளது.**

| பெயர் | பதவி | உத்தியோகபூர்வ பதவி |
|---|---|---|
| பேராசிரியர் சமரஜீவ கருணாரத்தன | தலைவர் | |
| பேராசிரியர் பம்முனுவிட்ட கமகே லலித் தீப்தி குமார | முகாமைத்துவப் பணிப்பாளர் | |
| திரு. செனரத் விதானலாகே தொன் கேசரலால் குணசேக்கர | பணிப்பாளர் | நம்பிக்கைப் பொறுப்பாளர் (ம.ந.நி) |
| திரு. தேனுவர ஹேனெந்திகே ரஞ்சித் தேனுவர த சில்வா | பணிப்பாளர் | பணிப்பாளர் (ம.ந.நி) |
| கலாநிதி சனில் ஜயந்த நவரத்ன | பணிப்பாளர் | செயலாளர் - உயர் கல்வி அமைச்சு |
| திரு திஸ்ஸ சந்தசேன | பணிப்பாளர் | செயலாளர் - பல்.மானி.ஆணைக் குழு |
| திரு. தெலிகட பல்லியகுருகே நந்தசிரி லீலாரத்ன | பணிப்பாளர் | |
| திரு.திலான் மஞ்சித் விஜேசிங்க | பணிப்பாளர் | |
| பேராசிரியர் லக்ஷ்மன் லொயிட் ரத்னாயக்க | பணிப்பாளர் | |
| கலாநிதி கோலிய நயந்த புலசிங்க | பணிப்பாளர் | |
| கலாநிதி கன்கந்தகே மஹேஷா சுவர்ணமாலா கப்புறுபண்டார | பணிப்பாளர் | |
| கலாநிதி விஜேசுந்தர முதியன்சேலாகே மலித்த நயனஜித் விஜேசுந்தர | பணிப்பாளர் | |
| திரு. தினேஷ் போதித்த சப்பரமா | பணிப்பாளர் | |
| திரு.திலந்த விதானகே | பணிப்பாளர் | |
| ஜனக்க பிரசாத் மன்னாரம் கமகே. | பணிப்பாளர் | |

**2013.03.31 ஆம் திகதியன்று இலங்கை தகவல்கள் தொழிநுட்ப (உத்தரவாத) கம்பனியின் நிதி நிலைமை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.**

**இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம் (உத்தரவாதம் வரையறுக்கப்பட்ட) கம்பனி**
**மொத்த வருமான விபரம்**
**2013 மார்ச் 31 திகதியன்று**

| | குறிப்பு | வகை **2012/2013** Rs. Cts. |
|---|---|---|
| வருமானம் | **4** | 778,312,339.92 |
| நேரடி செலவுகள் | **5** | 226,403,843.63 |
| **மொத்த லாபம்** | | 551,908,496.29 |
| ஏனைய வருமானம் | **6** | 12,175,953.17 |
| | | 564,084,449.46 |
| நிர்வாக செலவுகள் | **7** | 414,534,315.33 |
| ஏனைய தொழிற்பாட்டு செலவுகள் | **8** | 17,587,653.80 |
| | | 432,121,969.13 |
| **தொழிற்பாட்டு இலாபம்** | | 131,962,480.33 |
| நிதி வருமானம் | **9** | 91,442,312.25 |
| **வரிக்கு முந்திய லாபம்** | | 223,404,792.58 |
| வரி | | (24,484,071.00) |
| **வரிக்கு பிந்திய லாபம்** | | 198,920,721.58 |
| **ஏனைய தொழிற்பாட்டு இலாபம்** | | |
| கணக்கிடப்பட்ட லாபம் | | 2,038,598.96 |
| **மொத்த தேறிய வருமானம்** | | 2,038,598.96 |
| **மொத்த தேறிய வருமானம்** | | 200,959,320.54 |
| **தேறிய லாபம் - பங்குகள்** | | |
| உரிமையாளர்களின் லாபப் பங்கு | | 195,572,537.68 |
| சிறிய பங்குதாரர்களின் லாபம் | | 5,386,782.87 |
| **மொத்த தேறிய லாபம்** | | 200,959,320.54 |

**இததொறி இன் கணக்காண்டு காலப்பகுதி 01/04/2012 இலிருந்து 31/03/2013 வரை.**

**இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம் (உத்தரவாதம் வரையறுக்கப்பட்ட) கம்பனி**
**நிதிக் கூற்று**
**2013 மார்ச் 31 திகதியன்று**

| | குறிப்பு | 31.03.2013 ரூ. |
|---|---|---|
| **சொத்துக்கள்** | | |
| **அசையாச் சொத்துக்கள்** | | |
| சொத்துக்கள் உப□ரணங்கள், ஏனையவை | 10 | 635,059,048.82 |
| முதலீடுகள் | 12 | 726,686,34.15 |
| ஏனைய நிதிச் சொத்துக்கள் | 13A | 4,438,195.60 |
| சுவீகரிப்பு – கீர்த்திநாமம் | | 1,575,646.16 |
| | | 1,367,759,224.73 |
| **அசையும் சொத்துக்கள்** | | |
| ஏனைய நிதிச் சொத்துக்கள் | 13B | 2,728,885.24 |
| பெற வேண்டிய செலவுகள் | 14 | |
| வைப்புக்கள் | 15 | 521,600.00 |
| கடனாளிகள் மற்றும் கிடைக்க வேண்டிய கட்டணம் | 16 | 39,533,711.63 |
| முற்பணக் கணக்கு | 17 | 42,384,078.42 |
| கையிருப்பு , வங்கி மீதி | 18 | 95,364,083.44 |
| | | 180,532,358.73 |
| **மொத்த சொத்துக்கள்** | | **1,548,291,583.46** |
| **நிதியம் மற்றும் பொறுப்புக்கள்** | | |
| **நிதியம் மற்றும் இருப்பு** | | |
| மஹாபொல நிதியப் பங்களிப்பு | 19 | 373,400,000.00 |
| ஏனைய நிதியஙங்கள் | | 1,556,362.25 |
| கட்டுப்பாட்டு இருப்பு | | 14,718,662.66 |
| மு.கொ.நி லாபம் | | 898,797,627.19 |
| | | 1,288,472,652.10 |
| சிறுபான்மை பங்குதாரர்களின் நிதியம் | | 13,853,132.48 |
| **அசையாச் சொத்துக்கள்** | | |
| பின் சீராக்கல் மிகைக்கட்டணம் | | 1,118,655.08 |
| ஊழியர் அனுகூலங்கள் | 20 | 27,451,640.61 |
| | | 28,570,295.69 |
| **அசையும் பொறுப்புக்கள்** | | |
| பின் சீராக்கல் லாபம் | | 2,871,196.64 |
| தொடர்புடைய தரப்பினதருக்கான செலுத்துகை | 21 | |
| கடனாளிகள், செலுத்துகைகள் | 22 | 159,845,072.94 |
| அட்டுறு செலவுகள் | | 54,679,233.62 |
| | 23 | 217,395,503.20 |
| **நிதியம் மற்றும் பொறுப்புக்கள்** | | **1,548,291,583.46** |

## நெஷனல் வெல்த்த கோப்பரேஷன் லிமிடட்

**மஹாபொல உயர் கல்விப் புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியம்** கம்பனியின் மொத்த மூலதனத்திற்கு பங்களிப்பைச் செலுத்தி ரூபா 300 மில்லியன் முதலீடு செய்து வரையறுக்கப்பட்ட **"நெஷனல் வெல்த் கோப்பரேஷன் லிமிடட்"** எனும் பெயரில் வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றை நிதி நடவடிக்கைகளுக்காக நிறுவியுள்ளதுடன், அதனூடாக மஹாபொல உயர் கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியத்தின் நிதியும் திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள் மற்றும் ஏனைய பாதுகாப்புமிக்க நிதி சார்ந்த கருவிகளில் முதலீடு செய்யப்படுகின்றது. அதனுடன் இணைந்த வகையில் நிறுவப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட "நெட்வெல்த் சிக்கியுரிட்டீஸ்" நிறுவனத்தின் ஊடாக இலங்கை மத்திய வங்கியின் பிணைப் பத்திரங்கள், திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள் தொடர்பாக ஆரம்ப முகவர் நிறுவனமாக செயற்படும்.

## 2012.12.31 ஆம் திகதியன்று நெஷனல் வெல்த் கோப்பரேஷன் லிமிடடின் பணிப்பாளர் சபை

| பெயர் | பதவி | நியமித்த திகதி |
|---|---|---|
| திரு.ஜொஹான் எஸ் பெர்னாந்து | பணிப்பாளர் | 27/9/2012 |
| திரு.ஜனக்க பீ.எம்.கமகே | பணிப்பாளர் | 27/9/2012 |
| திரு.அசங்க சீ செனவிரத்ன | பணிப்பாளர் | 02/08/2011 |
| திரு.ரஞ்சித் தேநுவர | பணிப்பாளர் | 11/11/2004 |
| திரு.துரைசாமி ஜீவநாதன் | பணிப்பாளர் | 27/09/2012 |

**நெஷனல் வெல்த் கோப்பரேஷன் தனியார் நிறுவனம் மற்றும் இணை நிறுவனங்களுக்காக**

## 2012.12.31 ஆம் திகதியன்று நிதி நிலைமை

**(சகல பெறுமதிகளும் இலங்கை ரூபாவில்)**

| | குறிப்பு | குழுமம் 31/12/2012 | கம்பனி 31/12/2012 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| காசு மற்றும் காசுக்கு சமமானவை | 7 | 5,540,906.00 | 118,819.00 |
| நிதிச் சொத்துக்கள் | | | |
| இலாப நட்டக் கணக்கின் ஊடாக நியாயமான பெறுமதிக்கு சீர்படுத்தல் | 8.1 | 3,157,179,525.00 | 210,540,441.00 |
| கடன், முற்பண அறவீடுகள் | 8.2 | 688,772,517.00 | 21,153,912.00 |
| முதிர்ச்சி மூலதனம் | 8.3 | 1,632,149,512.00 | 100,155.00 |
| வைப்புக்கள், எதிர்கால செலுத்துகை, பெறப்பட வேண்டிய கணக்குகள் | 9 | 18,506,218.00 | 2,953,490.00 |
| அண்மிய கம்பனிகளில் முதலீடு | | | |
| நெட் வெல்த் சிக்கியுரிட்டீஸ் நிறுவனம் | | | 273,600,000.00 |
| வரி சீர்படுத்தல்கள் | 11 | 1,072,389.00 | 968,387.00 |
| சொத்து, ஆலைகள், உபகரணங்கள் | 12 | 1,737,989.00 | 1,559,309.00 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **5,504,959,056.00** | **510,994,513.00** |
| **உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள்** | | | |
| **மூலதனம் மற்றும் இருப்பு** | | | |
| வெளியிடப்பட்ட மூலதனம் | 13 | 300,000,070.00 | 300,000,070.00 |
| விசேட இருப்புக்கள் | | 149,975,522.00 | - |
| நிறுத்திவைத்த லாபம் | | 98,033,183.00 | 188,162,814.00 |
| **மொத்த உரிமைகள்** | | **548,008,775.00** | **488,162,884.00** |
| **பொறுப்புக்கள்** | | | |
| மீட்ட முடியுமான முன்னுரிமை பங்குகள் | 14 | 200,000,000.00 | |
| நிதிப் பொறுப்புக்கள் | | | |
| கடன் மற்றும் செலுத்துகைகள் | 15 | 4,669,093,384.00 | |
| வங்கி மிகைப் பற்று | 16 | 35,348.00 | 35,348.00 |
| ஏனைய அட்டுறு செலவுகள் | | 21,246,251.00 | 15,250,182.00 |
| வருமான வரிப் பொறுப்பு | 17 | 62,399,773.00 | 4,268,600.00 |
| சேர்ந்த ஊழியர் அனுகூலங்கள் | 18 | 4,175,525.00 | 3,277,498.00 |
| நிறுத்திவைக்கப்பட்ட வருமான வரிப் பொறுப்ப | 11 | _ | _ |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **4,956,950,281.00** | **22,831,628.00** |
| **மொத்த உரிமைகள், பொறுப்புக்கள்** | | **5,504,959,056.00** | **510,994,513.00** |

**நெஷனல் வெல்த் கோப்பரேஷன் தனியார் நிறுவனம் மற்றும் இணை நிறுவனங்களுக்காக**

**விபரமான வருமான அறிக்கை**

**(சகல பெறுமதிகளும் இலங்கை ரூபாவில்)**

| | குறிப்பு | குழுமம் 31/12/2012 | கம்பனி 31/12/2012 |
|---|---|---|---|
| முதலீட்டு முகாமைத்துவக் கட்டணம் | 19 | 8,683,246 | 8,683,246 |
| முதலீடுகள் மற்றும் ஏனைய தொழிற்பாட்டு வருமானம்/(செலவுகள்) | 20 | (274,707,004) | 61,537,676 |
| தேறிய முதலீட்டு வருமானம் | | 266,023,758 | 70,220,922 |
| பரிவர்த்தனைகளில் பிணைப் பத்திர மீள் மதிப்பீட்டினால் ஏற்பட்ட லாபம் /நட்டம் | | 150,293,622 | (23,616,498) |
| சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பரச் செலவு | | (678,242) | (255,132) |
| நிர்வாக செலவு | | (57,308,489) | (13,614,530) |
| நிதிச் சேவைகளுக்கான வற் வரி | | _ | _ |
| வரிக்கு முந்திய லாபம்/(நட்டம்) | 21 | (173,716,867) | 32,734,762 |
| வருமான வரிச் செலவு | 23 | (1,676,747) | (1,676,747) |
| ஆண்டு லாபம்/(நட்டம்) | | **(175,393,614)** | **31,058,015** |
| **ஏனைய விபரமான வருமானம்** | | | |
| கணக்கிடப்பட்ட ஊழியர் அனுகூலங்கள் | | (1,031,834) | (861,614) |
| சேர்ந்த ஓய்வூதிய அனுகூலம் மீதான வரி | | 288,914 | 288,914 |
| ஆண்டின் ஏனைய விபரமான லாபம்/நட்டம் | | 742,920 | (572,700) |
| **மொத்த விபரமான (நட்டம்)/ஆண்டு வருமானம்** | | **(176,136,534)** | **30,485,315** |
| பங்கொன்றின் ஈட்டல் /(நட்டம்) | | | |
| ஆரம்ப | 24 | (5.87) | 1.02 |
| சேதமடைந்த | 24 | (5.87) | 1.02 |

**பணியாட் தொகுதி**

மஹாபொல உயர் கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியம் மிகக் குறைந்தளவில் பணியாட் தொகுதிக்கான செலவை மேற்கொள்ளும் நிறுவனம் என்ற வகையில் அதன் ஆரம்பம் முதல் மிகக் குறைந்தளவிலான பணியாட் தொகுதியின் மூலம் அலுவல்களை மேற்கொள்வதுடன் பணியாட் தொகுதிக்கான நிர்வாகச் செலவு வருமானத்தின் 0.26% ஆக இருப்பதுடன் செலவை 0.40% எனும் மிகக் குறைந்த மட்டத்தில் வைத்திருக்க முடியுமாகியது.

பணியாட் தொகுதியில் தற்போது நிலவும் வெற்றிடங்களை உள்ளக பதவியுயர்வுகள் ஊடாக நிரப்புவதற்கும், அதன் பின்னர் உருவாகும் பதவி வெற்றிடங்களை வெளிவாரி விண்ணப்பதாரிகளிடமிருந்து நிரப்புவதற்கும் நம்பிக்கை பொறுப்பாளர் சபை தீர்மானித்துள்ளது.

**ஒப்பம் /எம்.பராக்கிரம பண்டார,**
பணிப்பாளர் (பதில் கடமை),
மஹாபொல உயர் கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியம் (சார்பாக)

# திரட்டிய நிதிக் கூற்றுகள்

# 2012 டிசம்பர் 31 ஆம் திகதி

**மஹாபொல உயர் கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்**
**திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான திரட்டிய நிதிக் கூற்று**

| | குறிப்புகள் | குழுமம் | | நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | |
|---|---|---|---|---|---|
| | | **2012** | **2011** | **2012** | **2011** |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வருமானம் | 9 | 1,508,784,172 | 1,595,744,687 | 1,434,725,736 | 1,203,129,252 |
| நேரடியான செலவு | 10 | (900,453,437) | (881,915,885) | -729,611,070 | -773,617,762 |
| | | 608,330,735 | 713,828,802 | 705,114,666 | 429,511,490 |
| ஏனைய வருமானம் | 11 | 74,345,075 | 29,150,822 | 114,748,475 | 34,141,028 |
| | | 682,675,810 | 742,979,624 | 819,863,140 | 463,652,518 |
| நிருவாகச் செலவு | 12 | (481,977,059) | (414,760,351) | (73,065,213) | (16,564,628) |
| விற்பனை, விநியோகச் செலவுகள் | 13 | (22,862,906) | (13,598,904) | - | - |
| ஏனைய செலவீனங்கள் | 14 | (25,508,270) | (13,688,072) | - | - |
| | | **152,327,575** | **300,932,296** | **746,797,928** | **447,087,890** |
| நிருவாகச் வருமானம் | 15 | 219,304,200 | 119,975,892 | 22,721 | 36,325 |
| நிதிச் செலவு | 16 | (431,246,562) | (227,597,407) | (27,900,511) | - |
| | | (211,942,362) | (107,621,515) | (27,877,790) | 36,325 |
| துணைக் கம்பனியிலிருந்தான இலாபப் | | 947,189,322 | 687,783,871 | - | - |
| **கழிக்க:** புலமைப்பரிசில் விருது செலவுகள் | | (49,038,600) | (75,547,623) | - | - |
| | | 898,150,722 | 612,236,248 | - | - |
| **வரிக்குப் முன்னரான இலாபம்/(நட்டம்)** | | **838,535,935** | **805,547,029** | **718,920,138** | **447,124,214** |
| **வரிச் செலவுகள்** | 17 | (14,619,306) | (55,203,016) | - | - |
| **வரிக்குப் பின்னரான இலாபம்** | | **823,916,629** | **750,344,013** | **718,920,138** | **447,124,214** |
| **உடமையாக்கத்தக்க இலாபங்கள்** | | | | | |
| கம்பனியின் உரிமையாளர்கள் | | 817,698,686 | 747,747,739 | 718,920,138 | 447,124,214 |
| கட்டுப்படுத்தாத வட்டி | | 6,217,943 | 2,596,274 | - | - |
| | | **823,916,629** | **750,344,013** | **718,920,138** | **447,124,214** |

**மஹாபொல உயர் கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்**
**திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான விரிவான வருமானத்தின் திரட்டிய நிதிக் கூற்று**

| | குழுமம் | | நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | |
|---|---|---|---|---|
| | **2012** | **2011** | **2012** | **2011** |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **வரிக்குப் பின்னரான இலாபம்** | **823,916,629** | **750,344,013** | **718,920,138** | **447,124,214** |
| **ஏனைய விரிவான வருமானம்** | | | | |
| ஏ.எவ்.எஸ். இன் கீழான சந்தைப் பெறுமதியில் மாற்றங்கள் | (51,957,307) | (157,103,432) | (51,957,307) | (157,103,432) |
| பின்னைய தொழில் நன்மை மீதான உண்மையான (நட்டம்)/ இலாபம் | (737,011) | 1,348,543 | (322,049) | 1,758 |
| ஓய்வூதிய நன்மைக் கடப்பாடு மீதான உண்மையான பெறுகை (/நட்டம்) மீதான வரி | 288,914 | 5,058 | - | - |
| **ஆண்டுக்கான ஏனைய மொத்த விரிவான வருமானம், தேறிய வரி** | **(52,405,404)** | **(155,749,831)** | **(52,279,356)** | **(157,101,674)** |
| **ஆண்டுக்கான மொத்த விரிவான வருமானம்** | **771,511,225** | **594,594,183** | **666,640,782** | **290,022,541** |
| **உடமையாக்கத்தக்க மொத்த விரிவான வருமானம்** | | | | |
| கம்பனியின் உரிமையாளர்கள் | 765,293,282 | 591,997,909 | 666,640,782 | 290,022,541 |
| கட்டுப்படுத்தாத வட்டி | 6,217,943 | 2,596,274 | - | - |
| | **771,511,225** | **594,594,183** | **666,640,782** | **290,022,541** |

**மஹாபொல உயர் கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்**
**திசெம்பர் 31 இலுள்ளவாறு நிதி நிலைமை பற்றிய திரட்டிய குறிப்பு**

| | குறிப்புகள் | குழுமம் | | | நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | **2012** | **2011** | **As at 01.01.2011** | **2012** | **2011** | **As at 01.01.2011** |
| **சொத்துக்கள்** | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **நடைமுறைச்சொத்துக்கள் அல்லாதவை** | | | | | | | |
| ஆதனம்,பொறித் தொகுதியும் உபகரணமும் | 18 | 591,014,886 | 453,508,878 | 470,766,863 | 5,867,116 | 1,486,423 | 900,904 |
| முதலீட்டுச் சொத்து | 19 | - | - | - | 12,460,179 | 12,460,179 | 12,460,179 |
| தொட்டுணர முடியாத சொத்துக்கள் | 20 | 1,575,646 | 1,575,646 | 1,575,646 | - | - | - |
| துணைக் கம்பனியில் முதலீடு | 21 | - | - | - | 573,577,393 | 573,577,393 | 573,577,393 |
| துணைக் கம்பனியில் முதலீடு | 22 | 785,234,346 | 523,858,817 | 514,197,382 | 2,200,000 | 2,200,000 | 2,200,000 |
| பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் | | 1,072,389 | 756,294 | - | - | - | - |
| நடைமுறை நிதிச் சொத்துக்கள் அல்லாதவை | 23 | 9,015,986,222 | 5,822,458,902 | 4,176,736,590 | 7,030,162,356 | 5,704,781,117 | 4,137,031,119 |
| | | 10,394,883,489 | 6,802,158,537 | 5,163,276,481 | 7,624,267,045 | 6,294,505,111 | 4,726,169,594 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | | | |
| நடைமுறை நிதிச் சொத்துக்கள் | 23 | 4,055,636,451 | 8,948,954,698 | 11,360,127,942 | 100,846,167 | 743,909,204 | 2,045,804,505 |
| முற் கொடுப்பனவுகளும் வர்த்தகப் பெறுகைகளும் | 24 | 86,943,379 | 42,965,670 | 39,740,515 | 284,877,573 | 199,368,073 | 199,028,481 |
| பணமும், பணத்திற்கு சமனானவையும் | 25 | 206,139,089 | 126,228,538 | 184,566,710 | 2,067,999 | 14,695,633 | 16,791,497 |
| | | 4,348,718,919 | 9,118,148,906 | 11,584,435,167 | 387,791,740 | 957,972,910 | 2,261,624,482 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **14,743,602,410** | **15,920,307,443** | **16,747,711,647** | **8,012,058,786** | **7,252,478,023** | **6,987,794,077** |
| **நிகரச் சொத்துக்களும் பொறுப்புக்களும்** | | | | | | | |
| **நிகரச் சொத்துக்கள்** | | | | | | | |
| ஆரம்ப பங்களிப்புகள் | | 1,462,250 | 1,462,250 | 1,462,250 | 1,462,250 | 1,462,250 | 1,462,250 |
| தடுத்தவைக்கப்பட்ட உழைப்புகள் | | 9,297,728,939 | 8,480,478,349 | 7,755,301,995 | 8,010,887,878 | 7,292,289,789 | 6,845,163,816 |
| ஏனைய ஒதுக்கங்கள் | | 425,708,664 | 422,451,399 | 545,372,580 | (116,666,492) | (64,709,185) | 92,394,247 |
| | | 9,724,899,853 | 8,904,391,998 | 8,302,136,825 | 7,895,683,636 | 7,229,042,854 | 6,939,020,313 |
| கட்டுப்பாடற்ற வட்டி | | 16,591,850 | 10,752,747 | 8,805,913 | - | - | - |
| | | 9,741,491,703 | 8,915,144,745 | 8,310,942,738 | 7,895,683,636 | 7,229,042,854 | 6,939,020,313 |
| **நடைமுறைப் பொறுப்புகள் அல்லாதவை** | | | | | | | |
| பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புகள் | | - | - | 2,092,024 | - | - | - |
| மானியியங்களிலிருந்து பிற்போடப்பட்ட வருமதிகள் | | 1,118,655 | 1,118,655 | 1,118,655 | - | - | - |
| ஓய்வூதிய நலன் கடப்பாடுகள் | 26 | 32,121,464 | 25,473,166 | 21,095,069 | 378,905 | 158,038 | 132,144 |
| | | 33,240,119 | 26,591,821 | 24,305,748 | 378,905 | 158,038 | 132,144 |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | | | | | |
| மானியியங்களிலிருந்து பிற்போடப்பட்ட வருமதிகள் | | 5,434,578 | 8,036,993 | 10,667,067 | - | - | - |
| வருமான வரிப் பொறுப்புகள் | 27 | 4,731,441,556 | 6,745,321,900 | 8,100,421,127 | 112,209,454 | 767,705 | 751,942 |
| உறப்பட்டவையும் ஏனைய் கொடுப்பனவுகளும் | 28 | 167,724,789 | 142,549,332 | 205,824,860 | 1,952,248 | 3,570,467 | 3,982,180 |
| ஏற்பாடுகள் | 29 | 1,834,546 | 18,938,962 | 43,907,496 | 1,834,546 | 18,938,962 | 43,907,496 |
| வருமான வரிப் பொறுப்புகள் | | 62,399,773 | 63,723,691 | 51,642,611 | - | - | - |
| வங்கி மேலதிகப்பற்று | | 35,348 | - | - | - | - | - |
| | | 4,968,870,590 | 6,978,570,877 | 8,412,463,162 | 115,996,247 | 23,277,134 | 48,641,619 |
| **மொத்த நிகரச் சொத்துக்களும் பொறுப்புக்களும்** | | **14,743,602,410** | **15,920,307,443** | **16,747,711,647** | **8,012,058,786** | **7,252,478,023** | **6,987,794,076** |

மஹாபொல உயர் கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்
உரிமையாண்மையில் மாற்றம் பற்றிய திரட்டிய கூற்று

| | குழுமம் | | | | | | | | | | நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆரம்ப பங்களிப்பு | நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புகள் | விசேட இடர் ஒதுக்கம் | பரிசில் ஒதுக்கக் கணக்ககு | ஏ.எவ்.எஸ் ஒதுக்கம் | இடைநேர் நிதியம் | அறக்கொடை நிதியம் | மொத்தம் | கட்டுப்படுத்தாத வட்டி | மொத்த நிதியமும் கட்டுப்படுத்தாத வட்டியும் | ஆரம்ப உதவுதொகை | தடுத்துவைக்கப்பட்ட உழைப்புகள் | ஏ.எவ்.எஸ் ஒதுக்கம் | மொத்தம் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2010 திசெம்பர் 31 இலுள்ளவாறான மீதி | 1,462,250 | 7,755,301,995 | 133,072,658 | 313,497,021 | 92,394,247 | 6,000,000 | 408,654 | 8,302,136,825 | 8,805,913 | 8,310,942,738 | 1,462,250 | 6,845,163,816 | 92,394,247 | 6,939,020,313 |
| 2011 சனவரி 01 இலுள்ளவாறான மீதி | 1,462,250 | 7,755,301,995 | 133,072,658 | 313,497,021 | 92,394,247 | 6,000,000 | 408,654 | 8,302,136,825 | 8,805,913 | 8,310,942,738 | 1,462,250 | 6,845,163,816 | 92,394,247 | 6,939,020,313 |
| விசேட இடர் ஒதுக்கத்திற்காக மாற்றப்பட்டவை | - | (16,902,864) | 16,902,864 | - | - | | | - | | - | - | - | - | - |
| முன்னைய ஆண்டு சீராக்கல்கள் | - | (7,022,122) | - | - | - | 5,996,421 | 1,025,701 | - | | - | - | - | | - |
| ஆண்டு காலப்பகுதியில் ஏற்பாடு | - | - | - | 9,342,473 | - | 854,924 | 59,867.30 | 10,257,264 | | 10,257,264 | - | - | | - |
| ஆண்டு காலப்பகுதிக்கான இலாபம் | - | 747,747,739 | - | - | - | - | | 747,747,739 | 2,596,274 | 750,344,013 | - | 447,125,973 | | 447,125,973 |
| ஆண்டுக்கான ஏனைய விரிவான வருமானம் | - | 1,353,601 | - | - | (157,103,432) | | | (155,749,831) | - | (155,749,831) | - | - | (157,103,432) | (157,103,432) |
| செலுத்தப்பட்ட பங்கிலாபம் | - | - | - | - | - | - | - | - | (649,440) | (649,440) | - | - | - | - |
| 2011 திசெம்பர் 31 இலுள்ளவாறான மீதி | 1,462,250 | 8,480,478,349 | 149,975,522 | 322,839,494 | (64,709,185) | 12,851,346 | 1,494,222 | 8,904,391,998 | 10,752,747 | 8,915,144,745 | 1,462,250 | 7,292,289,789 | (64,709,185) | 7,229,042,854 |
| 2011 சனவரி 01 இலுள்ளவாறான மீதி | 1,462,250 | 8,480,478,349 | 149,975,522 | 322,839,494 | (64,709,185) | 12,851,346 | 1,494,222 | 8,904,391,998 | 10,752,747 | 8,915,144,745 | 1,462,250 | 7,292,289,789 | (64,709,185) | 7,229,042,854 |
| ஆண்டு காலப்பகுதியில் ஏற்பாடு | - | - | - | 53,778,757 | - | 1,373,676 | 62,140 | 55,214,573 | - | 55,214,573 | - | - | - | - |
| ஆண்டு காலப்பகுதிக்கான இலாபம் | - | 817,698,686 | - | - | - | - | - | 817,698,686 | 6,217,943 | 823,916,629 | - | 718,598,089 | | 718,598,089 |
| ஆண்டுக்கான ஏனைய விரிவான வருருமானம் | - | (448,097) | - | - | (51,957,307) | - | - | (52,405,404) | - | (52,405,404) | - | - | (51,957,307) | (51,957,307) |
| செலுத்தப்பட்ட பங்கிலாபம் | - | - | - | - | - | - | - | - | (378,840) | (378,840) | - | - | - | - |
| 2012 திசெம்பர் 31 இலுள்ளவாறான மீதி | 1,462,250 | 9,297,728,939 | 149,975,522 | 376,618,251 | (116,666,492) | 14,225,021 | 1,556,362 | 9,724,899,853 | 16,591,850 | 9,741,491,703 | 1,462,250 | 8,010,887,878 | (116,666,492) | 7,895,683,636 |

**மஹாபொல உயர் கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்**

**பண ஓட்டம் பற்றிய திரட்டிய கூற்று**

| | குழுமம் | | நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | |
|---|---|---|---|---|
| | **2012** | **2011** | **2012** | **2011** |
| **தொழிற்பாட்டுச் செயற்பாட்டிலிருந்தான பண ஓட்டம்** | | | | |
| **ஆண்டுக்கான தேறிய இலாபம்** | **838,535,935** | **805,547,029** | **718,920,138** | **447,124,214** |
| சீராக்கல்கள் | | | | |
| தேய்மானம் | 73,155,190 | 66,504,886 | 842,027 | 243,756 |
| இணைந்த முதலீடு மீதான தடங்கல் | 90,107,550 | 86,917,285 | - | - |
| பங்கிலாப வருமானம் | (3,527,258) | (743,000) | (36,000,000) | - |
| இணைவிலிருந்தான இலாபம் | (898,150,722) | (612,236,248) | - | - |
| பீ.பீ.இயினை அகற்றுவதிலிருந்தான இலாபம் | (389,371) | (105,154) | - | - |
| அறக்கொடை நிதியத்திலிருந்தான ஏற்பாடு | 62,140 | 59,867 | - | - |
| இடைநேர் நிதியத்திலிருந்தான ஏற்பாடு | 1,373,676 | 854,924 | - | - |
| பணிக்கொடைச் செலவு | 7,317,680 | 6,310,909 | 68,858 | 27,652 |
| | (730,051,114) | (452,436,530) | (35,089,116) | 271,408 |
| செலுத்தப்பட்ட வரி | (15,970,405) | (45,965,196) | - | - |
| **தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னர் தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய பண உள் ஓட்டம்/ வெளி ஓட்டம்** | **92,514,416** | **307,145,303** | **683,831,022** | **447,395,622** |
| தொழிற்படு மூலதன மாற்றங்கள் | | | | |
| பெறுகைகளில் அதிகரிப்பு/ குறைவு | (43,977,711) | (3,225,155) | (85,509,500) | (339,594) |
| தருமதியாளர்களில் அதிகரிப்பு/ குறைவு | 25,175,456 | (63,275,529) | (1,618,220) | -411,715 |
| ஏற்பாடுகளில் அதிகரிப்பு/ குறைவு | (17,104,416) | (24,968,535) | (17,104,415) | (24,968,536) |
| | (35,906,671) | (91,469,218) | (104,232,135) | (25,719,845) |
| **தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய பண உள் ஓட்டம்/வெளி ஓட்டம்** | **56,607,745** | **215,676,085** | **579,598,888** | **421,675,778** |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான பண ஓட்டம்** | | | | |
| சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களைப் பெறுதல் | (211,374,082) | (49,387,202) | (5,222,720) | (829,275) |
| பீ.பீ.இயினை அகற்றுவதற்கான நடவடிக்கை | 1,102,254 | 245,454 | - | - |
| மானியங்களிலிருந்து பிற்போடப்பட்ட வருமானம் | (2,602,415) | (2,630,074) | - | - |
| இணைவிலிருந்து பெறப்பட்ட இலாபம் | 600,446,400 | 525,000,000 | - | - |
| நிதிச் சொத்துகளில் முதலீடு | (366,046,724) | (746,751,727) | (622,833,762) | (422,942,366) |
| பங்கிலாப வருமானம் | 3,527,258 | 743,000 | 36,000,000 | - |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | (1,406,393) | (584,268) | (170,040) | - |
| **ஓட்டம/வெளி ஓட்டம்** | **23,646,299** | **(273,364,817)** | **(592,226,522)** | **(423,771,641)** |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்து பண ஓட்டம்** | | | | |
| செலுத்தப்பட்ட பங்கிலாபம் | (378,840) | (649,440.00) | - | - |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்து தேறிய பண உள் ஓட்டம/வெளி** | **(378,840)** | **(649,440)** | - | - |
| **பணமும் பணத்திற்குப் பதிலானவையில் தேறிய மாற்றம்** | **79,875,203** | **(58,338,172)** | **(12,627,634)** | **(2,095,864)** |
| (குறிப்பு 25) | 126,228,538 | 184,566,710 | 14,695,633 | 16,791,497 |
| **ஆண்டிறுதியில் பணமும் பணத்திற்குப் பதிலானவையும் (குறிப்பு 25)** | **206,103,741** | **126,228,538** | 2,067,999 | **14,695,633** |

## 1. கூட்டாண்மைத் தகவல்

### 1.1 பொது

மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்( நம்பிக்கை நிதியம்) 1981 ஆம் ஆண்டின் 66 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் கீழ் 1981 இல் ஸ்தாபிக்கப்பட்டது. அத்துடன் இந்நிதியத்தின் முகாமையும் கட்டுப்பாடும் நம்பிக்கைப் பொறுப்புச் சபையிடம் உரித்தளிக்கப்பட்டது. இது 6 ஆம் மாடி, CWE செயலகக் கட்டடம், 27, வோக்ஷால் வீதி, கொழும்பு 02 இல் அமைந்துள்ளது.

### 1.2 திரட்டிய நிதிக்கூற்றுகள்

2012 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவுற்ற வருடத்திற்கான நம்பிக்கை நிதியத்தின் திரட்டிய நிதிக்கூற்றுகள், வருமானக் கூற்று, ஏனைய விரிவான வருமானக் கூற்று, நிதிக்கொள்கைக் கூற்று, பணப்பாய்ச்சல் கூற்று, பங்கு மாற்றக் கூற்று, குழுவின் முக்கிய கணக்கீட்டுக் கொள்கை மற்றும் நிதிக்கூற்றுக் குறிப்புகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

### 1.3 முக்கிய நடவடிக்கைளும் செயற்பாட்டுத் தன்மையும்

#### 1.3.1 மஹபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

இந்நிதியத்தின் இலக்குகளும் நோக்கங்களும் பின்வருமாறு -

(a) இளைஞர்களுக்கு உயர் கல்வி வசதியளித்தல்;

(b) இரண்டாம் நிலைக் கல்வியை திருப்திகரமாகப் பூர்த்தி செய்த இளைஞர்களுக்கு இயைபுடையவாறு பல்கலைக்கழகம் அல்லது தொழில்நுட்பவியல் அல்லது உயர் கல்வி நிறுவனம் ஒன்றில் கல்விசார், தொழில்சார், தொழில்நுட்பக் கல்வியைப் பெறக்கூடியவாறு உதவியளித்தல்;

(c) இளைஞர்களுக்கு அவர்களின் தொழில்சார் திறன்களை விருத்தி செய்யும் நோக்கில் தொழில்சார் பயிற்சி நிறுவனங்களை அமைக்க உதவுதல்;

(ன) கல்வியைத் தொடர்வதில் ஈடுபட்டுள்ள பாடசாலைககள், நிறுவனங்கள், மன்றங்கள், மற்றும் அத்தகைய நிறுவனங்களின் அமைவிற்கு உதவுதல்

(e) உயர் கல்வியில் ஈடுபட்டுள்ள விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் அத்தகைய நபர்களின் விருத்தி, மேம்பாடு பொருட்டு உதவியளித்தல்

### 1.3.2 உதவுதொகை மற்றும் அவை தொடர்பானவற்றில் பங்குடைமை வகித்தல்

2012 டிசம்பர் 31 ஆம் திகதி மற்றும் 2011 ஜனவரி 1 ஆம் திகதி உள்ளவாறு, உதவுதொகையும் அவை தொடர்பானவையும் அவற்றின் உரிமையும் பின்வருமாறு:

| உதவுதொகை | பிரதான செயற்பாடுகள் | மூலதன வகை | 2012 டிசம்பர் 31 ஆம் திகதி | 2011 டிசம்பர் 31 ஆம் திகதி | 2011 ஜனவரி 1 ஆம் திகதி |
|---|---|---|---|---|---|
| National Wealth Corporation (Private) Ltd. (NWCL) | நிதி முகாமை மற்றும் மூலதன ஆலோசனை | துணைக்கம்பனி | 100% | 100% | 100% |
| இலங்கை தகவற் தொழில்நுட்பவியல் நிறுவனம்(உத்தரவாத)லிமி. (SLIIT) | கணனி, வியாபாரம், பொறியியலில் பட்டம், டிப்ளோமா, சான்றிதழ் கற்கைக்கு இட்டுச்செல்லும் கற்நைெறிகளை வழங்கல் | துணைக்கம்பனி | 100% | 100% | 100% |
| நற் வெல்த் செக்குரிற்றீஸ்(பிரை.) லிமி. | முதன்மை வர்த்தகராக செயற்பாடுகளில் ஈடுபடுதல் | துணை துணைக்கம்பனி | 100% | 100% | 100% |
| SLIIT கணிப்பீடு(பிரை.) லிமி. | தகவற் தொழில்நுட்ப கற்கைகளை வழங்கல் | துணை துணைக்கம்பனி | 72.9% | 72.9% | 72.9% |
| இலங்கை தொழில்நுட்பவியல் இன்குபேற்றர்(பிரை.)லிமிற். | கம்பனி, தொழில்முயற்சி நிறுவனங்களை ஆரம்பிக்கும் பொருட்டு தகவற் தொழில்நுட்ப நிலையங்களை ஸ்தாபித்தலும் மேம்படுத்தலும் | துணை துணைக்கம்பனி | 63.9% | 63.9% | 63.9% |
| அபிவிருத்தி லொத்தர் சபை | நிதி சேகரிக்கும் பொருட்டு லொத்தர்களை நடத்துதல் | இணைந்த கம்பனி | 50% | 50% | 50% |

## 2. அடிப்படைத் தயார்ப்படுத்தல்

### 2.1 2012 ஜனவரி 01 ஆம் திகதியோ அல்லது அதற்குப் பின்னரோ ஆரம்பிக்கும் நிதிக் காலப்பகுதிக்கு செயல்வலுப்பெறும் SLAS (SLFRS மற்றும் LKAS) இன் அடிப்படைத் தயார்ப்படுத்தலும் கைக்கொள்ளலும்

2012 டிசம்பர் 31 ஆம் திகதிய மற்றும் அப்போது முடிவுற்ற ஆண்டில் உள்ளவாறு, நம்பிக்கை நிதியத்தின் திரட்டிய நிதிக்கூற்றுகள், வருமானக் கூற்று, ஏனைய விரிவான வருமானக் கூற்று, நிதிக்கொள்கைக் கூற்று, பணப்பாய்ச்சல் கூற்று, பங்கு மாற்றக் கூற்று, குழுவின் முக்கிய கணக்கீட்டுக் கொள்கை மற்றும் நிதிக்கூற்றுக் குறிப்புகள், அதாவது திரட்டிய நிதிக்கூற்றுகளும் நம்பிக்கை நிதியத்தின் தனியான நிதிக் கூற்றுகளும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வகுக்கப்பட்ட இலங்கை கணக்கீட்டுத் தரங்களிற்கு (SLFRS/LKAS) அமைவாகத் தயாரிக்கப்பட்டுள்ளன.

2011 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவுற்ற ஆண்டு அடங்கலாக சகல அதுவரையான காலப்பகுதிக்கும், நம்பிக்கை நிதியமானது, 2012 ஜனவரி 1 ஆம் திகதிக்கு முன்னர் செயல்வலுப்பெற்ற இலங்கை கணக்கீட்டுத் தரங்களிற்கு அமைய அதன் தனிப்பட்ட நிதிக் கூற்றுகளை மாத்திரம் தயாரித்தது. 2012 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவுற்ற ஆண்டிற்கான இந்நிதிக்கூற்றுகள், குழு நிதிக்கூற்றுகளின் முதலாம் தொகுப்பாக உள்ளதுடன் இது முதல் தடவையாக SLFRS இற்கிணங்க தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மாற்ற விளக்கத்திற்காக குறிப்பு 7 ஐப் பார்க்க.

### 2.2 அளவீட்டு அடிப்படை

நிதிகூற்றுகள் வேறுவயையில் கூறப்பட்டாலன்றி கூட்டு அடிப்படையிலும் வரலாற்றுச் செலவுச் சமவாயத்தின் கீழும் தயாரிக்கப்பட்டுள்ளன.

திரட்டிய நிதிக்கூற்றுகள் இலங்கை ரூபாவில் தரப்பட்டுள்ளன.

### 2.3 ஒப்பீட்டுத் தகவல்

கணக்கீட்டு கொள்கைகள், புதிய SLFRS இன் பிரயோகப் பெறுபேறாக மாற்றப்பட வேண்டியவை நீங்கலாக நிதிக்கூற்றின் LKAS 01 முன்வைப்பிற்கிணங்க முந்தைய நிதியாண்டின் நம்பிக்கை நிதியம், குழுமத்தினால் தொடர்ச்சியாகப் பிரயோகிக்கப்பட்டுள்ளது. மேலும், ஒப்பீட்டுத் தகவல் தற்போதைய முன்வைப்பிற்கிணங்க தேவைப்படுமிடத்து மீள வகைப்படுத்தப்பட்டுள்ளது.

### 2.4 முக்கிய மதிப்பீடுகள்

குழுவின் கணக்கீட்டுக் கொள்கைப் பிரயோகத்தில், முகாமையானது, திரட்டிய நிதிக்கூற்றுகளில் அங்கீகரிக்கப்பட்ட தொகை பற்றிய முக்கிய விளைவைக் கொண்ட பின்வரும் மதிப்பீடுகளைச் செய்துள்ளது:

**i)துணைக்கம்பனியாக இலங்கை தகவற் தொழில்நுட்பவியல் நிறுவனம்(SLIIT) இன் தீர்மானம்**

1999.05.21 ஆம் திகதிய மற்றும் 1999.09.02 ஆம்திகதிய (32 ஆம் 33 ஆம் கூட்டங்கள்) கூட்டங்களில், நம்பிக்கை நிதியப் பொறுப்பாளர் சபை, வளங்களை வழங்குவதால் உத்தரவாதத்தின் ஊடாக வரையறுக்கப்பட்ட கம்பனியாக SLIIT ஐ உருவாக்கத் தீர்மானித்துள்ளது. எனவே SLIIT பின்வரும் காரணிகளின் அடிப்படையில் LKAS 27 இன் நோக்கெல்லையில் நம்பிக்கை நிதியத்தின் துணை நிறுவனமாக உள்ளது.

- SLIIT சர்வதேச வர்த்தகம், சர்வதேச வாணிப மற்றும் உணவுத்துறை அமைச்சு மற்றும் கல்வி அமைச்சு ஆகிய இரு அமைச்சுகளின் கூட்டு முயற்சியாகத் தாபிக்கப்பட்டதுடன் இந்நிதியம் முதலீட்டிற்கு வளங்களை வழங்கலை அங்கீகரித்தது.
- SLIIT நிதியத்தின் பெரும்பான்மை அதன் ஆரம்பத்தில் நிதியத்தால் வழங்கப்பட்டது.
- SLIIT மீது கட்டுப்பாட்டை தீர்மானித்தலில் நிதியம் பின்வரும் காரணிகளைக் கருதுகிறது.;
- SLIIT இன் சபை மீதான பிரதிநிதித்துவம்
- SLIIT ஊடாக நிதிய நோக்கத்தின் எய்துகை (நன்மைகள்)
- SLIIT இற்கும் நம்பிக்கை நிதியத்திற்கும் இடையான உடன்படிக்கை, SLIIT இற்கு மாலபே காணியை வழங்கியது.

- இவ்வுடன்படிக்கையில் கூறப்பட்ட பல நிபந்தனைகள், SLIIT இற்காக முதலில் அங்கீகரிக்கப்பட்ட உறுப்புரைக்கு அமைவாக SLIIT இன் செயற்பாட்டு மற்றும் நிதியியல் கொள்கையில் தாக்கத்தை ஏற்படுத்தும் அதிகாரத்தை நிதியத்திற்கு வழங்குகிறது.

உடன்படிக்கையின் பகுதி 4

(a) SLIIT மஹபொல உயர்கல்விப் புலைமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நோக்கம், சமுகப் பொறுப்பு என்பவற்றிற்கெதிராக எவ்விதத்திலும் செயற்படாதிருத்தலை உறுதி செய்தல் வேண்டும் என்பதுடன் SLIIT மாலபே பல்கலைக்கழக நடவடிக்கை தொடர்பில் மஹபொல நம்பிக்கை நிதியம் பரிந்துரைகளை செய்யலாம். அத்துடன் SLIIT அத்தகைய பரிந்துரையைக் கருத்திற் கொள்ளலாம்.

(b) SLIIT இலுள்ள பாரிய சிவில் நிர்மாண வேலை MTF இன் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(g) SLIIT அதன் நீண்டகால அபிவிருத்தித் திட்டத்தை MTF இற்கு தகவல் மற்றும் உடன்பாடு பொருட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) SLIIT கல்விசார் கற்கைகளின் தரம் சகல நேரத்திலும் பேணப்படுகிறது என்பதையும் வளாக அதிகாரிகளுக்கெதிராக செய்யக்கூடிய ஏதேனும் சட்டப் பொறுப்பிற்கு MTF முன்காப்பீடு செய்திருத்தலை உறுதி செய்தல் வேண்டும்.

(n) மாலபே வளாகம் தொடர்பான விடயங்கள் பற்றிய உறுப்புரைகளுக்கு திருத்தம் ஏதேனும் செய்ய வேண்டியிருப்பின் SLIIT, அதன் பணிப்பாளர் சபை தொடர்பில் சகல MTF பிரதிநிதிகளினதும் சம்மதத்தை நாடி நிற்கும். அத்தகைய உடன்பாடு ஏற்படாத சந்தர்ப்பத்தில், MTF இன் உடன்பாடு தேவைப்படுத்தப்படும்.

**ii) இணைந்த கம்பனியில் முதலீடாக, அபிவிருத்தி லொத்தர் சபையில் (DLB) முதலிடும் தீர்மானம்**

நம்பிக்கை நிதியப் பொறுப்பாளர் சபையானது, பின்வரும் காரணிகளின் அடிப்படையில் LKAS 28 இன் நோக்கெல்லையினுள் நம்பிக்கை நிதியத்தின் துணை நிறுவனமாக அபிவிருத்தி லொத்தர் சபை உள்ளதைத் தீர்மானித்துள்ளது.

- நிதியம் அபிவி. லொத்தர் சபையின் 50% மான மூலதனத் தேவைப்பாட்டிற்குப் பங்களிப்புச் செய்துள்ளது.
- லொத்தர் சபை மீதான பிரதிநிதித்துவம்

## 3. முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் தொகுப்பு

நம்பிக்கை நிதியத்தாலும் அதன் குழுமத்தினாலும் அதன் நிதிக் கூற்றுகள் தயாரித்தலில் பிரயோகிக்கப்பட்ட முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் கீழே உள்ளடக்கப்பட்டுள்ளன. கீழே அமைக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள், வேறுவகையில் குறிப்பிடப்பட்டிருந்தாலன்றி, இந்நிதிக் கூற்றுகள் சமர்ப்பிக்கப்பட்ட சகல காலப்பகுதிகளுக்கும், SLFRS இன் மாற்ற நோக்கத்திற்கு 2011 ஜனவரி 01 ஆம் திகதிய SLFRS இன் நிதி நிலைமைக் கூற்றிலும் தொடர்ச்சியாகப் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

### 3.1 திரட்டிற்கான அடிப்படை

திரட்டிய நிதிக் கூற்றுகள், 2012 டிசம்பர் 31 ஆம் திகதி உள்ளவாறு, கம்பனியினதும் அதன் துணை நிறுவனத்தினதும் நிதிக்கூற்றுகளைக் கொண்டுள்ளது.

துணை நிறுவனங்கள் முற்றாக திரட்டப்பட்டுள்ளதுடன் திரட்டப்படலைத் தொடருகிறது. துணை நிறுவன நிதிக்கூற்றுகள் அதே அறிவிக்கப்பட்ட காலத்திற்கு தாய்க் கம்பனியாக கணக்கீட்டு கொள்கைகளை தொடர்ச்சியாக பயன்படுத்தி தயாரிக்கப்படுகின்றன. சுகல உள்ளகக் குழும நிலுவைகள், உள்ளகக் குழு கொடுக்கல் வாங்கலில் இருந்து தீர்க்கப்படாத இலாபங்கள், நட்டங்கள், பங்கிலாபங்கள் என்பன முற்றாக நீக்கப்பட்டுள்ளன.

### 3.2 இணைந்த கம்பனியில் முதலீடு

இணைந்த கம்பனியில் குழும முதலீடு, பங்கு முறையைப் பயன்படுத்தி கணக்கிடப்பட்டுள்ளது.

பங்கு முறையின் கீழ், தொடர்பானவற்றிலுள்ள முதலீடு, இணை நிறுவன நிகரச் சொத்துகளின் குழுமப் பங்கிலுள்ள கையகப்படுத்தலின் பின்னரான மாற்றங்களுடனான செலவிலுள்ள நிதி நிலைமைக் கூற்றின் மீது மேற்கொள்ளப்படுகின்றன.

வருமானக் கூற்று, இணை நிறுவன செயற்பாட்டுப் பெறுபேற்றுப் பங்களிப்பை பிரதிபலிக்கிறது. இணை நிறுவனப் பங்கில் நேரடியாக மாற்றம் ஒன்று உணரப்படுமிடத்து, குழு ஏதேனும் மாற்றங்களின் பங்களிப்பை அங்கீகரிப்பதுடன் ஏற்புடையவாறு உறுதிப் பங்கிலுள்ள மாற்றக் கூற்றில் இது வெளிப்படுத்தப்படுகிறது.

### 3.3 பொறி மற்றும் உபகரணச் சொத்து

பொறி மற்றும் உபகரணச் சொத்து, கூட்டுத் தேய்மானம் மற்றும் கூட்டு வலுக்குறைவு இழப்புகள் ஏதேனும் இருப்பின், அவற்றின் நிகரச் செலவுடன் அறிவிக்கப்படுகிறது.

அத்தகைய செலவுகள், அங்கீகரிப்பு வரைமுறை ஈடு செய்யப்படின், பொறி மற்றும் உபகரணச் சொத்தின் உதிரிப்பாகத்தை மாற்றும் செலவையும் நீண்ட கால நிர்மாண வேலைத்திட்டங்களுக்கான கடன் செலவுகளையும் உள்ளடக்குகிறது. பொறி மற்றும் உபகரணச் சொத்துகளின் முக்கிய பகுதிகள் இடைவேளைகளில் மாற்றப்படுமிடத்து, குழு, மாற்றப்பட்ட பகுதியை அங்கீகரித்தலை விடுத்து பயனுறுதிக் காலம், தேய்மானத்துடன் கூடிய புதிய பகுதியை அங்கீகரிக்கிறது. அவ்வாறே பெரிய பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்படுமிடத்து, அதன் செலவு, அங்கீகரிப்பு வரைமுறை திருப்தியுறின், பொறி மற்றும் உபகரணத்திற்கான மாற்றீடு ஒன்றைக் கொண்டு செல்வதற்கான செலவில் அங்கீகரிக்கப்படுகிறது. ஏனைய சகல திருத்த, பராமரிப்புச் செலவுகள், உறப்பட்டவாறு வருமானக் கூற்றில் ஏற்கப்படுகிறது.

பொறி மற்றும் உபகரணச் சொத்தின் விடயம் ஒன்று, ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் முக்கிய பகுதி, அதன் அகற்றலின் மீது அல்லது எதிர்கால பொருளாதார நன்மையின்றி பாவனையில் இருந்து அகற்றப்பட்டதன் மேல் அது அங்கீகாரத்திலிருந்து விலக்கப்படுகிறது. சொத்தின் அங்கீகார விலக்களிப்பு மீது எழும் ஏதேனும் இலாபம் அல்லது நட்டம்( நிகர அகற்றல் செயன்முறைக்கும் சொத்தின் காவு தொகைக்கும் இடையிலான வேறுபாடாக கணிக்கப்படுகிறது), அச்சொத்து அங்கீகாரத்திலிருந்து விலக்கப்படுகிறவிடத்து வருமானக் கூற்றில் சேர்க்கப்படும்.

### 3.3.1 தேய்மானம்

சகல பொறி மற்றும் உபகரணச் சொத்துகளின் மதிப்பிடப்பட்ட பயனுறுதிக் காலத்தின் மீது நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானம் கணிப்பிடப்படுகிறது.
குழுவிற்கு நடைமுறை, ஒப்பீட்டு வருடங்களிற்கான மதிப்பிடப்பட்ட பயனுறுதிக்காலம் பின்வருமாறு;

| | |
|---|---|
| உபகரணம் | 4 - 5 வருடங்கள் |
| மோட்டார் வாகனம் | 4 - 5 வருடங்கள் |
| கணனி, கணனி உபகரணம், மென்பொருள் | 3 - 4 வருடங்கள் |
| தளபாடமும் பொருத்துகையும் | 2 - 5 வருடங்கள் |
| கட்டடம் | 10 - 20 வருடங்கள் |
| புத்தகங்களும் பட்டமளிப்பு சீருடைகளும் | 3 - 5 வருடங்கள |

### 3.3.2 முதலீட்டுச் சொத்து

முதலீட்டுச் சொத்து ஆரம்பத்தில் கொடுக்கல் வாங்கல் சொத்து அடங்கலான செலவில் அளவிடப்படும்.

முதலீட்டுச் சொத்து அதன் பாவனையிலிருந்து நிரந்தரமாக விலக்கப்படுமிடத்து அல்லது எதிர்கால பொருளாதார நன்மையற்றதென பாவனையில் இருந்து அகற்றப்படுமிடத்து, அது அங்கீகாரத்திலிருந்து விலக்கப்படுகிறது. நிகர அகற்றல் செயன்முறைக்கும் சொத்தின் காவு தொகைக்கும் இடையிலான வேறுபாடு, அங்கீகாரத்திலிருந்து விலக்கப்படும் காலத்திலுள்ள வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படும்.

### 3.3.3 நிதியல்லாச் சொத்துகளின் வலுக்குறைவடைதல்

குழுவானது, ஒவ்வொரு அறிவிப்புத் திகதியின் போதும் சொத்து வலுக்குறைவடைதற்கான குறிப்பீடு ஏதும் உள்ளதா என மதிப்பீடு செய்கிறது. அத்தகை ஏதேனும் குறிப்பு இருப்பின், அல்லது சொத்து ஒன்றிற்கு வருடாந்த வலுக்குறைவுப் பரிசோதனை தேவைப்படுமாயின், சொத்தின் மீளப்பெறத் தக்க தொகையை குழு மதிப்பிடுகிறது. சொத்து ஒன்றின் மீளப்பெறத்தக்க தொகை, ஏனைய சொத்துகள், குழச் சொத்துகளில் இருந்தானவற்றிலும் சுயாதீனமான பணப்பாய்ச்சலை அச்சொத்து உற்பத்தி செய்தாலன்றி, விற்பனைச் செலவு மற்றும் பயன்பாட்டுப் பெறுமதி நீங்கலாக சொத்தொன்றின் நியாயப் பெறுமதியிலும் அல்லது பண உற்பத்தி அலகு ஒன்றின் நியாயப் பெறுமதியிலும் உயர்வானதுடன் தனிப்பட்ட சொத்தின் பொருட்டு தீர்மானிக்கப்படும். சொத்தின் காவு தொகை அல்லது பண உற்பத்தி அலகு அதன் அறவிடத்தக்க தொகையிலும் அதிகரிக்குமிடத்து, அச்சொத்து வலுக்குறைந்ததாக கருதப்பட்டு அதன் அறவிடத்தக்க தொகையிலும் பெறுமதி குறைக்கப்படல் வேண்டும். பயன்பாட்டு பெறுமதி மதிப்பிடுகையில், மதிப்பிடப்பட்ட எதிர்காலப் பணப்பாய்ச்சல்கள், பணத்தின் காலப் பெறுமதியினதும் அச்சொத்திற்கான குறிப்பிட்ட இடர்களினதும் நடைமுறை சந்தை மதிப்பீடுகளைப் பிரதிபலிக்கும் முன்-வரிக் கழிவு வீதத்தைப் பயன்படுத்தி தற்போதைய பெறுமதிக்கு தள்ளுபடியிடப்படுகின்றன. விற்பனை செலவு நீங்கலாக நியாயப் பெறுமதி தீர்மானித்தலில், கிடைக்குமாயின் அண்மைய சந்தைக் கொடுக்கல் வாங்கல்கள் கணக்கில் எடுக்கப்படுகின்றன. அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் இனங்காணப்படாவிடின் ஒதுக்கீட்டுப் பெறுமதி மாதிரி பயன்படுத்தப்படும்.

### 3.3.4 வெளிநாட்டு நாணயங்கள்

#### a) செயற்படு மற்றும் முன்வைப்பு நாணயம்

குழுவின் நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட்ட விடயம் நிறுவனம் இயங்குகின்ற முதன்மைப் பொருளாதாரச் சூழலின் நாணயத்தை (செயற்படு நாணயம்) பயன்படுத்தி அளவிடப்படுகின்றன. திரட்டிய நிதிக்கூற்றுகள், குழு மற்றும் கம்பனியின் செயற்படு மற்றும் முன்வைப்பு நாணயமாகவுள்ள இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்படுகின்றன.

#### b) கொடுக்கல் வாங்கல்களும் நிலுவைகளும்

வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்கள், கொடுக்கல் வாங்கல் திகதியில் நிலவும் நாணயமாற்று வீதத்தை பயன்படுத்தி செயற்பாட்டு நாணயத்திற்கு மாற்றப்படுகின்றன. வெளிநாட்டு நாணயத்தில் குறிப்பிடப்பட்ட பணச் சொத்துகள், பொறுப்புகளின் நாணயமாற்ற வீதத்தின் வருட இறுதிக் கொடுக்கல் வாங்கலில் இருந்தும் அத்தகைய கொடுக்கல் வாங்கலின் தீர்வில் இருந்தும் பெறப்படும் வெளிநாட்டு நாணய மாற்ற பெறுகைகளும் இழப்புகளும் விரிவான வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகிறது. பணச் சொத்துகள், பொறுப்புகளின் நிலுவைகள் வருட இறுதி நாணய மாற்ற வீதத்தில் மாற்றப்படுகின்றன.

### 3.3.5 வரியிடல்

#### 3.3.5.1 நடைமுறை வரியிடல்

நடைமுறை மற்றும் முந்தைய காலத்திற்கான நடைமுறை வருமான வரிச் சொத்துகளும் பொறுப்புகளும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய அல்லது அவரால் அறவிட எதிர்பார்க்கப்படும் தொகையில் அளவீடு செய்யப்படுகின்றன. அத்தொகையை கணிக்கப் பயன்படுத்திய வரி வீதங்களும் வரிச் சட்டங்களும் அறிவிக்கப்பட்ட திகதியன்று சட்டமாக்கப்பட்டவையாகும்.

குழுவின் வருமான வரிக்கான ஏற்பாட்டு அடிப்படை வருமாறு;

**a) மஹபொல நம்பிக்கைப்பொறுப்பு நிதியம்**

இந்நிதியமானது, மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தின் 1981 ஆம் ஆண்டின் 66 ஆம் இலக்கச் சட்டத்தின் பிரகாரம் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

**b) இலங்கை தகவற் தொழில்நுட்பவியல் நிறுவனம்(உத்தரவாத) லிமி.**

இது முதலீட்டு சபையால் தீர்மானிக்கக் கூடியவாறான மதிப்பீட்டு வருடத்திலிருந்து ஐந்து வருட காலத்திற்கு முத. சுபை உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட வியாபார நடவடிக்கை பொருட்டு வரி விடுமுறை ஒன்றை அனுபவிக்கும் ஓர் முதலீட்டு சபை அங்கீகாரம் பெற்ற நிறுவனமாகும்.

இந்நோக்கத்திற்காக மதிப்பீட்டு வருடமானது, சபையால் வழங்கப்பட்ட சான்றிதழ் (2002 செப்ரெம்பர் 10 ஆம் திகதி) ஒன்றில் குறிப்பிட்டவாறு அதன் முதல் வர்த்தக நடவடிக்கைகள் செயல்வலுப் பெற்ற திகதியில் இருந்து கணக்கிடப்பட்டது.

மேற்படி விலக்களிப்புக் காலம் 2007 செப்ரெம்பர் 25 ஆம் திகதி முத. சபையுடன் செய்யப்பட்ட குறைநிரப்பு உடன்படிக்கையால் 2014 ஜனவரி 10 ஆம் திகதி (மேலும் 7 வருடங்கள்) வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஏழு வருட வரி விலக்களிப்புக் காலம் முடிவடைந்த பின்னர், 15% வருமான வரி மேற்படி குறைநிரப்பு உடன்படிக்கையின் கீழ் ஒவ்வொரு தொடர்ந்துறும் மதிப்பீட்டு வருடத்திற்கும் செலுத்தத்தக்கதாதல் வேண்டும்.

**c) National Wealth Corporation (Private) Ltd.**

வருமான வரி ஏற்பாடு, 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தினதும் அதன் மேலான திருத்தங்களினதும் ஏற்பாடுகளுக்கிணங்க கணிக்கப்பட்டு நிதிக்கூற்றில் அறிவிக்கப்பட்டவாறு வருமான, செலவின கூறுகளின் அடிப்படையில் அமைந்துள்ளது.

### 3.3.5.2 பிற்போடப்பட்ட வரி

பிற்போடப்பட்ட வரி, சொத்துகளின் வரி அடிப்படைக்கும் நிதி அறிவிப்பு நோக்கத்திற்கான காவு தொகைக்கும் இடையிலான தற்காலிக வேறுபாட்டின் மீது பொறுப்பு முறையைப் பயன்படுத்தி வழங்கப்படுகிறது.

பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புகள், சகல வரியிடத்தக்க தற்காலிக வேறுபாடுகளுக்கும் அங்கீகரிக்கப்படுகின்றன.

பிற்போடப்பட்ட வரிச் சொத்துகளானவை, கழிக்கத்தக்க தற்காலிக வேறுபாடுகள், பயன்படுத்தாத வரி வரவுகள், வரி இழப்புகள் என்பவற்றிற்கு எதிராக வரியிடத்தக்க இலாபம் கிடைக்கக் கூடிய சந்தர்ப்பத்தில் சகல கழிக்கத்தக்க தற்காலிக வேறுபாடுகள், பயன்படுத்தாத வரி வரவுகள், வரி இழப்புகள் என்பவற்றின் பொருட்டு அங்கீகரிக்கப்படுகின்றன.

### 3.3.6 பணமும் பணத்திற்கு ஈடானவையும்

பணமும் பணத்திற்கு ஈடானவையும், கையிலுள்ள, வங்கியிலுள்ள பணம், கையகப்படுத்தல் திகதியிலிருந்து மூன்று மாதம் அல்லது அதிலும் குறைவான ஆரம்ப முதிர்வுடன் கூடிய ஏனைய குறுகிய கால திரவ முதலீடுகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன. வங்கி மேலதிகப்பற்றுகள் ஐந்தொகைத்தாளின் மீதான நடைமுறைப் பொறுப்பின் கீழ் காட்டப்பட்டுள்ளன.

## 4 நிதியியற் கருவிகள் - ஆரம்ப ஒழுங்குபடுத்தலும் தொடர்ந்துறும் அளவீடும்
## 4.1 நிதிச் சொத்துகள்

### 4.1.1 ஆரம்ப ஒழுங்குபடுத்தலும் அளவீடும்

எல்.கே.ஏ.எஸ் 39 இன் நோக்கெல்லையின் கீழ் நிதிச் சொத்துக்கள், இலாபம் அல்லது நட்டம், கடன்கள் மற்றும் பெறுகைகளினூடாக நியாயமான பெறுமதியில் நிதிச் சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டு முதிர்ச்சி முதலீடுகாளாக வைக்கப்பட்டுள்ளதுடன், பொருத்தமானதானநிதிச் சொத்துக்கள் விற்பனைக்கு கிடைக்கப்பெறுவதுடன், அதன் ஆரம்ப ஒழுங்கிலேயே வகைப்பாட்டினைத் தீர்மானிக்கின்றது.

அனைத்து நிதிசார் சொத்துக்களும், இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியில் அல்லாது முதலீடுகள் தொடர்பில் ஆரம்பத்தில் நியாயமான பெறுமதி அத்துடன் கொடுக்கல்வாங்கல் செலவுகளைச் சேர்த்து ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

சொத்துக்கள், நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களின் 23 ஆம் இலக்கக் குறிப்பின் கீழ் வெளிப்படுத்தப்படுகின்றன.

### 4.1.2 *தொடர் அளவீடு*

நிதிச் சொத்துக்களின் தொடர் அளவீடு என்பது பின்வருமாறு அவற்றின் வகைப்படுத்தலில் தங்கியிருக்கின்றது

#### 4.1.2.1 *இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியில் நிதிச் சொத்துக்கள்*

இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியில் நிதிச் சொத்துக்கள், வர்த்தகத்திற்காக வைக்கப்பட்ட நிதிச் சொத்துக்கள் மற்றும் இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியில் ஆரம்ப ஒழுங்குபடுத்தலின் பேரில் குறித்தொதுக்கப்பட்ட நிதிச் சொத்துக்கள் என்பவற்றை உள்ளடக்குகின்றது. நிதிச் சொத்துக்கள், விற்பனை நோக்கம் அல்லது அண்மையில் கொள்வனவு செய்தல் என்பதற்காக பெறப்பட்டிருந்தால், விற்பனைக்காக வைக்கப்பட்டவையாக வகைப்படுத்தப் படுகின்றன.

இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியிலான நிதிச் சொத்துக்கள், வருமானக் கூற்றில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள நியாயமான பெறுமதியில் மாற்றங்களுடனான நியாயமான பெறுமதியில் நிதிக்கூற்றுக்களில் கொண்டுசெல்லப்படுகின்றன.

#### 4.1.2.2 *கடன்களும் பெறுகைகளும்*

கடன்களும் பெறுகைகளும், செயற்படுகின்ற சந்தையில் குறிப்பிடப்படாத நிலையான அல்லது தீர்மானிக்கக்கூடிய கொடுப்பனவுகளுடன் கூடிய சார்ந்திருக்காத நிதிச் சொத்துக்களாகும். ஆரம்ப அளவிட்டின் பின்னர், அத்தகைய நிதிச் சொத்துக்கள், பயனுள்ள வட்டி வீத முறையினைப் பயன்படுத்தி கடன்தீர்ப்புச் செலவில், குறைந்த தடைகளுடன் தொடர்ச்சியாக அளவிடப்படுகின்றன. கடன்தீர்ப்புச் செலவு, பயனுள்ள வட்டி வீதத்தின் இணைந்த பகுதியான பெறுகைககளும் கட்டணங்களும் மற்றும் செலவு என்பவற்றின் மீதான ஏதேனும் கழிவு அல்லது தவணைக் கட்டணத்திற்கு எடுத்துச்செல்வதன் மூலம் கணிக்கப்படுகின்றது. பயனுள்ள வட்டி வீதக் குறைப்பு வருமானக் கூற்றில் நிதிச் செலவில் கணிக்கப்படுகின்றது. துடைகளினால் வருகின்ற நட்டங்கள் வருமானக்கூற்றில் ஒழுங்கமைக்கப்படுகின்றன.

இலாபங்கள் மற்றும் நட்டங்கள், பயனுள்ள வட்டி வீத முறை கடன்தீர்ப்பு செயல்முறையினூடாக பொறுப்புகள் மீள ஒழுங்குபடுத்தப்படுகின்ற போது வருமானக் கூற்றில் ஒழுங்குபடுத்தப்படுகின்றன.

#### 4.1.2.3*முதிர்ச்சி முதலீட்டுக்காக வைக்கப்பட்டவை*

குழுமத்தின் சாதகமான ஆர்வம் மற்றும் முதிர்ச்சிக்காக வைக்கக்கூடிய இயலுமை உள்ளவிடத்து, நிலையான அல்லது தீர்மானிக்கக்கூடிய கொடுப்பனவுகள் மற்றும் நிலையான முதிர்ச்சிகளுடன் சார்ந்திராத நிதிச் சொத்துக்கள், முதிர்ச்சிக்காக வைக்கப்படுள்ளவையாக வகைப்படுத்தப் பட்டுள்ளன. ஆரம்ப அளவீட்டின் பின்னர், குறைந்த பாதிப்புடனான பயனுள்ள வட்டி வீத முறையைப் பயன்படுத்தி கடன் தீத்தல் செலவில் அளவிடப்படுகின்றன. கடன்தீர்ப்புச் செலவு, பயனுள்ள வட்டி வீதத்தின் இணைந்த பகுதியான பெறுகைககளும் கட்டணங்களும் மற்றும் செலவு என்பவற்றின் மீதான ஏதேனும் கழிவு அல்லது தவணைக் கட்டணத்திற்கு எடுத்துச்செல்வதன் மூலம் கணிக்கப்படுகின்றது. பயனுள்ள வட்டி வீதக் குறைப்பு வருமானக் கூற்றில் நிதிச் செலவில் கணிக்கப்படுகின்றது. துடைகளினால் வருகின்ற நட்டங்கள் வருமானக்கூற்றில் ஒழுங்கமைக் கப்படுகின்றன.

**4.1.2.4*விற்பனை நிதி முதலீடுகளுக்காகக் கிடைக்கப்பெறுபவை***

விற்பனை நிதி முதலீடுகளுக்காகக் கிடைக்கப்பெறுபவை, நிகரச் சொத்து மற்றும் கடன் பிணை களை உள்ளடக்குகின்றது. நிகரச் சொத்து முதலீடுகள், வர்த்தகத்திற்காக வகைப்படுத்தாதவை அல்லது இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியில் குறித்தொதுக்கப் பட்டவையாக அல்லாது விற்பனைக்கு உள்ளவையாக வகைப்படுத்தப்படுகின்றன. இந்த வகையில் கடன் பிணைகள் குறிப்பிடப்படாத காலப்பகுதிக்கு வைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள மற்றும் திரவத் தன்மைக்கான தேவைக்காக விற்கப்படக்கூடிய, அல்லது சந்தை நிலைமைக்கு மாறக் கூடியவையாகும்.

ஆரம்ப அளவீட்டின் பின்னர், விற்பனை நிதி முதலீடுகளுக்காகக் கிடைக்கப்பெறுபவை, முதலீடு மீள ஒழுங்குபடுத்தப்படும் வரை விற்பனை நிதி முதலீடுகளுக்காகக் கிடைக்கப்பெறுபவற்றில் ஏனைய விரிவான வரமானமாக இலாபம் அல்லது நட்டம் இனங்காணப்படுதல் உணரப்படாது நியாயமான பெறுமதியில்,ஏனைய தொழிற்பாட்டு வருமானத்தில் இனங்காணப்பட்ட திரட்டிய இலாபம் அல்லது நிதிச் செலவில் வருமானக் கூற்றுக்கு மீள வகைப்படுத்தப்பட்ட, திரண்ட நட்டத்தின் போது பாதிக்கப்படும் என்று தீர்மானிக்கப்பட்ட மற்றும் விற்பனை நிதி முதலீடாகக் கிடைக்கப்பெறபவையிலிருந்து நீக்கப்பட்ட நேரத்தில் கணசமானளவு அளவிடப்படுகின்றன.

**4.1.3 மீள ஒழுங்குபடுத்தல்**

நிதிச் சொத்தொன்று (அல்லது நிதிச் சொத்தொன்றின் பகுதியாக அல்லது ஒத்த நிதிச் சொத்துக்களின் குழாத்தின் பகுதியாக பிரயோகிக்கப்படுகின்றவிடத்து) பின்வரும் சந்தர்ப்பங்களின் போது மீள ஒழுங்கமைக்கப்படுகின்றன.

i) காலாவதியான சொத்திலிருந்து பண ஒட்டங்களைப் பெறுவதற்கான உரிமை

ii) சொத்திலிருந்து பண ஓட்டங்களைப் பெறுவதற்கான அதன் உரிமையை குழாம் கொண்டிருத்தல்.

- குழுமம் சொத்தின் அனைத்து ஆபத்துக்கள் மற்றும் இடர்களை கணிசமானளவு இடமாற்றியுள்ளன அல்லது

- குழுமம் சொத்தின் அனைத்து ஆபத்துக்கள் மற்றும் இடர்களை கணிசமானளவு இடமாற்றவுமில்லலை தடுத்து வைக்கவுமில்லை ஆனால் சொத்தின் கட்டுப்பாடிற்கு மாற்றியுள்ளது.

### 4.1.4 நிதிச் சொத்துக்களின் தடங்கல்கள்

குழுமம், நிதிச் சொத்தொன்று அல்லது நிதிச் சொத்துக்கள் குழாமொன்று பாதிக்கப்பட்டதற்கான ஏதேனும் பிரதான சான்றுள்ளதா என்று மதிப்பிடுகின்றது. நிதிச் சொத்தொன்று அல்லது நிதிச்சொத்தின் குழாமொன்று பாதிக்கப்படுமென்றால், சொத்தின் அரம்ப ஒழுங்குபடுத்தலின் பின்னர் ஏற்பட்ட ஒன்றோ அல்லது பல நிகழ்வுகளின் விளைவாக மற்றும் நம்பிக்கையாக மதிப்பிடக்கூடிய நிதிச் சொத்தின் அல்லது சொத்துக்களின் குழாத்தின் மதிப்பிடப்பட்ட எதிர்கால பண ஓட்டங்கள் மீது தாக்கத்தை நட்டத்தை ஏற்படுத்துகின்ற நிகழ்வினைக் கொண்டிருத்தால் தடையின் முக்கிய சான்று இருக்கின்றது.

தடங்கலின் சான்றானது, கடன்படுநர்கள் அல்லது கடன்படுநர்களின் குழுாத்தின் சுட்டிகள், குறிப்பிடத்தக்க நிதி நெருக்கடிகளை அனுபவித்தல், வட்டியில் அல்லது கொடுப்பனவுத் தத்துவங்களில் குறை அல்லது தவறு, வங்குரோத்து நிலையை அடைவதற்கான சாத்தியம் அல்லது ஏனைய நிதிசார் மீள் ஒழுங்கமைப்பு மற்றும் நிலுவைகளில் மாற்றங்கள் அல்லது செலுத்தப்படாதவற்றுடன் இணங்குகின்ற பொருளாதார நிபந்தனைகள் போன்ற அத்தகைய
மதிப்பிடப்பட்ட எதிர்கால பண ஓட்டங்களில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியுள்ளதாக கவனத்திற்குரிய தரவு என்பவற்றை உஉள்ளடக்குகின்றது.

## 5. பொறுப்புகளும் ஏற்பாடுகளும்

### 5.1 நிதிப் பொறுப்புகள்

### 5.1.1 ஆரம்ப ஒழுங்குபடுத்தல்களும் அளவீடும்

எல்.கே.ஏ.எஸ் 39 இன் நோக்கெல்லையின் கீழ் நிதிச் சொத்துக்கள், பொருத்தமானதான பயனுறுதியுடைய எல்லையில் குழுமங்களின் நிதிப் பொறுப்புகள்,இலாபம் அல்லது நட்டங்கள் மற்றும் கடன்பெறுகைகள், ஏனைய நிதிப் பொறுப்புகள் அல்லது பொருத்தமான பயனுள்ள எல்லைகளில் எல்லைப்படுத்தல் ஆவணங்களாக குறித்தொதுக்கப்பட்டு சார்ந்திருப்பவையாக வகைப்படுத்தப்படுகின்றன. குழுமமானது, அதனது நிதிப் பொறுப்புகள் மற்றும் ஆரம்ப ஒழுங்குபடுத்தல்களின் வகைப்பாட்டினைத் தீர்மானிக்கின்றது. அனைத்து நிதிசார் சொத்துக்களும், இலாபம்

அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியில் ஒழுங்குபடுத்தப்படுகின்றன. கடன்கள், கடன் பெறுகைகள் மற்றும் ஏனைய நிதிப் பொறுப்புகள் கடன்தீர்ப்புச் செலவில் கொண்டுசெல்லப்படுகின்றன. இது நேரடியாக கொடுக்கல் வாங்கல் செலவுகளையும் உள்ளடக்குகின்றது.

### 5.1.2 தொடர் அளவீடு

நிதிச் சொத்துக்களின் தொடர் அளவிடு என்பது பின்வருமாறு அவற்றின் வகைப்படுத்தலில் தங்கியிருக்கின்றது

#### 5.1.2.1ஏனைய நிதிப் பொறுப்புகள்

ஆரம்ப ஒழுங்குபடுத்தலின் பின்னர், வட்டியைக் கொண்டிருக்கின்ற கடன்கள் மற்றும் கடன் பெறுகைகள், பயனுள்ள வட்டி வீத முறையினைப் பயன்படுத்தி கடன்தீர்ப்புச் செலவில் தொடர்ச்சியாக அளவிடப்படுகின்றன. இலாபங்கள் மற்றும் நட்டங்கள், பயனுள்ள வட்டி வீத முறை கடன்தீர்ப்பு செயல்முறையினூடாக பொறுப்புகள் மீள ஒழுங்குபடுத்தப்படுகின்ற போது வருமானக் கூற்றில் ஒழுங்குபடுத்தப்படுகின்றன.

கடன்தீர்ப்புச் செலவு, பயனுள்ள வட்டி வீதத்தின் இணைந்த பகுதியான பெறுகைககளும் கட்டணங்களும் மற்றும் செலவு என்பவற்றின் மீதான ஏதேனும் கழிவு அல்லது தவணைக் கட்டணத்திற்கு எடுத்துச்செல்வதன் மூலம் கணிக்கப்படுகின்றது. பயனுள்ள வட்டி வீதக் குறைப்பு வருமானக் கூற்றில் நிதிச் செலவில் கணிக்கப்படுகின்றது.

## 5.2 ஓய்வூதிய நலன் கடப்பாடுகள்

### 5.2.1 தீர்மானிக்கப்பட்ட நன்மைகள் திட்டம் – ஓய்வூதிய பணிக்கொடை

உருவாக்கப்பட்டுள்ள அலகு வரவு முறைமையினைப் பயன்படுத்தி தீர்மானிக்கப்பட்ட நன்மைத் திட்டமொன்றான ஓய்வூதிய நன்மைப் பணிக்கொடையின் தற்போதைய பெறுமதியை குழுமம் மதிப்பிடுகின்றது. உண்மையான ஊகங்களின் சீராக்கங்கள் மற்றும் மாற்றங்களிலிருந்து எழுகின்ற இலாபங்களும் நட்டங்களும் ஏனைய விரிவான

வரமானங்களினூடாக அறவிடப்படுகின்றது அல்லது நிகரச் சொத்திற்கு வரவு வைக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும், 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டத்தின் கொடுப்பனவின்படி, இந்த பொறுப்பு 5 வருட தொடர்ச்சியான சேவையினைப் பூர்த்தி செய்வதன் பேரில் மட்டுமே ஏற்படுகின்றது.

### 5.2.2 வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள் - ஊழியர் சேமலாப நிதியமும் ஊழியர் நம்பிக்கை நிதியமும்

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான குழுமப் பங்களிப்பு, இயைபுடைய ஒழுங்குவிதியுடன் உரிய பங்களிப்பினூடாக உள்ளடக்கப்படுகிறது. ஊழியரை உள்ளடக்கும் திட்டத்திற்கான பங்களிப்புக் கடப்பாடுகள், வருமானக் கூற்றிலுள்ள செலவாக அங்கீகரிக்கப்படுகிறது.

**ஊழியர் சேமலாப நிதியம்**
குழுமமும் அதன் ஊழியர்களும், ஊழியர் சேமலாப நிதியத்திற்கு முறையே மொத்த சம்பளத்தின் 12%, 8% இனைப் பங்களிப்பு செய்கிறது.

**ஊழியர் நம்பிக்கை நிதியம்**
குழுமம் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு மொத்த சம்பளத்தின் 3% ஐப் பங்களிப்பு செய்கிறது.

## 6. வருமானமும் செலவினங்களும்

### 6.1 வருமான ஒழுங்குபடுத்தல்

வருமானமானது, கொடுப்பனவு செய்யப்படுதலைக் கருதாது அளவிடப்படக்கூடிய வருமானம், இணைவான செலவுகள் மற்றும் குழுமத்திற்கு பாய்ச்சத்தக்க பொருளாதார நன்மைகள் என்பவற்றின் அடிப்படையில் ஒழுங்குபடுத்தப்படுகின்றன. வருமானம், கொடுப்பனவின் வரையறுக்கப்பட்ட நியதிகளின் அடிப்படையில் பெற்றுக்கொண்ட, பெறத்தக்கனவற்றின் நியாயப் பெறுமதியில் அளவிடப்படுகின்றன.

**வட்டி வருமானம்**

விற்பனைக்கு கிடைக்கத்தக்கதாக வகைப்படுத்தப்பட்ட நிதிச் சொத்துகளின் வட்டி மற்றும் கடன் தீர் செலவில் அளவிடப்படும் சகல நிதியியல் கருவிகளுக்கும், வட்டி வருமானம் அல்லது செலவினமானது, நிதிச் சொத்து அல்லது பொறுப்பின் நிகர காவு தொகைக்கு ஏற்புடையவிடத்து நிதியியற் கருவியின் பயனுறுதிக் காலம் அல்லது அதனிலும் குறைந்த காலத்தின் ஊடாக மதிப்பிடப்பட்ட எதிர்கால பணக் கொடுப்பனவு அல்லது பெறுகையில் சரியான கழிவு வீதமான வினைத்திறன் மிக்க வட்டி வீதத்தைப் பயன்படுத்திப் பதிவு செய்யப்படுகிறது. வட்டி வருமானம் வருமானக் கூற்றிலுள்ள நிதி வருமானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**சேவை வழங்குதல்**

சேவை வழங்கலில் இருந்தான வருமானம், சேவை வழங்கப்படும் கணக்கீட்டுக் காலப்பகுதியில் அங்கீகரிக்கப்படும்.

**ஏனைய வருமானம்**

ஏனைய வருமானம் கூட்டு அடிப்படையில் அங்கீகரிக்கப்படும்.

## 6.2 செலவினங்கள்

வர்த்தகத்தை நடத்துவதால் உறப்பட்ட சகல செலவினங்களும் வருட இலாபத்தில் வரும் வருமானத்திலிருந்து அறவிடப்பட்டன. திருத்தங்களும் புதுப்பித்தல்களும் செலவினம் உறப்பட்ட வருடத்தின் இலாபம் அல்லது நட்டத்தில் அறவிடப்பட்டன.

## 7. SLAS (SLFRS/LKAS) ஐ முதற் தடவையாகக் கைக்கொள்ளல்

2012 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவுற்ற ஆண்டிற்கான இந்நிதிக்கூற்றுகள், SLFRS/LKAS ஐ உள்ளடக்கிய SLAS இற்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட குழும நிதிக்கூற்றுகளின் முதல் தொகுதியாகும். 2011 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவுற்ற ஆண்டினை உள்ளடக்கி அது வரையான காலப்பகுதிக்கு, நம்பிக்கை நிதியமானது, முன்னைய கணக்கீட்டுத் தரங்களிற்கு அமைவாக அதன் தனிப்பட்ட நிதிக்கூற்றுகளை மாத்திரம் தயாரித்துள்ளது.

அதற்கிணங்க, நிதியம், கணக்கீட்டுக் கொள்கையில் விபரித்தவாறு 2011 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவுற்ற வருட இறுதியில் உள்ள ஒப்பீட்டுக்காலத் தரவுடன் இணைந்து, 2012 ஜனவரி 01 ஆம் திகதி அல்லது அதன் பின்னர் ஆரம்பிக்கும் காலப்பகுதிக்கு ஏற்புடைய SLFRS/LKAS ஐ உள்ளடக்கிய SLAS உடன் இணக்கமுறுகின்ற குழும நிதிக் கூற்றுகளைத் தயாரித்துள்ளது.

இந்நிதிக் கூற்றுகளைத் தயாரித்தலில், நிதி நிலைமையின் குழும ஆரம்பக் கூற்று, SLFRS/LKAS ஐ உள்ளடக்கிய SLAS இற்கான குழுமத்தின் மாற்றத் திகதியான 2011 ஜனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்டது. இக்குறிப்பானது, 2011 ஜனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு அதன் SLAS நிதி நிலைக் கூற்றினதும் 2011 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவுற்ற ஆண்டினை உள்ளடக்கியவாறு முன்னர் பிரசுரிக்கப்பட்ட SLAS நிதி நிலைக் கூற்றினதும் மீள்நிலைப்படுத்தலில் குழுமத்தினால் செய்யப்பட்ட பிரதான சீராக்கல்களை விளக்குகிறது.

**மஹாபொல உயர் கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் வரைவு**
**2011 சனவரி 01 இலுள்ளவாறு நிகரச் சொத்தின் இணக்கம் - நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்**

| | | எஸ்.எல்.ஏ.எஸ் இன்படி | எஸ்.எல்.எவ்.ஆர்.எஸ் /எல்.கே.ஏ.எஸ் பரிமாற்றலின் பயனுறுதி | எஸ்.எல்.எவ்.ஆர்.எஸ் /எல்.கே.ஏ.எஸ் பரிமாற்றலின் பயனுறுதி |
|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | |
| **நடைமுறைச் சொத்துக்கள் அல்லாதவை** | | | | |
| ஆதனம்,பொறித் தொகுதியும் உபகரணமும் | ஏ | 13,361,083 | (12,460,179) | 900,904 |
| முதலீட்டுச் சொத்து | ஏ | - | 12,460,179 | 12,460,179 |
| துணைக் கம்பனியில் முதலீடு | | 573,577,393 | - | 573,577,393 |
| இணைந்தவற்றில் முதலீடு | | 2,200,000 | - | 2,200,000 |
| முதலீடுகள் | பி | 5,028,520,635 | -5,028,520,635 | - |
| திறைசேரிப் பிணைகள் | பி | - | 2,558,757,440 | 2,558,757,440 |
| நிலையான வைப்புகள் | பி | 940,122,660 | 638,151,019 | 1,578,273,679 |
| மூலதன முதலீட்டுச் (வட்டி) செலவு | சி | 73,030,420 | -73,030,420 | - |
| | | 6,630,812,191 | -1,904,642,597 | 4,726,169,594 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | |
| திறைசேரி உண்டியலில் முதலீடு | பி | - | 1,602,570,132 | 1,602,570,132 |
| பின்னோக்கிய மீள்வணிகத்தில் முதலீடு | பி | - | 443,234,373 | 443,234,373 |
| ஏனைய பெறுகைகள் | பி,டி | 326,622,532 | (128,034,088) | 198,588,445 |
| பதவியினர் கடன் | டி | 473,305 | (33,269) | 440,036 |
| பணமும் பணத்திற்குச்சமனானவையும் | பி | 16,756,496 | 35,001 | 16,791,497 |
| | | 343,852,334 | 1,917,772,149 | 2,261,624,482 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **6,974,664,525** | **13,129,552** | **6,987,794,077** |
| **நிகரச் சொத்துக்களும் பொறுப்புக்களும்** | | | | |
| தெரிவிக்கப்பட்ட முதலீடு | இ | - | 6,669,610 | 6,669,610 |
| திரட்டிய நிதியம் | | 6,847,591,574 | (7,635,117) | 6,839,956,457 |
| ஏ.எவ்.எஸ்.நிதியம் | பி | - | 92,394,247 | 92,394,247 |
| பாடசாலை அபிவிருத்தி நிதியம் | எவ் | 78,556,934 | (78,556,934) | - |
| | | 6,926,148,508 | 12,871,806 | 6,939,020,314 |
| **நடைமுறைச்சொத்துக்கள் அல்லாதவை** | | | | |
| ஓய்வூதிய நலன் கடப்பாடுகள் | ஜி | 626,340 | (494,196) | 132,144 |
| | | 626,340 | -494,196 | 132,144 |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | | |
| ஏனைய பொறுப்புகள் | பி | 3,982,180 | 751,942 | 4,734,122 |
| ஏற்பாடுகள் | | 43,907,496 | - | 43,907,496 |
| | | 47,889,676 | 751,942 | 48,641,619 |
| **மொத்தப் பொறுப்புகளும், பங்குதாரர்களின் நிதியமும்** | | **6,974,664,525** | **13,129,552** | **6,987,794,077** |

**மஹாபொல உயர் கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்** **வரைவு**

**2011திசெம்பர் 31 இல் முடிவுற்ற இல் முடிவுற்ற ஆண்டுக்கான விரிவான வருமானத்தின் இணக்கம் - நம்.பொ.நிதியம்**

| | குறிப்புகள் | எஸ்.எல்.ஏ.எஸ் இன்படி | எஸ்.எல்.எவ்.ஆர்.எஸ் /எல்.கே.ஏ.எஸ் பரிமாற்றலின் பயனுறுதி | எஸ்.எல்.எவ்.ஆர்.எஸ் /எல்.கே.ஏ.எஸ் பரிமாற்றலின் பயனுறுதி |
|---|---|---|---|---|
| **வருவாய்** | | | | |
| வட்டி வருமானம் | **பி,எவ்** | 538,871,268 | 63,291,399 | 602,162,667 |
| அபிவிருத்தி லொத்தரிலிருந்தான பங்கு இலாபம் | | 600,866,586 | - | 600,866,586 |
| நன்கொடை | | 100,000 | - | 100,000 |
| | | 1,139,837,853 | 63,291,399 | 1,203,129,253 |
| கழிவு: | | | | |
| நேரடிச் செலவு | **எச்** | - | (773,617,762) | (773,617,762) |
| | | 1,139,837,853 | (710,326,363) | 429,511,491 |
| ஏனைய வருவாய் | **ஐ** | 34,155,453 | (14,425) | 34,141,028 |
| | | 1,173,993,306 | (710,340,788) | 463,652,518 |
| நிருவாகச் செலவு | **எச்** | (752,743,460) | (736,178,832) | (16,564,628) |
| நிதிச் செலவு | **டி** | - | 36,325 | 36,325 |
| **செலவினை விஞ்சிய நிகர வருமானம்** | | **421,249,846** | **(1,446,483,294)** | **447,124,215** |
| முன்னைய ஆண்டு சீராக்கல் | **ஜே** | (28,785,346) | 28,785,346 | - |
| நட்டமும் பதிவழிப்பும் | **சி** | (2,920,000) | (2,920,000) | - |
| **மேலதிக வருமானம்** | | **389,544,500** | **(1,420,617,948)** | **447,124,215** |
| **ஏனைய விரிவான வருமானம்** | | | | |
| ஏ.எவ்.எஸ். இன் கீழ் நியாயமான விலையில் மாற்றங்க | **பி** | - | (157,103,432) | (157,103,432) |
| தொழில் நலன் மீதான உண்மையான (நட்டம்)/இலாப | **ஜி** | - | 1,758 | 1,758 |
| மொத்த ஏனைய விரிவான வருவாய் | | - | (157,101,674) | **(157,101,674)** |
| **ஆண்டுக்கான மொத்த ஏனைய விரிவான வருவாய்** | | **389,544,500** | **(1,577,719,622)** | **290,022,541** |

**மஹாபொல உயர் கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் வரைவு**
**2011 திசெம்பர் 31 இலுள்ளவாறு நிகரச் சொத்தின் இணக்கம் - நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்**

| | | எஸ்.எல்.ஏ.எஸ் இன்படி | எஸ்.எல்.எவ்.ஆர்.எஸ் /எல்.கே.ஏ.எஸ் பரிமாற்றலின் பயனுறுதி | எஸ்.எல்.எவ்.ஆர்.எஸ் /எல்.கே.ஏ.எஸ் பரிமாற்றலின் பயனுறுதி |
|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | |
| **நடைமுறைச் சொத்துக்கள் அல்லாதவை** | | | | |
| ஆதனம்,பொறித் தொகுதியும் உபகரணமும் | ஏ | 13,946,602 | (12,460,179) | 1,486,423 |
| முதலீட்டுச் சொத்து | ஏ | - | 12,460,179 | 12,460,179 |
| துணைக் கம்பனியில் முதலீடு | | 573,577,393 | - | 573,577,393 |
| இணைந்தவற்றில் முதலீடு | | 2,200,000 | - | 2,200,000 |
| என்.டபிள்யு.சி.எல்லில் மஹாபொல பிரிவு | பி | 5,125,204,995 | (5,125,204,995) | - |
| திறைசேரிப் பிணைகள் | பி | - | 3,848,705,623 | 3,848,705,623 |
| நிலையான வைப்புகள் | பி | 1,035,050,641 | 821,024,853 | 1,856,075,494 |
| மூலதன முதலீட்டுச் (வட்டி) செலவு | சி | 70,110,420 | (70,110,420) | - |
| | | 6,820,090,050 | -525,584,938 | 6,294,505,112 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | |
| திறைசேரிப் உண்டியலில் முதலீடு | பி | - | 666,814,902 | 666,814,902 |
| பின்னோக்கிய மீள்வணிகத்தில் முதலீடு | பி | - | 77,094,302 | 77,094,302 |
| ஏனைய பெறுகைகள் | பி,டி | 554,149,338 | (354,964,318) | 199,185,021 |
| பதவியினர் கடன் | டி | 192,000 | (8,948) | 183,052 |
| பணமும் பணத்திற்குச்சமனானவையும் | பி | 14,662,095 | 33,538 | 14,695,633 |
| | | 569,003,433 | 388,969,477 | 957,972,910 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **7,389,093,484** | **(136,615,461)** | **7,252,478,023** |
| **நிகரச் சொத்துக்களும் பொறுப்புக்களும்** | | | | |
| தெரிவிக்கப்பட்ட முதலீடு | இ | - | 6,669,610 | 6,669,610 |
| திரட்டிய நிதியம் | | 7,237,136,074 | 49,946,353 | 7,287,082,427 |
| ஏ.எவ்.எஸ்.நிதியம் | பி | - | (64,709,185) | -64,709,185 |
| பாடசாலை அபிவிருத்தி நிதியம் | எவ் | 128,724,307 | (128,724,307) | - |
| | | 7,365,860,381 | -136,817,529 | 7,229,042,852 |
| **நடைமுறைச்சொத்துக்கள் அல்லாதவை** | | | | |
| ஓய்வூதிய நலன் கடப்பாடுகள் | ஜி | 723,675 | (565,637) | 158,038 |
| | | 723,675 | -565,637 | 158,038 |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | | |
| ஏனைய பொறுப்புகள் | பி | 3,570,466 | 767,705 | 4,338,171 |
| ஏற்பாடுகள் | | 18,962,019 | - | 18,938,962 |
| | | 22,532,485 | 767,705 | 23,277,133 |
| **மொத்தப் பொறுப்புகளும், பங்குதாரர்களின் நிதியமும்** | | **7,389,116,541** | **-136,615,461** | **7,252,478,023** |

வரைவு

**மஹாபொல உயர் கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்**
**2011சனவரி 01 இல் முடிவுற்ற ஆண்டிலுள்ளவாறு சொத்துரிமை இணக்கம் - குழுமம்**
**எஸ்.எல்.ஏ.எஸ்.(எஸ்.எல்.எவ்.ஆர்.எஸ்./எல்.கே.ஏ.எஸ்.)**

| | குறிப்புகள் | எஸ்.எல்.ஏ.எஸ் | மீள் அளவீடு/ மீள் வகைப்பாடு | எஸ்.எல்.எவ்.ஆர்.எஸ் /எல்.கே.ஏ.எஸ் |
|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | |
| **நடைமுறையல்லாச் சொத்துகள்** | | | | |
| ஆதனம்,பொறித் தொகுதியும் உபகரணமும் | | 470,766,862 | - | 470,766,862 |
| துணைக் கம்பனியில் முதலீடு | | 177,393 | - | 177,393 |
| இணைந்தவற்றில் முதலீடு | | 514,197,382 | - | 514,197,382 |
| முதலீடுகள் | பி | 4,586,038,204 | -4,586,038,204 | - |
| நன்மதிப்பு | | 1,575,646 | - | 1,575,646 |
| திறைசேரிப் பிணைகள் | பி | 53,600 | 2,558,757,440 | 2,558,811,040 |
| நிலையான வைப்புகள் | பி | 979,774,532 | 638,151,018 | 1,617,925,550 |
| மூலதன முதலீட்டுச் (வட்டி) செலவு | சி | 73,030,420 | -73,030,420 | - |
| | | 6,625,614,039 | -1,462,160,167 | 5,163,453,872 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | |
| கொடுக்கல் வாங்கல் பிணைப்பொறுப்புகளில் முதலீடு | | 8,772,517,287 | - | 8,772,517,287 |
| திறைசேரிப் பிணைகளில் முதலீடு | பி | 433,552,694 | 1,602,570,132 | 2,036,122,826 |
| பின்னோக்கியமீள் வாணிப முதலீடு | பி | 551,487,830 | - | 551,487,830 |
| கடன்பெறுநர்களும், ஏனைய பெறுகைகளும் | பி,டி | 163,439,626 | (128,034,088) | 35,405,539 |
| முற்பணங்களும், முற்கொடுப்பனவுகளும் | | 3,894,941 | - | 3,894,941 |
| பதவியினர் கடன் | டி | 473,305 | (33,269) | 440,036 |
| அழைப்பு வைப்புகள் | | 93,000,000 | - | 93,000,000 |
| பணமும் பணத்திற்குச்சமனானவையும் | பி | 91,531,709 | 35,001 | 91,566,710 |
| | | 10,109,897,393 | 1,474,537,776 | 11,584,435,169 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **16,735,511,432** | **12,377,610** | **16,747,889,041** |
| **உரிமையாண்மையும் பொறுப்புக்களும்** | | | | |
| தெரிவிக்கப்பட்ட முதலீடு | இ | - | 6,669,610 | 6,669,610 |
| திரட்டிய நிதியம் | | 7,757,907,146 | (7,635,117) | 7,750,272,029 |
| அறக்கட்டளை நிதியம் | | 408,655 | - | 408,655 |
| இடைநேர் ஒதுக்கம் | | 6,000,000 | - | 6,000,000 |
| விசேட இடர் ஒதுக்கீடு | | 133,072,658 | - | 133,072,658 |
| பரிசில் ஒதுக்க கணக்கு | | 313,497,021 | - | 313,497,021 |
| ஏ.எவ்.எஸ்.நிதியம் | பி | - | 92,394,247 | 92,394,247 |
| பாடசாலை அபிவிருத்தி நிதியம் | எவ் | 78,556,934 | (78,556,934) | - |
| | | 8,289,442,414 | 12,871,805 | 8,302,314,220 |
| கட்டுப்பாடற்ற வட்டி | | 8,805,913 | - | 8,805,913 |
| **நடைமுறையல்லா பொறுப்புகள்** | | | | |
| மானியங்களிலிருந்து பிற்போடப்பட்ட வருமதிகள் | | 1,118,655 | - | 1,118,655 |
| பிீற்போடப்பட்ட வரிப் பொறுப்புகள் | | 2,092,024 | - | 2,092,024 |
| ஓய்வூதிய நலன் கடப்பாடுகள் | ஜி | 21,589,264 | (494,196) | 21,095,068 |
| | | 24,799,943 | -494,196 | 24,305,747 |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | | |
| மானியங்களிலிருந்து பிற்போடப்பட்ட வருமதிகள் | | 10,667,067 | - | 10,667,067 |
| கடன் கொடுத்தோர்களும் ஏனைய பொறுப்புகளும் | | 8,272,686,902 | - | 8,272,686,902 |
| செலுத்த வேண்டிய செலவீனங்கள் | | 33,559,085 | - | 33,559,085 |
| ஏற்பாடுகள் | | 43,907,496 | - | 43,907,496 |
| வருமான வரிப் பொறுப்புகள் | | 51,642,611 | - | 51,642,611 |
| | | 8,412,463,161 | - | 8,412,463,161 |
| **மொத்தப் பொறுப்புகளும், பங்குதாரர்களின் நிதியமும்** | | **16,735,511,432** | **12,377,610** | **16,747,889,041** |

*இது, மஹாபொல உயர் கல்வி நம்பிக்கைப் பொறுப்பு குழுமத்திற்காகத் தயாரிக்கப்பட்ட 2011 சனவரி 01 இலுள்ளவாறு எஸ்.எல்.எவ்.ஆர்.எஸ் உரையாடலுக்கு முன்னரான திரட்டிய நிதிக் கூற்றுக்களைத் தருகின்றது

**மஹாபொல உயர் கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் வரைவு**
**2011திசெம்பர் 31 இல் முடிவுற்ற இல் முடிவுற்ற ஆண்டுக்கான சொத்துரிமை இணக்கம் - குழுமம்**

| | குறிப்புகள் | எஸ்.எல்.ஏ.எஸ் இன்படி | எஸ்.எல்.எவ்.ஆர்.எஸ் /எல்.கே.ஏ.எஸ் பரிமாற்றலின் பயனுறுதி | எஸ்.எல்.எவ்.ஆர்.எஸ் /எல்.கே.ஏ.எஸ் இன்படி |
|---|---|---|---|---|
| **வருமானம்** | | | | |
| வட்டி வருமானம் | பி,எவ் | 758,075,855 | 54,590,032 | 812,665,887 |
| நன்கொடை | | 100,000 | - | 100,000 |
| சேவை வருவாய் | | 782,978,800 | - | 782,978,800 |
| | | 1,541,154,656 | | 1,595,744,687 |
| **கழிக்க** | | | | |
| நேரடிச் செலவு | எச் | (881,915,885) | - | (881,915,885) |
| | | 659,238,770 | | 713,828,802 |
| ஏனைய வருவாய் | ஐ | 61,968,673 | (32,817,851) | 29,150,822 |
| | | 721,207,443 | | 742,979,624 |
| நிருவாகச் செலவு | எச்,டி | (413,530,565) | 1,229,786 | (414,760,351) |
| விற்பனை, விநியோகச் செலவுகள் | | (13,598,904) | - | (13,598,904) |
| ஏனைய செலவீனங்கள் | | (13,688,072) | - | (13,688,072) |
| முன்னைய ஆண்டு சீராக்கங்கள் | ஜே | (28,785,346) | (28,785,346) | - |
| நட்டமும் பதிவழிப்பும் | சி | (2,920,000) | (2,920,000) | - |
| | | 248,684,556 | | 300,932,297 |
| நிதி வருவாய் | ஐ,டி | 86,557,208 | 33,418,684 | 119,975,892 |
| நிதிச் செலவு | | (227,597,407) | - | (227,597,407) |
| | | 107,644,357 | | 193,310,782 |
| இணைந்த கம்பனிகளிலிருந்தான பங்கிலாபம் | | 687,783,871 | - | 687,783,871 |
| கழிக்க: புலமைப்பரிசில் விருதுச் செலவு | | (75,547,623) | - | (75,547,623) |
| | | 612,236,247 | - | 612,236,247 |
| **வரிக்கு முன்னரான இலாபம் அல்லது நட்டம்** | | 719,880,604 | - | 805,547,029 |
| வருமான வரிச் செலவு | | (55,203,016) | - | (55,203,016) |
| **வரிக்குப் பின்னரான இலாபம்** | | 664,677,588 | - | 750,344,013 |
| **ஏனைய விரிவான வருமானம்** | | | | |
| ஏ.எவ்.எஸ். இன் கீழ் நியாயமான விலையில | பி | - | (157,103,432) | (157,103,432) |
| தொழில் நலன் மீதான உண்மையான (நட் | ஜி | - | 1,348,543 | 1,348,543 |
| ஏனைய விரிவான வருவாய் மீதான வரி | | - | 5,058 | 5,058 |
| மொத்த ஏனைய விரிவான வருவாய் | | - | (155,749,831) | (155,749,831) |
| **ஆண்டுக்கான மொத்த ஏனைய விரிவான வருவாய்** | | **664,677,588** | **(155,749,831)** | **594,594,182** |

*இது, மஹாபொல உயர் கல்வி நம்பிக்கைப் பொறுப்பு குழுமத்திற்காகத் தயாரிக்கப்பட்ட 2011 திசெம்பர் 31 இலுள்ளவாறு எஸ்.எல்.எவ்.ஆர்.எஸ் உரையாடலுக்கு முன்னரான திரட்டிய நிதிக் கூற்றுக்களைத் தருகின்றது

**மஹாபொல உயர் கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்** **வரைவு**
**2011 திசெம்பர் 31 டிலுள்ளவாறு சொத்துரிமை இணக்கம் - குழுமம்**
**எஸ்.எல்.ஏ.எஸ்.(எஸ்.எல்.எவ்.ஆர்.எஸ்./எல்.கே.ஏ.எஸ்.)**

| | | எஸ்.எல்.ஏ.எஸ் இன்படி | மீள் அளவீடு/ மீள் வகைப்பாடு | எஸ்.எல்.எவ்.ஆர்.எஸ் /எல்.கே.ஏ.எஸ் |
|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | |
| **நடைமுறைச் சொத்துக்கள் அல்லாதவை** | | | | |
| ஆதனம்,பொறித் தொகுதியும் உபகரணமும் | | 453,508,878 | - | 453,508,878 |
| துணைக் கம்பனியில் முதலீடு | | 177,393 | - | 177,393 |
| இணைந்தவற்றில் முதலீடு | | 523,858,817 | - | 523,858,817 |
| முதலீடுகள் | பி | 5,048,878,398 | -5,048,878,398 | - |
| நன்மதிப்பு | | 1,575,646 | - | 1,575,646 |
| பிற்போடப்பட்ட வரிச் சொத்து | | 756,294 | - | 756,294 |
| திறைசேரிப் பிணைகள் | பி | 93,411 | 3,848,705,623 | 3,848,799,034 |
| நிலையான வைப்புகள் | பி | 1,152,635,015 | 821,024,853 | 1,973,659,868 |
| மூலதன முதலீட்டுச் (வட்டி) செலவு | சி | 70,110,420 | -70,110,420 | - |
| | | 7,251,594,272 | -449,258,342 | 6,802,335,930 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | |
| கொடுக்கல் வாங்கல் பிணைப்பொறுப்புகளில் முதலீடு | | 7,564,393,743 | - | 7,564,393,743 |
| திறைசேரிப் பிணைகளில் முதலீடு | பி | 635,694,604 | 666,814,902 | 1,302,509,506 |
| பின்னோக்கிய மீள் வாணிப முதலீடு | | 82,051,449 | - | 82,051,449 |
| கடன்பெறுநர்களும், ஏனைய பெறுகைகளும் | பி | 386,066,359 | (354,973,265) | 31,093,094 |
| முற்பணங்களும், முற்கொடுப்பனவுகளும் | டி | 4,657,105 | 1,054,713 | 5,711,818 |
| பதவியினர் கடன் | டி | 7,215,472 | (1,054,713) | 6,160,759 |
| அழைப்பு வைப்புகள் | | 27,000,000 | - | 27,000,000 |
| பணமும் பணத்திற்குச்சமனானவையும் | பி | 99,195,000 | 33,538 | 99,228,538 |
| | | 8,806,273,732 | 311,875,175 | 9,118,148,907 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **16,057,868,003** | **(137,383,167)** | **15,920,484,837** |
| **நிகரச் சொத்துக்களும் பொறுப்புக்களும்** | | | | |
| தெரிவிக்கப்பட்ட முதலீடு | இ | - | 6,669,610 | 6,669,610 |
| திரட்டிய நிதியம் | | 8,422,772,333 | 49,946,353 | 8,472,718,685 |
| அறக்கட்டளை நிதியம் | | 1,494,223 | - | 1,494,223 |
| இடைநேர் ஒதுக்கம் | | 12,851,346 | - | 12,851,346 |
| விசேட இடர் ஒதுக்கீடு | | 149,975,522 | - | 149,975,522 |
| பரிசில் ஒதுக்க கணக்கு | | 322,839,494 | - | 322,839,494 |
| ஏ.எவ்.எஸ்.நிதியம் | பி | - | (64,709,185) | (64,709,185) |
| பாடசாலை அபிவிருத்தி நிதியம் | எவ் | 128,724,307 | (128,724,307) | - |
| | | 9,038,657,224 | -136,817,530 | 8,901,839,695 |
| கட்டுப்பாடற்ற வட்டி | | 10,752,747 | - | 10,752,747 |
| **நடைமுறைச்சொத்துக்கள் அல்லாதவை** | | | | |
| மானியங்களிலிருந்து பிற்போடப்பட்ட வருமதிகள் | | 1,118,655 | - | 1,118,655 |
| ஓய்வூதிய நலன் கடப்பாடுகள் | ஜி | 26,038,803 | (565,637) | 25,473,166 |
| | | 27,157,458 | -565,637 | 26,591,821 |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | | |
| மானியங்களிலிருந்து பிற்போடப்பட்ட வருமதிகள் | | 8,036,993 | - | 8,036,993 |
| கடன் கொடுத்தோரும் ஏனைய பொறுப்புகளும் | | 6,860,422,805 | - | 6,860,422,805 |
| செலுத்த வேண்டிய செலவீனங்கள் | | 27,448,426 | - | 27,448,426 |
| ஏற்பாடுகள் | | 18,938,962 | - | 18,938,962 |
| வருமான வரிப் பொறுப்புகள் | | 63,723,691 | - | 63,723,691 |
| | | 6,978,570,877 | - | 6,978,570,877 |
| **மொத்தப் பொறுப்புகளும், பங்குதாரர்களின் நிதியமும்** | | **16,055,138,307** | **(137,383,167)** | **15,917,755,141** |

*இது, மஹாபொல உயர் கல்வி நம்பிக்கைப் பொறுப்பு குழுமத்திற்காகத் தயாரிக்கப்பட்ட 2011 திசெம்பர் 31 இலுள்ளவாறு எஸ்.எல்.எவ்.ஆர்.எஸ் உரையாடலுக்கு முன்னரான திரட்டிய நிதிக் கூற்றுக்களைத் தருகின்றது

**A – முதலீட்டுச் சொத்து**

நம்பிக்கைப் பொறுப்பு நிதியமானது, இயந்திர, உபகரணச் சொத்தின் கீழ் SLIIT இற்கு குத்தகைக்கு விடப்பட்ட காணியைப் பதிவு செய்துள்ளது. நம்பிக்கை நிதியம் இக்காணி பற்றிய வாடகை வருமானத்தைப் பெற்றுக்கொள்கிறது. எனவே, இது குத்தகை வருமானத்தைப் பெற்றுக் கொள்வதனால், நம்பிக்கை நிதிய நிதிக் கூற்றுகளில் முதலீட்டுச் சொத்தாக மீள வகைப்படுத்தப்பட்டுள்ளது. .

**B – நிதி முதலீடுகள்**

முந்தைய SLAS இன் கீழ், நம்பிக்கைப் பொறுப்பு நிதியம், மொத்தமொன்றாக அவர்களின் காவு பெறுமதியில் உள்ள தேசிய சொத்துக் கூட்டுத்தாபனத்தினால் முகாமை செய்யப்படும் அதன் முதலீட்டுக் கடமைகளை அங்கீகரித்துள்ளது. SLFRS இன் கீழ், நம்பிக்கை நிதியம் LKAS 32,39 இற்கிணங்க அத்தகைய முதலீடுகளை பின்வருமாறு மீள வகைப்படுத்தி அளவீடு செய்துள்ளது:

- வர்த்தகத்தில் அல்லாத திறைசேரி முறிகள், திறைசேரி உண்டியல்களில் உள்ள முதலீடுகள் - விற்பனைக்கு கிடைக்கத்தக்கது

  SLFRS ஆனது, நியாயப் பெறுமதியில் அளவிடப்பட வேண்டிய விற்பனை முதலீடுகளுக்கு கிடைக்கக் கூடியவற்றை தேவைப்படுத்துகிறது. SLFRS இன் மாற்றத் திகதியில் இச்சொத்துகளின் நியாயப் பெறுமதி ரூபா 4,161.3 மில்லியனாகவும் முந்தைய SLAS கொண்டுசெல்லும் தொகை ரூபா. 4,068.9 மில்லியனாகவும் இருந்தது. முதலீட்டு நியாயப் பெறுமதிக்கும் முந்தைய காவு பெறுமதிக்கும் இடையிலான வேறுபாடு ரூ. 92.4 மில்லியன் விற்பனை ஒதுக்கீட்டிற்கு கிடைக்கக் கூடிய தனியான பங்குக்கூறாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
  2011 டிசம்பர் 31 ஆம் திகதி உள்ளவாறு, முதலீட்டின் நியாயப் பெறுமதி ரூ. 4,515.5 மில்லியனாகவும் SLAS காவு பெறுமதி ரூ. 4,580.2 மில்லியனாகவும் காணப்பட்டது. கருவிசார் நியாயப் பெறுமதிக்கும் காவு பெறுமதிக்கும் இடையிலான வேறுபாடு விற்பனை ஒதுக்கீட்டிற்கு கிடைக்கக் கூடியதில் ரூபா 64.7 மில்லியனாக அங்கீகரிக்கப்பட்டது.

- நிலையான வைப்பு முதலீடுகளும் மீள்மாற்ற மீள் கொள்வனவு உடன்படிக்கைகளும் - கடன்களும் பெறத்தக்கனவும்

  முந்தைய SLAS இன் கீழ் வைப்புகள் அற்றின் மூல வைப்புகளில் காட்டப்படுவதுடன் வட்டி நேர் கோட்டு அடிப்படையில் அறவிடப்படுகின்றன. SLFRS இன் கீழ், EIR முறையின் கீழ் வட்டி அங்கீகரிக்கப்பட வேண்டியதுடன் கடன்தீர் செலவுகள் கணக்கில் காட்டப்படல் வேண்டும். மாற்றத் திகதியன்று SLAS இன் கீழ் ஏலவே வழங்கப்பட்ட வட்டிக்கும் SLFRS இன் கீழான தேவைக்கும் இடையிலான வேறுபாடு 12.1 மில்லியன் ரூபாவாகும். அது தக்கவைத்த உழைப்பிற்கு சீராக்கப்பட்டதுடன் நிலையான வைப்புத் தொகைக்கு எதிராக சீராக்கப்பட்டது.
  2011 டிசம்பர் 31 ஆம் திகதியன்று, EIR இன் கீழானதற்கும் நேர்கோட்டு முறையின் கீழானதற்கும் இடையிலான வட்டி ஏற்பாட்டு வேறுபாடு 7.7 மில்லியன் ரூபாவாக இருந்ததுடன் நிகர அசைவு ரூ. 4.4 மில். ருபா வருமானக் கூற்றில் உணரப்பட்டது.

- நிலையான வைப்பிலுள்ள முதலீடுகளும் மீள் கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்கப்பட்ட காப்புப்பணங்களும் - பிற பொறுப்புகள்

  முந்தைய SLAS இன் கீழ் மீள் கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்கப்பட்ட காப்புப்பணங்களின் காவு பெறுமதி, முதலீட்டுப் பங்கின் மொத்த காவு பெறுமதியில் சேர்க்கப்பட்டது. SLFRS இன் கீழ், அத்தகைய முதலீடுகளின் கடன்தீர் செலவுகள் 2010 இலுள்ள ரூ. 751,942 மற்றும் 2011 இலுள்ள ரூ. 767,705 ஆகவுள்ள பிற பொறுப்புகளில் தரப்பட்டுள்ளது.

மேலும், மாற்றப்படாத சீராக்கல் ரூ. 5.1 மில்லியன் மேற்படி மொத்த முதலீட்டுப் பெறுமதிக்கு முகாமையால் சேர்க்கப்பட்டது.

நிதி முதலீடுகளின் விபரம் பின்வருமாறு;

| **2011 ஜனவரி 01 ஆம் திகதி உள்ளவாறு** | ரூ. | ரூ. |
|---|---|---|
| SLAS நிதிக்கூற்றுகளில் பதியப்பட்ட பெறுமதி | 5,028,520,635 | |
| பெறத்தக்க வட்டி | 96,684,365 | |
| மாற்றப்படாத சீராக்கல் | 5,195,890 | 5,130,400,890 |
| திறைசேரி உண்டியல்கள்(நியாயப் பெறுமதியில்) | 1,602,570,132 | |
| திறைசேரி முறிகள்(நியாயப் பெறுமதியில்) | 2,558,757,440 | |
| மீள் விற்பனை உடன்படிக்கையின் கீழ் பெறத்தக்கன (கடன்தீர் செலவில்) | 443,234,373 | |
| நிலையான வைப்புகள் (கடன்தீர் செலவில்) | 606,768,022 | |
| பணம் | 35,000 | |
| குத்தகை:மீள் கொள்வனவு உடன்படிக்கை(கடன்தீர் செலவில்) | (751,942) | 5,210,613,024 |
| | | **80,212,134***|

*இவ்வேறுபாடு நிலையான வைப்பு ரூ.(12,182,112/-) மீது செய்யப்பட்ட EIR சீராக்கலையும் SLFRS இன் கீழ் திறைசேரி முறிகள், உண்டியல்கள் ரூ. 92,394,247 மீது செய்யப்பட்ட நியாயப் பெறுமதி சீராக்கலையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

| **2011 டிசம்பர் 31 ஆம் திகதி உள்ளவாறு** | ரூ. | ரூ. |
|---|---|---|
| SLAS நிதிக்கூற்றுகளில் பதியப்பட்ட பெறுமதி | 5,125,204,995 | |
| பெறத்தக்க வட்டி | 329,072,016 | |
| மாற்றப்படாத சீராக்கல் | 5,195,890 | 5,459,472902 |
| திறைசேரி உண்டியல்கள்(நியாயப் பெறுமதியில்) | 666,814,902 | |
| திறைசேரி முறிகள்(நியாயப் பெறுமதியில்) | 3,848,705,623 | |
| மீள் விற்பனை உடன்படிக்கையின் கீழ் பெறத்தக்கன (கடன்தீர் செலவில்) | 77,094,302 | |
| நிலையான வைப்புகள் (கடன்தீர் செலவில்) | 795,123,604 | |
| பணம் | 33,538 | |
| குத்தகை:மீள் கொள்வனவு உடன்படிக்கை(கடன்தீர் செலவில்) | (767,705) | 5,387,004,264 |
| | | **(72,468,638)*** |

*இவ்வேறுபாடு நிலையான வைப்பு ரூ. (7,759,453/-) மீது செய்யப்பட்ட EIR சீராக்கலையும் SLFRS இன் கீழ் திறைசேரி முறிகள், உண்டியல்கள் ரூ. (64,709,185/-) மீது செய்யப்பட்ட நியாயப் பெறுமதி சீராக்கலையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

**C – மூலதன முதலீடுகளின் செலவு**

நம்பிக்கை நிதியம் SLIIT இல் செய்யப்பட்ட முதலீட்டுக்கு பெறப்பட்ட வங்கிக் கடன் மீது உறப்பட்ட வட்டிச் செலவை மூலதனமாகிகியுள்ளது. அத்துடன் 30 வருடங்களிற்கும் மேலாக கடன் தீர்க்கப்பட்டு வருகிறது. அவ்வாறே இச்செலவு SLFRS இன் கீழான சொத்தாக அங்கீகரிப்பதற்கு

தகுதியற்றதாக உள்ளதால், 2010 இலுள்ள ரூ. 73,030,420 மற்றும் 2011 இலுள்ள ரூ. 70,110,420 ஆகவுள்ள உழைப்புகளுக்கு எதிராக விலக்களிக்கப்பட்டுள்ளது.

**D –நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட அலுவலர் கடன்கள்**

முந்தைய SLAS இன் கீழ், அலுவலர் கடன்கள் மீள்கொடுப்பனவு நீங்கலான செலவில் பதிவு செய்யப்பட்டன. SLFRS இன் கீழ் நம்பிக்கை நிதியம், அத்தகைய உற்பத்திகளின் சந்தை வட்டி வீத அடிப்படையில் கணிக்கப்பட்ட நியாயப் பெறுமதியிலான சந்தை வட்டி வீதத்திற்கு கீழ் வழங்கப்பட்ட அலுவலர் கடன்களை அளவீடு செய்ய வேண்டியுள்ளது. 2011 ஜனவரி 1 ஆம் திகதி அத்தகைய கடன்களின் நியாயப் பெறுமதி ரூ. 440,036 ஆக இருந்ததுடன் அவர்களின் முந்தைய SLAS காவு தொகை ரூ. 473,305 ஆக இருந்தது. நியாயப் பெறுமதிக்கும் SLAS காவு தொகைக்கும் இடையிலான வேறுபாடு ரூ. 33,269, அலுவலர் கடனில் இருந்து தீர்க்கப்படடதுடன் முற்கொடுப்பனவு அலுவலர் செலவாக அங்கீகரிக்கப்பட்டது.

2011 டிசம்பர் 31 ஆம் திகதி அலுவலர் கடனின் நியாயப் பெறுமதி ரூ. 183,052 ஆக இருந்ததுடன் அவர்களின் முந்தைய SLAS காவு தொகை ரூ. 192,000 ஆக இருந்தது. நியாயப் பெறுமதிக்கும் SLAS காவு தொகைக்கும் இடையிலான வேறுபாடு ரூ. 8,948, அலுவலர் கடனில் இருந்து தீர்க்கப்படடதுடன் முற்கொடுப்பனவு அலுவலர் செலவாக அங்கீகரிக்கப்பட்டது.

அலுவலர் கடன் தொடர்பான முற்கொடுப்பனவு கடன்தீர் செலவு மற்றும் சுமத்தப்பட்ட வட்டியான ரூ. 21,900 2011 இற்கான வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்டது. அதே சீராக்கல் குழுவிற்கும் பிரயோகிக்கப்பட்டது.

**E – அறிவிக்கப்பட்ட மூலதனம்**

நம்பிக்கை நிதியம் அதன் அறிவிக்கப்பட்ட மூலதனத்தை கூட்டு நிதியத்துடன் இணைத்து பதிவு செய்தது. SLFRS இன் மாற்றத் திகதியில் அறிவிக்கப்பட்ட மூலதனம், உறுதிப்பங்கில் தனியாக பதிவு செய்யப்பட்டவாறு மீள வகைப்படுத்தப்பட்டுள்ளது.

**F – பாடசாலை அபிவிருத்தி நிதியம்**

பாடசாலை அபிவிருத்தி நிதியமாகவும் அதேவேளை அதனால் உழைக்கும் வட்டி வருமானமாகவும் உறுதிப்பங்கிலுள்ள பாடசாலை அபிவிருத்திச் செலவு நோக்கத்திற்கு இனங்காணப்பட்ட நிலையான வைப்புகளாக வகைப்படுத்தப்பட்டுள்ள நம்பிக்கை நிதியம் வட்டி வருமானத்திற்கு ஏற்கப்படாத பாடசாலை அபிவிருத்தி நிதியத்திற்கு மூலதனமாக்கப்பட்டுள்ளது. SLFRS இன் மாற்ற வருடத்தில், ரூ. 78,556,934 (2011 இல் ரூ. 128,724,307) நிதியாக சமர்ப்பிக்கப்பட்ட வருடங்களில் மேற்சொன்ன கூட்டு வட்டியானது, தக்கவைக்கப்பட்ட உழைப்பாக மீள வகைப்படுத்தப்பட்டது. மேலும் 2011 இல் உழைக்கப்பெற்ற வட்டி வட்டி வருமானமான ரூ. 50,167,373 இல் அங்கீகரிக்கப்பட்டது.

**G – ஓய்வூதிய நன்மைக் கடப்பாடு**

முந்தைய SLAS இன் கீழ், நம்பிக்கை நிதியம் அரைச்சம்பள முறை அடிப்படையிலான ஓய்வூதிய நன்மைக் கடப்பாட்டை அளவீடு செய்தது. தற்போது, வாய்ப்பாட்டு முறை அதனை அளவிடப் பயன்படுத்தப்பட்டது. SLFRS இன் மாற்றத் திகதியில், தற்போதைய முறைக்கும் முந்தைய முறைக்கும் இடையிலான பொறுப்பு வேறுபாடு ரூ. 494,196, தக்கவைத்துள்ள உழைப்புகளில் அங்கீகரிக்கப்பட்டதுடன் ஓய்வூதிய நன்மைக் கடப்பாட்டிற்கு எதிராக பதியப்பட்டது.

2011 டிசம்பர் 31 ஆம் திகதி அரைச்சம்பள முறைக்கும் வாய்ப்பாட்டு முறைக்கும் இடையிலான வேறுபாடு ரூ. 565,637 பொறுப்பிற்கு எதிராகப் பதியப்பட்டது. பொறுப்புகளின் வருடாந்த அசைவு, வட்டிச் செலவு மற்றும் பணிக்கொடைச் செலவாக வருமானக் கூற்றிலுள்ள ரூ. 27,652 ஆக அங்கீகரிக்கப்பட்டதுடன் ரூ. 1,758 உண்மையான இலாபம் அல்லது நட்டமாக ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்டது.

அதே சீராக்கல் குழுவிற்கும் பிரயோகிக்கப்பட்டது.

**H – செலவுகள்**

நம்பிக்கை நிதியம் அதன் நேரடி செலவுகளை தனியாகப் பதிவு செய்துள்ளது. எனவே செலவுகளின் மீள் வகுப்பாக்கம் 2011 இல் மேற்கொள்ளப்பட்டது.

**I – ஏனைய வருமானம்**

நம்பிக்கை நிதியம் ஏனைய வருமானத்தின் கீழான நிதி வருமானமாக வகைப்படுத்தக் கூடிய வருமானத்தைப் பதிவு செய்துள்ளது. மாற்று வருடத்தில் இவ்வருமானம், நிதி வருமானமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.
அதே சீராக்கல் குழுவிற்கும் பிரயோகிக்கப்பட்டது.

**J – முன்னைய வருட சீராக்கல்கள்**

முந்தைய SLAS இன் கீழ், நம்பிக்கை நிதியம், வருமானக் கூற்றில் தனிக் கோட்டு விடயமாக கணக்கீட்டு மதிப்பீடுகளில் உள்ள மாற்றங்களிலிருந்து இலாபம் பற்றிய கணக்கியற் தாக்கமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இத்தாக்கம், வருமானக் கூற்று 2011 இலுள்ள இயைபுடைய விடயங்களிற்கு தனியாக மீள வகைப்படுத்தப்பட்டுள்ளது.

**8. வெளியிடப்பட்ட ஆனால் செயல்வலுப் பெறாத தரங்கள்**

குழும நிதிக் கூற்றுகளின் வெளியீட்டுத் திகதி வரை வெளியிடப்பட்ட ஆனால் செயல்வலுப் பெறாத தரங்களின் பட்டியல் வருமாறு. இப்பட்டியல் குழு எதிர்காலத் திகதியில் ஏற்புடையதாக்க எதிர்பார்க்கும் தரங்களையும் கொண்டுள்ளது. அவை செயல்வலுப் பெறும் போது அத்தரங்களை கைக்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.

**SLFRS 9 – நிதிக் கருவிகள்: வகைப்படுத்தலும் அளவீடு செய்தலும்**

SLFRS 9 இன் முதல் அவத்தையைக் கைக்கொள்ளல், கூட்டாண்மை நிதிச் சொத்துகளின் வகுப்பாக்கம், அளவீட்டில் விளைவை ஏற்படுத்தலாம், ஆனால் நிதியியல் பொறுப்புகளின் வகுப்பாக்கம், அளவீட்டில் இயன்றளவில் தாக்கத்தை ஏற்படுத்தாது.
-

**SLFRS 10 – திரட்டிய நிதிக் கூற்றுகள்**

இத்தராதரம், SIC 12- விசேட தேவை நிறுவனங்களின் திரட்டிலும் திரட்டிய மற்றும் தனியான நிதிக் கூற்றுகள் - LKAS 27 இலும் தற்போது கொண்டுள்ள அமிசங்களின் அங்கீகாரம், அளவீடு, வெளிப்படுத்துகை என்பவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தும். விசே.தேவை. நிறுவ. அடங்கலாக சகல நிறுவனங்களிற்கும் ஏற்புடைய தனிக் கட்டுபாடு ஒன்றை ஸ்தாபித்தல், SLFRS 10 இன் கீழ் அறிமுகஞ் செய்யப்பட்ட முக்கிய மாற்றமாகும்.

**SLFRS 11 – இணைந்த ஒழுங்குகள்**

இத்தராதரம், கூட்டு முயற்சிகளிலும் வியாபார ரீதியில் பணமல்லா பங்களிப்பு செலுத்தும் SIC 13- இணைந்த கட்டுப்பாட்டு நிறுவனங்களிலும் LKAS 31 வட்டியை தற்போது கொண்ட அமிசங்களின் அங்கீகாரம், அளவீடு, வெளிப்படுத்துகையில் தாக்கத்தை ஏற்படுத்தும். இணைந்த கட்டுப்பாட்டு நிறுவனங்களின் திரட்டினை விகிதாசாரமாக அகற்றும் தெரிவு, SLFRS 11 இன் கீழ் அறிமுகஞ் செய்யப்பட்ட முக்கிய மாற்றமாகும்.

**SLFRS 12 – பிற நிறுவனங்களில் வட்டி வெளிப்படுத்துகை**

SLFRS 12 பிற நிறுவனங்களில் வட்டி வெளிப்படுத்துகை சம்பந்தமாக தனித்தரம் ஒன்றை ஸ்தாபிக்கிறது. இது LKAS 27, LKAS 28, LKAS 31 பதிப்புகளில் முன்னர் உள்ளடக்கியவாறு புதிய வெளிப்படுத்துகைகளை ஒருங்கிணைக்கிறது.

**SLFRS 13 – நியாயப் பெறுமதி அளவீடு**

SLFRS 13 சகல நியாயப் பெறுமதி அளவீடுகளிற்கும் SLAS இன் கீழ் தனி வழிகாட்டல் ஆதாரம் ஒன்றை ஸ்தாபிக்கிறது. SLFRS 13 உறுதிப் பங்கு நியாயப் பெறுமதியைப் பயன்படுத்தலைத் தேவைப்படுத்துமிடத்து மாற்றமடையாது, ஆனால் நியாயப் பெறுமதி தேவைப்படுத்துமிடத்து அல்லது அனுமதிக்குமிடத்து, SLAS இன் கீழ் நியாயப் பெறுமதியை அளவிட வழிகாட்டல் ஒன்றை வழங்குகிறது.

**மஹாபொல உயர் கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்**
**திரட்டிய நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்**

**9. வருவாய்**

| | குழுமம் | | நம்பிக்கைப் பொறுப்பு | |
|---|---|---|---|---|
| | **2012** | **2011** | **2012** | **2011** |
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| வருவாய் வருமானம் | 735,517,501 | 812,665,887 | 700,597,706 | 602,162,667 |
| நன்கொடை | - | 100,000 | - | 100,000 |
| சேவை வருமானம் | 773,266,672 | 782,978,800 | | |
| அ.லொ.ச.யிலிருந்தான இலாபம் | - | - | 734,128,031 | 600,866,586 |
| | **1,508,784,172** | **1,595,744,687** | **1,434,725,736** | **1,203,129,252** |

**10. நேரடிச் செலவுகள்**

| | குழுமம் | | நம்பிக்கைப் பொறுப்பு | |
|---|---|---|---|---|
| | **2012** | **2011** | **2012** | **2011** |
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| கல்வி சேவைகளுக்கான ஏற்பாடு மீதான நேரடிச் செலவு | 219,880,967 | 183,845,746 | - | - |
| புலமைப்பரிசில் விருதுச் செலவு | 680,572,470 | 698,070,139 | 680,572,470 | 698,070,139 |
| உ.த.புலமைப்பரிசில் விருதுச் செலவு | - | - | 49,038,600 | 75,547,623 |
| | **900,453,437** | **881,915,885** | **729,611,070** | **773,617,762** |

**11. ஏனைய தொழிற்பாட்டுச் செலவு**

| | குழுமம் | | நம்பிக்கைப் பொறுப்பு | |
|---|---|---|---|---|
| | **2012** | **2011** | **2012** | **2011** |
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| புலமைப்பரிசில் கொடுப்பனவு மீளச் செலுத்தல் | 22,519,200 | 19,445,293 | 22,519,200 | 19,445,293 |
| பாடசாலை அபிவிருத்தி செலவிற்கான மேலதிக ஏற்பாடு | 11,787,447 | - | 11,787,447 | - |
| குத்தகைக் காணியிலிருந்தான வருவாய் | - | - | 17,431,898 | 14,695,735 |
| பெறப்பட்ட வற் | 27,000,000 | - | 27,000,000 | - |
| சில்லறை வருமானம் | 561,864 | 838,525 | 9,930 | - |
| பொறி உ. சொத்தினை அகற்றுவதிலிருந்தான இலாபம் | 389,371 | 105,154 | - | - |
| பங்கிலாப வருமானம் | 3,527,258 | 743,000 | 36,000,000 | - |
| வாடகை வருமானம் | 5,957,521 | 5,388,776 | - | - |
| மானியத்தை கிரமமாகக் குறைத்தல் | 2,602,415 | 2,630,074 | - | - |
| | **74,345,075** | **29,150,822** | **114,748,475** | **34,141,028** |

**12. நிருவாகச் செலவீனங்கள்**

| | குழுமம் | | நம்பிக்கைப் பொறுப்பு | |
|---|---|---|---|---|
| | **2012** | **2011** | **2012** | **2011** |
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| பணிப்பாளர்களின் வேதனாதிகள் | 15,250,922 | 18,336,331 | - | - |
| தேய்மானம் | 70,591,809 | 63,916,507 | 842,027 | 243,756 |
| கணக்காய்வாளரின் ஊதியம் | 612,280 | 679,020 | - | - |
| பணியாளர் நன்மைச் செலவு | 132,993,827 | 116,557,936 | 5,714,533 | 3,095,393 |
| பழுதுபார்த்தலும் பேணுகையும் | 22,699,355 | 16,400,679 | 604,845 | 470,907 |
| பாடசாலை அபிவிருத்திச் செலவு | 49,377,653 | - | 49,377,653 | - |
| ஏனைய செலவு | 190,451,214 | 198,869,879 | 16,526,156 | 12,754,572 |
| | **481,977,059** | **414,760,351** | **73,065,213** | **16,564,628** |

மஹாபொல உயர் கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

**13. ஏனைய தொழிற்பாட்டுச் செலவு**

| | குழுமம் | | நம்பிக்கைப் பொறுப்பு | |
|---|---|---|---|---|
| | **2012** | **2011** | **2012** | **2011** |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வியாபார மேம்படுத்தலும், விளம்பரப்படுத்தலும் | 22,862,906 | 13,598,904 | - | - |
| | **22,862,906** | **13,598,904** | **-** | **-** |

**14. ஏனைய தொழிற்பாட்டுச் செலவு**

| | குழுமம் | | நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | |
|---|---|---|---|---|
| | **2012** | **2011** | **2012** | **2011** |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| நாணயமாற்று நட்டம் | 5,827,553 | 2,741,916 | - | - |
| தேசிய கட்டட வரி | 19,578,600 | 10,276,499 | - | - |
| பங்கிலாபம் மீதான நிறுத்திவைத்தல் வரி | 102,116 | 175,056 | - | - |
| திருப்பிப்பெறமுடியாத கணக்கு பதிவழிப்பு மீதான ! | - | 494,601 | - | - |
| | **25,508,270** | **13,688,072** | **-** | **-** |

**15. நிதி வருவாய்**

| | குழுமம் | | நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | |
|---|---|---|---|---|
| | **2012** | **2011** | **2012** | **2011** |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வருவாய் வருமானம் | 67,742,284 | 32,280,502 | - | - |
| பதவியினர் கடன் வட்டி | 556,032 | 522,924 | - | - |
| முடிவுறாத பதவியினர்கடன் வட்டி | 712,262 | 615,259 | 22,721 | 36,325 |
| கொடுக்கல் வாங்கல் பிணை மீள்மதிப்பீடு மீது பெறப்பட்டவை | 150,293,622.00 | - | - | - |
| கொடுக்கல் வாங்கல் பிணை விற்பனை மீது பெறப்பட்டவை | - | 86,557,208.00 | - | - |
| | **219,304,200** | **119,975,892** | **22,721** | **36,325** |

**16. நிதிச் செலவு**

| | குழுமம் | | நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | |
|---|---|---|---|---|
| | **2012** | **2011** | **2012** | **2011** |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கொடுக்கல் வாங்கல் பிணை விற்பனை மீதான நட்டம் | 341,139,012 | - | 27,900,511 | - |
| கொடுக்கல் வாங்கல் பிணை மீள்மதிப்பீடு மீதான நட்டம் | - | 140,680,122 | - | - |
| இணைந்த முதலீடு மீதான தடங்கல் | 90,107,550 | 86,917,285 | - | - |
| | **431,246,562** | **227,597,407** | **27,900,511** | **-** |

**17. வருமான வரி**

| | குழுமம் | | நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | |
|---|---|---|---|---|
| | **2012** | **2011** | **2012** | **2011** |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| ஆண்டுக்கான இலாபத்திற்கான தற்போதைய வரி | 14,646,487 | 58,046,276 | - | - |
| பிற்போடப்பட்ட வருமான வரி (விடுவிப்பு) / அறவீடு | (27,181) | (2,843,260) | - | - |
| | **14,619,306** | **55,203,016** | **-** | **-** |

மஹாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்
2012 திசெம்பர் 31 இலுள்ளவாறு திரட்டிய நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

18 ஆதனம், பொறித்தொகுதியும் உபகரணமும்

| விவரணம் | 2011.01.01 இலுள்ளவாறு | ஆண்டு காலப் பகுதியில் சேர்க்கைகள்/ மீள் மதிப்பீடுகள் | ஆண்டு காலப் பகுதியில் அகற்றப்பட்டவை | 2011.12.31 இலுள்ளவாறு | 2012.01.01 இலுள்ளவாறு | ஆண்டு காலப் பகுதியில் சேர்க்கைகள்/ மீள் மதிப்பீடுகள் | ஆண்டு காலப் பகுதியில் அகற்றப்பட்டவை | 2012.12.31 இலுள்ளவாறு |
|---|---|---|---|---|---|---|---|---|
| **செலவில் / மதிப்பீட்டில்** | | | | | | | | |
| காணி | 12,460,179 | - | - | 12,460,179 | 12,460,179 | - | - | 12,460,179 |
| கட்டடங்கள் | 425,568,547 | 711,461 | - | 426,280,008 | 426,280,008 | 11,003,546 | - | 437,283,554 |
| உபகரணங்கள் | 107,735,607 | 11,451,712 | (143,500) | 119,043,819 | 119,043,819 | 12,584,420 | (26,310) | 131,601,929 |
| தளபாடங்களும் பொருத்துகளும் | 51,265,910 | 3,906,169 | (6,581) | 55,165,499 | 55,165,499 | 10,822,409 | (10,750) | 65,977,158 |
| மோட்டார் வாகனங்கள் | 38,096,139 | 5,160,769 | - | 43,256,908 | 43,256,908 | 14,751,040 | - | 58,007,948 |
| கணணிகளும் துணைப்பொருட்களும் | 237,915,599 | 14,943,181 | (156,000) | 252,702,781 | 252,702,781 | 18,167,776 | (1,797,728) | 269,072,828 |
| மென்பொருட்கள் | 16,933,943 | - | - | 16,933,943 | 16,933,943 | 354,039 | - | 17,287,982 |
| புத்தகங்கள், பட்டதாரி உடை | 23,889,521 | 3,337,156 | (2,108) | 27,224,569 | 27,224,569 | 5,867,793 | (795) | 33,091,567 |
| மின்சாரி மாற்றி, இணைப்பு | 4,524,350 | - | - | 4,524,350 | 4,524,350 | - | - | 4,524,350 |
| காணி அபிவிருத்தி | 7,471,988 | 1,989,580 | - | 9,461,569 | 9,461,569 | 1,259,925 | | 10,721,494 |
| காணிச் செம்மைப்படுத்தல்கள் | 42,000 | - | - | 42,000 | 42,000 | - | - | 42,000 |
| மொத்தம் | **925,903,784** | **41,500,029** | **(308,189)** | **967,095,624** | **967,095,624** | **74,810,948** | **(1,835,583)** | **1,040,070,989** |
| **செலவு / மதிப்பீடு மீதான திரட்டிய பெறுமானத் தேய்வு** | | | | | | | | |
| கட்டடங்கள் | 100,295,868 | 19,210,003 | - | 119,505,871 | 119,505,871 | 21,526,368 | - | 141,032,239 |
| உபகரணங்கள் | 83,805,433 | 8,114,796 | (120,200) | 91,800,029 | 91,800,029 | 9,741,199 | (23,977) | 101,517,250 |
| தளபாடங்களும் பொருத்துகளும் | 40,397,798 | 3,847,791 | (6,581) | 44,239,008 | 44,239,008 | 4,705,714 | (6,450) | 48,938,272 |
| மோட்டார் வாகனங்கள் | 20,297,926 | 6,295,398 | - | 26,593,324 | 26,593,324 | 9,046,225 | - | 35,639,549 |
| கணணிகளும் துணைப்பொருட்களும் | 186,702,965 | 22,707,293 | (39,000) | 209,371,258 | 209,371,258 | 20,711,091 | (1,091,478) | 228,990,870 |
| மென்பொருட்கள் | 5,964,384 | 2,892,611 | - | 8,856,995 | 8,856,995 | 2,788,329 | - | 11,645,324 |
| புத்தகங்கள், பட்டதாரி உடை | 19,282,698 | 3,432,796 | (2,108) | 22,713,386 | 22,713,386 | 4,632,066 | (795) | 27,344,656 |
| கணணிகளும் துணைப்பொருட்களும் | - | - | - | - | - | - | - | - |
| காணி அபிவிருத்தி | - | - | - | - | - | - | - | - |
| காணிச் செம்மைப்படுத்தல்கள் | 2,450 | 4,200 | - | 6,650 | 6,650 | 4,200 | - | 10,850 |
| மொத்தம் | **456,749,523** | **66,504,886** | **(167,889)** | **523,086,520** | **523,086,520** | **73,155,190** | **(1,122,700)** | **595,119,011** |
| **எழுத்து மூலமான பெறுமதி** | **469,154,262** | **(25,004,858)** | **(140,300)** | **444,009,104** | **444,009,104** | **1,655,758** | **(712,884)** | **444,951,978** |
| நடைமுறையிலிருக்கின்ற மூலதன வேலை | **1,612,601** | **7,887,173** | **-** | **9,499,774** | **9,499,774** | **136,563,133** | **-** | **146,062,908** |
| மொத்தம் | **470,766,863** | **(17,117,684)** | **(140,300)** | **453,508,878** | **453,508,878** | **138,218,891** | **(712,884)** | **591,014,886** |

18 ஆதனம், பொறித்தொகுதியும் உபகரணமும் - நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

| விவரணம் | 2011.01.01 இலுள்ளவாறு | ஆண்டு காலப் பகுதியில் சேர்க்கைகள்/ மீள்மதிப்பீடுகள் | ஆண்டு காலப் பகுதியில் அகற்றப்பட்டவை | 2011.12.31 இலுள்ளவாறு | 2012.01.01 இலுள்ளவாறு | ஆண்டு காலப் பகுதியில் சேர்க்கைகள்/ மீள்மதிப்பீடுகள் | ஆண்டு காலப் பகுதியில் அகற்றப்பட்டவை | 2012.12.31 இலுள்ளவாறு |
|---|---|---|---|---|---|---|---|---|
| செலவில் / மதிப்பீட்டில் | | | | | | | | |
| உபகரணங்கள் | 93,300 | 34,596 | - | 127,896 | 127,896 | 111,320 | (22,310) | 216,906 |
| மோட்டர் வாகனங்கள் | 1,100,000 | - | - | 1,100,000 | 1,100,000 | 5,100,000 | - | 6,200,000 |
| கணினிகள் | 1,394,588 | 794,679 | - | 2,189,267 | 2,189,267 | 11,400 | (667,728) | 1,532,939 |
| மொத்தம் | **2,587,888** | **829,275** | - | **3,417,163** | **3,417,163** | **5,222,720** | **(690,038)** | **7,949,845** |
| செலவு / மதிப்பீடு மீதான திரட்டிய பெறுமானத் தேய்வு | | | | | | | | |
| உபகரணம் | 91,320 | 2,120 | - | 93,440 | 93,440 | 22,093 | (22,310) | 93,223 |
| மோட்டர் வாகனங்கள் | 1,100,000 | - | - | 1,100,000 | 1,100,000 | 399,616 | - | 1,499,616 |
| கணினிகள் | 495,664 | 241,636 | - | 737,300 | 737,300 | 420,318 | (667,728) | 489,890 |
| மொத்தம் | **1,686,984** | **243,756** | - | **1,930,741** | **1,930,741** | **842,027** | **(690,038)** | **2,082,729** |
| எழுத்து மூலமான பெறுமதி | **900,904** | **585,519** | - | **1,486,423** | **1,486,423** | **4,380,693** | - | **5,867,116** |

முழுவதும் பெறுமதித் தேய்மானமளிக்கப்பட்ட சொத்துக்களின் விபரம் பின்வருமாறு:

1. உபகரணம்

| | |
|---|---|
| இரும்புப் பெட்டகம் | 2,750 |
| பணப் பெட்டி | 2,450 |
| தொலைநகல் இயந்திரம் | 33,750 |
| காற்றாடிகள் | 9,900 |

2. கணினிகள்

| | |
|---|---|
| திபஸ் | 33,000 |
| கணினி பீடி | 252,375 |

3 மோட்டர் வாகனம்

| | |
|---|---|
| டபிள்கப் | 1,100,000 |

இலவசமாக இருந்த காணி

**19. முதலீட்டுச் சொத்துக்கள்**

| | குழுமம் | | | நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | | |
|---|---|---|---|---|---|---|
| | 2012 | 2011 | 2011.01.01இலுள்ளவாறு | 2012 | 2011 | 2011.01.01இலுள்ளவாறு |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| இலவசமாக இருந்த காணி | - | - | - | 12,460,179 | 12,460,179 | 12,460,179 |
| | - | - | - | 12,460,179 | 12,460,179 | 12,460,179 |

குறிப்பு: இது இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்திற்கு அதன் ஆரம்பத்திலிருந்து குத்தகைக்குவிடப்பட்டிருக்கின்ற மாலபேயிலிருக்கின்ற காணியாகும். முகாமைத்துவத்தின் மதிப்பீட்டின்படி, முதலீட்டுச் சொத்தின் உண்மையான பெறுமதி 2,400,000,000/- ஆகும்

**20. தொட்டுணரமுடியாத சொத்துக்கள்**

| | குழுமம் | | | நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | | |
|---|---|---|---|---|---|---|
| | 2012 | 2011 | 2011.01.01இலுள்ளவாறு | 2012 | 2011 | 2011.01.01இலுள்ளவாறு |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| நன்மதிப்பு | 1,575,646 | 1,575,646 | 1,575,646 | - | - | - |
| | 1,575,646 | 1,575,646 | 1,575,646 | - | - | - |

**21. துணைக்கம்பனிகளில் முதலீடு**

| | குழுமம் | | | நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | | |
|---|---|---|---|---|---|---|
| | 2012 | 2011 | 2011.01.01இலுள்ளவாறு | 2012 | 2011 | 2011.01.01இலுள்ளவாறு |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| National Wealth Corporation | - | - | - | 200,000,000 | 200,000,000 | 200,000,000 |
| இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகம் | - | - | - | 373,577,393 | 373,577,393 | 373,577,393 |
| | - | - | - | 573,577,393 | 573,577,393 | 573,577,393 |

(அ) நிதியத்தைப் பேணும் நோக்குடன் 2003 யூன் 30 ஆம் திகதி மூலதனமாக வழங்கப்பட்ட 200 மில்லியன் ரூபா முதலீடு செய்து மஹாபொல உயர் கல்வி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத் முழுமையான சொந்தமுடைய துணை நிறுவகமாக தேசிய நலன்புரி கூட்டுத்தாபனம் (பிறைவேட்) லிமிடெட் தேன்றியிருந்தது.

இதனைத்தொடர்ந்து தேசிய நலன்புரி கூட்டுத்தாபனம் (பிறைவேட்) லிமிடெட், அதன் உழைப்பினைப் பயன்படுத்தி மூலதனமாக வழங்கியிருந்த 300 மில்லியன் ரூபா வரை அதிகரித்து மஹாபொல நிதியத்திற்கு 100 மில்லியன ரூபாவினை சாதாரண பங்காக செலுத்தியிருந்தது.இந்தப் பெறுமதி காசாகவில்லையாகையால் மஹாபொல புத்தகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.

தேசிய நலன்புரி கூட்டுத்தாபன (பிறைவேட்) லிமிடெட், "நற் வெல்த் சேக்குறிற்ரீஸ் (பிறைவேட்) லிமிடெட்டினை" தனது சொந்த நிதியில் 2004 இல் இலங்கை மத்திய வங்கி யின் கீழ் இயங்குகின்ற முதன்மையான விற்பனையாளராக ஆரம்பித்திருந்தது. இந்த கம்பனியில் மூலதனப் பங்கு முதலீடு மொத்தம் 300 மில்லியனாகும்.

ஆ இலங்கை தகவல் தொழில்நுட்ப (பிறைவேட்) லிமிடெட், 373,577,393 ரூபா தொகை முதலீட்டில் 1999 இல் தாபிக்கப்பட்ட மஹபொல உயர் கல்வி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் முழமையானக சொந்தமான துணைக் கம்பனியாகும்.

இலங்கை தகவல் தொழில்நுட்ப கம்பியூட்டிங் (பிறைவேட்) லிமிடெட் மற்றும் இலங்கை தொழில்நுட்ப இன்கியுபாற்ரர் (பிறைவேட்) லிமிடெட் என்பவை முறையே 72.9% மற்றும் 63.9% பங்கினைக் கொண்ட இரண்டு துணைக் கம்பனிகளாகும்.

## 22. கூட்டு முதலீடு

| | குழுமம் | | | நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | | |
|---|---|---|---|---|---|---|
| | 2012 | 2011 | 2011.01.01இலுள்ள வாறு | 2012 | 2011 | 2011.01.01இலு ள்ளவாறு |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| அரம்ப முதலீடு | 2,200,000 | 2,200,000 | 2,200,000 | 2,200,000 | 2,200,000 | 2,200,000 |
| பெறக்கூடிய இலாபத்தின் பங்கு | 496,523,645 | 285,736,609 | 198,500,361 | - | - | - |
| 50% பரிசில் பங்கு ஒதுக்கீட்டு கணக்கு | 376,618,251 | 322,839,494 | 313,497,021 | - | - | - |
| கழிக்க: தடைகளுக்கான ஏற்பாடு | (90,107,550) | (86,917,285) | - | | | |
| | 785,234,346 | 523,858,817 | 514,197,382 | 2,200,000 | 2,200,000 | 2,200,000 |

## 23. நிதிச் சொத்துக்கள்

| | குழுமம் | | | Trust Fund | | |
|---|---|---|---|---|---|---|
| | 2012 | 2011 | 2011.01.01இலுள்ள வாறு | 2012 | 2011 | 2011.01.01இலு ள்ளவாறு |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **இலாபம் அல்லது நட்டத்தினூடாக உண்மையான பெறுமதி** | | | | | | |
| சொத்துரிமையில் முதலீடு | 210,540,441 | 205,372,110 | - | - | - | - |
| வாணிப விணைகளில் முதலீடு | 2,946,639,084 | 7,359,021,633 | 8,772,517,287 | - | - | - |
| | 3,157,179,525 | 7,564,393,743 | 8,772,517,287 | - | - | - |
| **முதிர்ச்சிக்காக வைக்கப்பட்டவை** | | | | | | |
| திறைசேரிப் பிணைகள் | 1,632,149,512 | 93,411 | 53,600 | - | - | - |
| | 1,632,149,512 | 93,411 | 53,600 | - | - | - |
| **விற்பனை முதலீட்டுக்காக இருப்பவை (உண்.பெ)** | | | | | | |
| திறைசேரிப் பிணைகள் | 3,405,010,385 | 3,848,705,623 | 2,558,757,440 | 3,405,010,385 | 3,848,705,623 | 2,558,757,440 |
| திறைசேரி உண்டியல்கள் | - | 666,814,902 | 1,602,570,132 | - | 666,814,902 | 1,602,570,132 |
| | 3,405,010,385 | 4,515,520,525 | 4,161,327,571 | 3,405,010,385 | 4,515,520,525 | 4,161,327,571 |
| **கடன்களும் பெறுகைகளும்** | | | | | | |
| பின்னோக்கிய மீள்கொள்வனவு உடன்படிக்கை | 687,923,527 | 82,051,449 | 551,487,830 | 49,012,292 | 77,094,302 | 443,234,373 |
| முன்னுரிமைப் பங்குகள் | - | - | - | 200,000,000 | - | - |
| பிணைப்பொறுப்புகள் | 202,619,400 | - | - | 202,619,400 | - | - |
| திறைசேரி உண்டியல்கள் மற்றும் றேப்போஸ் | 158,699,524 | 635,694,604 | 433,552,694 | - | - | - |
| நம்பிக்கைச் சான்றிதழுக்கு ஆதவளிக்கு சொத்தக்கள் | 51,833,875 | - | - | 51,833,875 | - | - |
| நிலையானவைப்புகள் (குறிப்பு 23.1) | 3,776,206,925 | 1,973,659,867 | 1,617,925,550 | 3,222,532,571 | 1,856,075,493 | 1,578,273,679 |
| | 4,877,283,251 | 2,691,405,920 | 2,602,966,074 | 3,725,998,138 | 1,933,169,795 | 2,021,508,052 |
| **தற்போதைய நிதிச்சொத்துக்கள் அல்லாதவை** | **9,015,986,222** | **5,822,458,902** | **4,176,736,590** | **7,030,162,356** | **5,704,781,117** | **4,137,031,119** |
| **தற்போதைய நிலையான சொத்துக்கள்** | **4,055,636,451** | **8,948,954,698** | **11,360,127,942** | **100,846,167** | **743,909,204** | **2,045,804,505** |

### 23.1 நிலையான வைப்புகள்

மேலேயுள்ள நிலையான வைப்புகளில் உழைக்கப்பட்ட வட்டி பாடசாலை அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது

### 23.2 நிதி ஆதனங்கள் (நம்பிக்கைப் பெறுப்பு நிதியம்)

நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் முதலீட்டு வெட்டுமுகத்தைப் பின்பற்றி தெரிவிக்கப்பட்ட நிதிச் சொத்துக்கள் (குறிப்பு 23) மற்றும் நிதிப் பொறுப்புகள் (குறிப்பு 27), தேசிய நலன்புரி கூட்டுத்தாபன (பிறைவேட்) லிமிடெட்டினால் முகாமை செய்யப்படுகின்றது.

| | 2012 | 2011 | 2010 |
|---|---|---|---|
| திறைசேரி உண்டியல்கள் | - | 666,814,902 | 1,602,570,132 |
| திறைசேரிப் பிணைகள் | 3,405,010,385 | 3,848,705,623 | 2,558,757,440 |
| பின்னோக்கிய மீள்கொள்வனவு உடன்படிக்கை | 49,012,292 | 77,094,302 | 443,234,373 |
| நிலையான வைப்புகள் | 1,945,911,673 | 795,123,604 | 606,768,022 |
| முன்னுரிமைப் பங்குகள் | 200,000,000 | - | - |
| பிணைப்பொறுப்புகள் | 202,619,400 | - | - |
| கழிக்க: மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் விற்கப்பட்ட பிணைகள் | (112,209,454) | (767,705) | (751,942) |
| | 5,690,344,296 | 5,386,970,726 | 5,210,578,024 |

### 24. முற்கொடுப்பனவுகளும் பெறுகைகளும்

| | குழுமம் | | | நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | | |
|---|---|---|---|---|---|---|
| | 2012 | 2011 | 2011.01.01இலுள்ளவாறு | 2012 | 2011 | 2011.01.01இலுள்ளவாறு |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| பெறக்கூடிய வற் | 13,832,748 | 13,670,102 | 599,358 | - | - | - |
| பதவியினர் கடன் | 6,976,404 | 6,160,758 | 8,057,348 | 174,402 | 183,052 | 440,036 |
| முன்செலுத்தப்பட்ட பதவியினர் கடன் | 1,189,724 | 1,054,713 | 1,018,745 | 16,098 | 8,948 | 33,269 |
| பெறக்கூடிய காப்புறுதி | 359,963 | 275,412 | 196,822 | 56,697 | 2,940 | - |
| லங்கா நிதிசார் சேவைகள் பணியகத்தில் வைப்புகள் | 1,080,000 | 1,080,000 | 1,080,000 | - | - | - |
| அபி.லொத்.சபையில் இருந்து பெறத்தக்கன | - | - | - | 283,462,354 | 198,819,323 | 198,500,361 |
| வருமானப் பெறுகைகள் | 5,299,792 | 6,554,902 | 7,677,639 | | | |
| வட்டிப் பெறுகைகள் | 2,716,564 | 545,957 | 7,732,474 | - | - | - |
| பதவியினரிடமிருந்து மீளப்பெறப்படுபவை | 405,298 | 89,480 | 511,453 | - | - | - |
| பயன்பாட்டு வைப்புகள் | 521,600 | 401,600 | 381,600 | - | - | - |
| முன்செலுத்தப்பட்ட வருமான வரி | 3,135,601 | 2,728,265 | 3,403,045 | - | - | - |
| பொருளாதார சேவைக் கட்ட பெறுகைகள் | 616,308 | 363,406 | 647,533 | - | - | - |
| தேசக் கட்டுமான வரிப் பெறுகைகள் | 435,655 | - | - | - | - | - |
| முற்பணங்கள் | 45,122,174 | 7,323,398 | 5,756,260 | 1,168,022 | 353,810 | 54,815 |
| ஏனைய முற்கொடுப்பனவுகள் | 5,251,548 | 2,717,677 | 2,678,239 | - | - | - |
| | 86,943,379 | 42,965,670 | 39,740,515 | 284,877,573 | 199,368,073 | 199,028,481 |

**25.** பணமும் பணத்திற்குச் சமனானவையும்

| | குழுமம் | | | Trust Fund | | |
|---|---|---|---|---|---|---|
| | 2012 | 2011 | 2011.01.01இலுள்ள வாறு | 2012 | 2011 | 2011.01.01இலு ள்ளவாறு |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| அழைப்பு வைப்புகள் | 25,000,000 | 27,000,000 | 93,000,000 | - | - | - |
| வங்கியிலுள்ள பணம் | 161,905,094 | 99,048,048 | 91,386,220 | 2,054,344 | 14,695,633 | 16,791,497 |
| கையிலுள்ள பணம் | 219,145 | 180,490 | 180,490 | 13,655 | - | - |
| பரிமாற்றலிலுள்ள பணம் | 19,014,850 | - | - | - | - | - |
| | **206,139,089** | **126,228,538** | **184,566,710** | **2,067,999** | **14,695,633** | **16,791,497** |

பண ஓட்டம், பணமும் பணத்திற்குச் சமமானவையின் கூற்றுக்காக பின்வருவன தொகுக்கப்படுகின்றது

| | 2012 | 2011 | 2012 | 2011 |
|---|---|---|---|---|
| அழைப்பு வைப்புகள் | 25,000,000 | 27,000,000 | - | - |
| வங்கியிலுள்ள பணம் | 161,905,094 | 99,048,048 | 2,054,344 | 14,695,633 |
| கையிலுள்ள பணம் | 219,145 | 180,490 | 13,655 | - |
| பரிமாற்றலிலுள்ள பணம் | 19,014,850 | - | - | - |
| | 206,139,089 | 126,228,538 | 2,067,999 | 14,695,633 |
| வங்கி மேலதிகப் பற்று | -35,348 | - | - | - |
| | **206,103,741** | **126,228,538** | **2,067,999** | **14,695,633** |

**26.** ஓய்வூதிய நன்மைக் கடப்பாடுகள்

| | குழுமம் | | | நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | | |
|---|---|---|---|---|---|---|
| | 2012 | 2011 | 2011.01.01இலுள்ள வாறு | 2012 | 2011 | 2011.01.01இலு ள்ளவாறு |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **ஆண்டின் ஆரம்பத்தில் மீதி** | 25,473,166 | 21,095,069 | 18,784,458 | 158,038 | 132,144 | 506,090 |
| வட்டிச் செலவு | 2,198,656 | 1,718,886 | 229,335 | 15,860 | 13,214 | 50,609 |
| ஆண்டுக்கான அறவீடு | 5,119,024 | 4,592,023 | 4,535,377 | 52,998 | 14,438 | 8,539 |
| செலுத்தப்பட்ட நன்மைகள் | (1,406,393) | (584,268) | (2,064,264) | (170,040) | - | - |
| உண்மையான (மேலதிகம)/ குறை | 737,011 | (1,348,543) | (389,837) | 322,049 | (1,758) | (433,094) |
| **ஆண்டிறுதியில் மீதி** | **32,121,464** | **25,473,166** | **21,095,069** | **378,905** | **158,038** | **132,144** |

பயன்படுத்தப்பட்ட முதன்மையான ஊகங்கள் பின்வருமாறு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| உத்தேசிக்கப்பட் கழிவு வீதம் | 9% - 12% | 9% - 11% | 8% - 10% | 12% | 11% | 10% |
| வேதன ஏற்ற வீதம் | 2% - 20% | 2% - 10% | 2% - 10% | 2% | 2% | 2% |
| ஓய்வூதிய வயது | 55 - 65 ஆண்டுகள் | 55 - 65 ஆண்டுகள் | 55 - 65 ஆண்டுகள் | 55 - 65 ஆண்டுகள் | 55 - 65 ஆண்டுகள் | 60 ஆண்டுகள் |

**27. ஏனைய பொறுப்புகள்**

| | குழுமம் | | | நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | | |
|---|---|---|---|---|---|---|
| | 2012 | 2011 | 2011.01.01இலுள்ளவாறு | 2012 | 2011 | 2011.01.01இலுள்ளவாறு |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்கப்பட்ட பிணைகள் | 4,731,441,556 | 6,745,321,900 | 8,100,421,127 | 112,209,454 | 767,705 | 751,942 |
| | **4,731,441,556** | **6,745,321,900** | **8,100,421,127** | **112,209,454** | **767,705** | **751,942** |

**28. அட்டுறு மற்றும் ஏனைய செலுத்தத்தக்கவைகள்**

| | குழுமம் | | | நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | | |
|---|---|---|---|---|---|---|
| | 2012 | 2011 | 2011.01.01இலுள்ளவாறு | 2012 | 2011 | 2011.01.01இலுள்ளவாறு |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| பெறப்பட்ட முற்பணம் | 2,976,144 | 21,724,026 | 88,473,529 | - | - | 254,100 |
| திருப்பிச் செலுத்தக்கூடிய பிற்போடப்பட்ட பாடக்கட்டணம் | 2,482,300 | 2,552,467 | 1,914,629 | - | - | - |
| பல்கலைக்கழகங்களுக்கு செலுத்த வேண்டியவை | 74,872,470 | 63,994,344 | 42,981,481 | - | - | - |
| செலுத்தக்கூடிய வரி | 820,196 | 6,419,579 | 22,127,642 | - | - | - |
| திருப்பிச் செலுத்தக்கூடிய வைப்புக்கள் | 16,179,959 | 5,044,554 | 9,181,239 | - | - | - |
| மீள் நுண்ணாய்வுக் கட்டணம் | 259,585 | 126,025 | 276,845 | - | - | - |
| காசோலை இரத்துக் கணக்கு | 637,899 | 298,848 | 239,622 | - | - | - |
| இ-விஸ் கறியர் றேயினிங் (பிறைவேட்) லிமிடெட் | 192,318 | 130,818 | 78,318 | - | - | - |
| ஏனைய செலுத்தக்கூடியவை | 47,552,984 | 35,030,516 | 33,734,056 | - | - | - |
| அட்டுறு செலவீனம் | 899,016 | 1,025,365 | 971,504 | 22,422 | 23,058 | 13,768 |
| செலுத்தக்கூடிய முன்னுரிமைப் பங்கு வட்டி | 15,910,000 | - | - | - | - | - |
| தடுத்து வைத்தல் கணக்கு | 1,929,826 | 3,547,409 | 3,660,514 | 1,929,826 | 3,547,409 | 3,660,514 |
| பதவியினர் செலவீனங்கள் ( வேதனம், சம்பளம்) | 2,641,423 | 2,283,144 | 1,813,244 | - | - | 53,798 |
| செலுத்தக்கூடிய கணக்காய்வுக் கட்டணம் | 1,599 | 3,167 | 3,167 | - | - | - |
| செலுத்தக்கூடிய பங்கிலாபம் | 369,070 | 369,070 | 369,070 | - | - | - |
| | **167,724,789** | **142,549,332** | **205,824,860** | **1,952,248** | **3,570,467** | **3,982,180** |

**29. ஏற்பாடுகள்**

| | குழுமம் | | | நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | | |
|---|---|---|---|---|---|---|
| | 2012 | 2011 | 2011.01.01இலுள்ளவாறு | 2012 | 2011 | 2011.01.01இலுள்ளவாறு |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| பாடசாலை அபிவிருத்திச் செலவீனங்களுக்கான ஏற்பாடு | 1,834,546 | 18,938,962 | 43,907,496 | 1,834,546 | 18,938,962 | 43,907,496 |
| | **1,834,546** | **18,938,962** | **43,907,496** | **1,834,546** | **18,938,962** | **43,907,496** |

**30. உரிய தரப்பினரின் வெளிப்படுத்தல்**

உரிய தரப்பினாகளின் முக்கியமான விபரங்களின் வெளிப்படுத்தல் பின்வருமாறு

**31.1** உரிய சொத்துரிமைகளுடனான பரிமாற்றங்கள்

| | கம்பனி | தொடர்பு | பரிமாற்றல் தன்மை | 2012.12.31இலுள்ளவாறு<br>ரூபா | 2011.12.31இலுள்ளவாறு<br>ரூபா | 2011.01.01இலுள்ளவாறு<br>ரூபா |
|---|---|---|---|---|---|---|
| (i) | National Wealth Corporation (Pvt) Ltd | துணைக் கம்பனி | விற்பனை உடன்படிக்கைகளின் கீழான பெறுவ | 49,012,292 | 77,094,302 | 443,234,373 |
| | | | மீள்கொள்வனவின் கீழான கொடுப்பனவுச | 848,990 | 767,705 | 751,942 |
| | | | முன்னுரிமைப் பங்குகளில் முதலீடு | 200,000,000 | - | - |

| | ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்ற பரிமாற்றங்கள் | | | 2012<br>ரூபா | 2011<br>ரூபா |
|---|---|---|---|---|---|
| (ii) | National Wealth Corporation (Pvt) Ltd | | வட்டி வருமானம் | 16,384,040 | 12,642,980 |
| | | | நிதி முகாமைத்துவக் கட்டணம் | 8,683,246 | 8,072,317 |
| | | | பங்கிலாப வருமானம் | 36,000,000 | - |
| (iii) | இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகம் | துணைக் கம்பனி | வட்டி வருமானம் | 17,431,898 | 14,695,735 |



**31.2** முக்கிய முகாமைத்துவ நபர்களுடனான பரிமாற்றங்கள்

முக்கிய முகாமைத்துவ அங்கத்தவர்கள் என்பவாகள் மஹாபொலஉயர் கல்வ நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின்நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் அங்கத்தவர்கள்

முக்கிய முகாமைத்துவ அங்கத்தவர்கள் மற்றும் அவர்களது நெருங்கிய குடும்ப நண்பர்களுடன் முக்கியமான பரிமாற்றங்கள் எதுவும் இடம்பெறவில்லை

**32. ஐந்தொகைத் திகதிக்குப் பின்னரான நிகழ்வுகள்**

ஐந்தொகை திகதிக்குப் பினனரர் அனைத்து பொருள்சார் நிகழ்வுகள் கவனத்தில்கொள்ளப்பட்டுள்ளதுடன், தேவையானவிடத்து நிதிசார் கூற்றுக்களில் உரிய சீராக்கங்கள், வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டுள்ளன

**மஹாபொல உயர் கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்**
**2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான திரட்டிய நிதிக் கூற்றுக்கள்**

**33. நிதி இடர் முகாமைத்துவத்தின் குறிக்கோள்களும் கொள்கைகளும்**

நிதிசார் ஆவணங்களிலிருந்து பின்வருகின்ற ஆபத்துக்களுக்கு குழமங்கள் தள்ளப்படுகின்றன

1. தருமதியாளர் ஆபத்து
2. திரவத்தன்மை ஆபத்து
3. சந்தை ஆபத்து

**இடர் முகாமைத்துவக் கட்டுக்கோப்பு**

நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை மற்றும் பணிப்பாளர்கள் சபை தாபனத்திற்கான ஒட்டுமொத்த பொறுப்பினைக் கெண்டிருப்பதுடன்,குழுமத்தின் இடர் முகாமைத்துவக் கொள்கைகளை விருத்திசெய்வது,காணிப்பதை உள்ளடக்குகின்ற குழும இடர் முகாமைத்துவத்தை மேற்பார்வையிடவும் முடியும்

குழும இடர் முகாமைத்துவக் கொள்கைள், உரிய இடர் மட்டுப்படுத்தல்கள், கட்டுப்படுத்தல்களை உருவாக்குவதற்கும், இடர்களை கண்காணிப்பதற்கும் வரையறைகளைப் பின்பற்றுவதற்கும் குழுமத்தினால் முகம்கொடுக்கப்பட்ட இடர்களை இனங்காண்பதற்கு, அளவிடுவதற்கும் பகுப்பாய்வதற்கும் உருவாக்கப்படுகின்றன.

மஹாபொல உயர் கல்வி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் முகவராக விளங்குகின்ற தேசிய நலன்புரி கூட்டுத் தபான லிமிடெட்டுன்

மஹபொல உயர்கல்வி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையு் உடன்படிக்கையொன்றைச் செய்திருந்தது

நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையும் பணிப்பாளர் சபையும் முகாமைத்துவம் எவ்வாறு குழுமங்களின் இடர் முகாமைத்துவ கொள்கைகள் மற்றும் நடைமுறைகளைக் கண்காணிக்கின்றது என்பதையும், குழுமத்தினால் முகம்கொடுக்கப்படுகின்ற இடர்கள் தொடர்பான இடர் முகாமைத்துவ கட்டுக்கோப்பின் போதுமான தன்மையை மீளாய்கின்றது என்பதையும் மேற்பார்வையிடுகின்றன.

**தருமதி ஆபத்து**

தருமதி ஆபத்து என்பது எதிர்த் தரப்பு நிதி ஆவணங்கள் மற்றும் ஏனைய பெறுகைகளின் கீழ் கடப்பாடுகளை நிறைவேற்றாது நிதி நட்டத்திற்கு இட்டுச்செல்வதாகும். குழு அதனது நிதிச் செயற்பாடுகளிலிருந்து தருமதி ஆபத்தினை வெளிப்படுத்துகின்றது

பின்வருவன 2012 திசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு குழமத்திற்காக கிடைக்கப்பெறுகின்ற நிதிச் சொத்தக்களின் உயர் மட்டப் பொழிப்பாகும்

| | குழுமம் | நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| இலபாம்,நட்டத்தினூடாக நியாயமான விலை | 3,157,179,525 | - |
| முதிர்வுக்காக வைக்கப்பட்டுள்ளவை | 1,632,149,512 | - |
| விற்பனைக்காகக் கிடைக்கப்பெறுபவை | 3,405,010,385 | 3,405,010,385 |
| கடன்களும் பெறுகைகளும் | 4,877,283,251 | 3,725,998,138 |
| ஏனைய பெறுகைகள் | 16,954,323 | 283,693,453 |
| | **13,088,576,995** | **7,414,701,977** |

**திரவத்தன்மை ஆபத்து**

திரவத்தன்மை ஆபத்து என்பது, குழு, பணத்தை விநியோகித்தல் அல்லது ஏனைய நிதிச் சொத்தக்களினால் தனது நிதிப் பொறுப்புகளுடன் இணைந்த கடப்பாடகளை நிறைவேற்றுவதில் கஷ்டங்களை எதிர்நோக்குவதாகும். திரவத்தன்மையைக் கையயாளுவதற்குரிய குழுமத்தின் அணுகுமுறையானது, குழமங்களின் கௌரவத்திற்கு பங்கம் ஏற்படக்கூடிய ஏற்றுக்கொள்ள முடியாத நட்டம் அல்லது ஆபத்து ஏற்படாது சாதாரண மற்றும் அழுத்தமான நிலைமைகளின் கீழும் தனது பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு போதியளவு திரவத்தன்மையுடையதாக எப்போதுமிருத்தல்.

ஒப்பந்த முதிர்வு திகதிக்கு ஐந்தொகைத் திகதியில் எஞ்சியிருக்கின்ற காலப்பகுதியை அடிப்படையாகக் உரிர் முதிர்ச்சியுள்ள குழமங்களுக்கு குழமங்களினதம்,நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் பொறுப்புகளையும் கீழேயுள்ள அட்டவணை ஆராய்கின்றது.

குழுமம்

| | தேவையின் பேரில் | 3 மாதத்திற்கு குறைவாக | 3 மாதத்திற்கும் ஒரு வருடத்திற்கும் இடையில் |
|---|---|---|---|
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் விற்கப்பட்ட பிணைகள் | - | 4,337,841,220 | 393,600,335 |
| ஏனைய செலுத்தக்கூடியவை | - | 2,643,021 | 66,291,826 |
| வங்கி மேலதிகப்பற்று | 35,348 | - | - |
| **2012 திசெம்பர் 31 இலுள்ளவாறு** | **35,348** | **4,340,484,241** | **459,892,161** |
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் விற்கப்பட்ட பிணைகள் | - | 5,872,164,308 | 873,157,592 |
| ஏனைய செலுத்தக்கூடியவை | - | 2,286,311 | 39,603,290 |
| **2011 திசெம்பர் 31 இலுள்ளவாறு** | **-** | **5,874,450,619** | **912,760,882** |

| நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | தேவையின் பேரில் | 3 மாதத்திற்கு குறைவாக | 3 மாதத்திற்கும் ஒரு வருடத்திற்கும் இடையில் |
|---|---|---|---|
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் விற்கப்பட்ட பிணைகள் | - | 848,990 | 111,360,463 |
| ஏனைய செலுத்தக்கூடியவை | - | - | 1,952,248 |
| வங்கி மேலதிகப்பற்று | - | - | - |
| **2012 திசெம்பர் 31 இலுள்ளவாறு** | **-** | **848,990** | **113,312,711** |
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் விற்கப்பட்ட பிணைகள் | | 767,705 | - |
| ஏனைய செலுத்தக்கூடியவை | | | 3,570,467 |
| **2011 திசெம்பர் 31 இலுள்ளவாறு** | **-** | **767,705** | **3,570,467** |

**மஹாபொல உயர் கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்**

**2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான திரட்டிய நிதிக் கூற்றுக்கள்**

**சந்தை ஆபத்து**

சந்தை ஆபத்து என்பது,நிதி ஆவணங்களின் பண ஓட்டங்களின் உண்மையான பெறுமதி சந்தை விலைகளின் காரணமாக தளம்பலடைவதாகும். சுந்தை விலை நான்கு வகையான ஆபத்துக்களைக் கொண்டிருக்கின்றது. அவையாவன வட்டி வீத ஆபத்து, நாணய ஆபத்து, பொருட்களின் விலை ஆபத்து மற்றும் நிகர விலை ஆபத்து போன்ற ஏனைய விலை ஆபத்துக்கள். நிதி ஆவணங்கள், கடன்கள்,கடன்படுகைகள்,வைப்புகள், விற்பனை முதலீட்டுக்குக் கிடைக்கப்பெறுபவை மற்றும் வருவிக்கப்படுகின்ற நிதி ஆவணங்கள் உள்ளடங்கலான சந்தை ஆபத்துக்களால் பாதிக்கப்படுகின்றன. சந்தை இடர் முகாமைத்துவத்தின் குறிக்கோள், உச்சளவிலான வருவாயுடன், ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவீட்டெல்லைக்குள் சந்தை ஆபத்து வெளிப்படுத்தல்களை கையாளுதல் கட்டுப்படுத்துதலாகும்.

**வட்டிவீத ஆபத்து**

வட்டி வீத ஆபத்து என்பது, நிதி அவணங்களின் பண ஓட்டத்தின் உண்மையான பெறுமதி அல்லது எதிர்காலம் சந்தை வட்டி வீத மாற்றங்களினால் தளம்பலடைதலாகும். சந்தை வட்டி வீதங்களில் மாற்றங்களின் ஆபத்துக்களுக்கான குழுமங்களின் வெளிப்பாடு வட்டி வீத மிதக்கும் தன்மையுடனான குழுமங்களின் நீண்ட கால கடன் கடப்பாடுகளுடன் ஆரம்பத்தில் தொடர்புபடுகின்றது .

**நிகர விலை**

ஆபத்துகளுக்கு எளிதில் பாதிப்படைகின்றன. குழுமம், சொத்துரிமைப் பிணை ஆபத்தினை, மாற்றுவழி மற்றும் தனிப்பட்டவர்கள் மற்றும் மொத்த சொத்துரிமை ஆவணங்கள் மீது வரையறை விதித்து கையாளுகின்றது.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இல. } ரீசீ2/எவ்/எம்ரீஎவ்/6/12/28
My No.

ඔබේ අංකය
உமது இல. }
Your No.

දිනය
திகதி } 2016 மே 26
Date

தலைவர்,

மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம்

**மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளபடியான ஒன்றிணைந்த நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான ஒன்றிணைந்த விரிவான வருமானக்கூற்று, ஒன்றிணைந்த உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, ஒன்றிணைந்த காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கத் தகல்வல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் 1981 இன் 66 ஆம் இலக்க மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப்பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் 10(4) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்த ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.



අංක 306/72, පොල්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்படாத விடயங்கள் தொடர்பாகவும் ஒன்றிணைந்த நிதி நிலைமைக் கூற்று, ஒன்றிணைந்த விரிவான வருமானக்கூற்று, ஒன்றிணைந்த உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் ஒன்றிணைந்த காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

### 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01**

நம்பிக்கைப் பொறுப்பின் துணைக் கம்பனி முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் நட்டம் ஈட்டியுள்ளமையாலும் அக் கம்பனியில் கீழுள்ளவாறு திரவத்தன்மை பிரச்சினை காணப்படுவதனாலும் நியமத்திற்கமைய அதன் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பில் மீளாய்வு செய்யப்படுதல் வேண்டுமென்பது அவதானிக்கப்பட்டது.

(i) மீளாய்வாண்டில் ரூபா 200,000,000 மீட்கத்தக்க முன்னுரிமைப் பங்குகள் மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தினால்

வழங்கப்பட்டுள்ளதுடன் அதற்காக செலுத்தவேண்டிய முன்னுரிமைப் பங்கு வட்டி ரூபா 15,910,000 அட்டுறுவாகக் காணப்பட்டது.

(ii) மீளாய்வாண்டில் சாதாரண பங்குகளிற்காக ரூபா 41,000,000 பங்கிலாபமாக பிரேரிக்கப்பட்டிருந்த போதிலும், அது செலுத்த வேண்டிய பங்கிலாபமாக காட்டப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 39**

நம்பிக்கைப் பொறுப்பின் உப கம்பனியான அபிவிருத்தி லொத்தர் சபையின் முதலீட்டுக்கான காலத்தேய்வு ஏற்பாடு மீளாய்வாண்டில் ரூபா 90,107,550 ஆக காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டில் அது ரூபா 86,917,285 ஆகும். இலங்கை கணக்கீட்டு நியமம் 28 இன் படி உப கம்பனியின் தேறிய முதலீட்டுக்கான காலத்தேய்வு நட்டத்தை இனங்காண்பதற்கு இலங்கை கணக்கீட்டு நியமம் 39 இன் 58 ஆம் பிரிவிலுள்ள விடயங்களைக் கருத்திற்கொள்ள வேண்டிய போதிலும், அபிவிருத்தி லொத்தர் சபை தொடர்பில் ஏற்பாட்டை மேற்கொள்வதற்கு குறிப்பிடத்தக்க பொருண்மையான காரணங்கள் காணப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 40**

நிதியத்தினால் குத்தகை அடிப்படையின் கீழ் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள மாலபையில் அமைந்துள்ள காணியின் நியாயப் பெறுமதி ரூபா 2,400,000,000 எனக் குறிப்பினால் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதன் கணக்கீடு செய்யப்பட்டிருந்த பெறுமதி ரூபா 12,460,179 ஆகும். இந்த ஆதனத்தின் நியாயப்பெறுமதி தொடர்பான மதிப்பீட்டு அறிக்கை அல்லது முகாமைத்துவ பிரதிநிதித்துவம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. அத்துடன், இந்த மதிப்பீட்டிற்காக சுதந்திர, தொழில்சார் தகைமை மற்றும் அனுபவமுடைய மதிப்பீட்டாளர் ஒருவர் ஈடுபடுத்தப்பட்டாரா என்பதனை உறுதிப்படுத்த முடியவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வரையறுக்கப்பட்ட நெசனல் வெல்த் கோபரேசன் கம்பனியிடமிருந்து கிடைத்திருந்த ரூபா 100,000,000 தொகையான உபாகரப் பங்குகள் கணக்கீடு செய்யப்படாமையால் முதலீட்டுக் கணக்கும் ஆண்டிற்கான நட்டமும் அத் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) வரையறுக்கப்பட்ட நெசனல் வெல்த் சிகியுரிடி கம்பனியில் மேற்கொள்ளப்பட்ட முன்னுரிமைப் பங்குகளின் முதலீட்டுக்காக 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரேரிக்கப்பட்டிருந்த பங்கிலாபம் ரூபா 15,910,000 ஆன போதிலும், நம்பிக்கைப் பொறுப்பின் நிதிக்கூற்றுக்களில் பெறப்பட வேண்டிய பங்கிலாபமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) வரையறுக்கப்பட்ட நெசனல் வெல்த் கோபரேசன் கம்பனியிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 5,000,000 பங்கிலாபம் நம்பிக்கைப் பொறுப்பின் கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அபிவிருத்தி லொத்தர் சபையிடமிருந்து பெறவேண்டிய இலாபம் ரூபா 283,462,352 குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நம்பிக்கைப்பொறுப்பின் முதலீடுகளிற்குரிய வட்டி பேரேட்டுக் கணக்கின் படி ரூபா 775,218,903 ஆக காணப்பட்டதுடன் அது நிதிக்கூற்றுக்களின் படி ரூபா 700,597,706 ஆகக் காணப்பட்டமையால் வேறுபாடு ரூபா 74,621,197 ஆக இருந்தது. இந்த வேறுபாட்டிற்கான காரணங்கள் கணக்காய்விற்கு விளக்கப்படாமையால் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள தொகைகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியவில்லை.

(ஆ) 2005 இன் 45/02 ஆம் இலக்க நம்பிக்கைப் பொறுப்பு சபையின் தீர்மானத்தின் படி ரூபா 221,000,000 ஆரம்ப வைப்பொன்றை பயன்படுத்தி தனிப்பட்டதோர் கணக்காக பேணிவருவதற்காக ஆரம்பிக்கப்பட்டிருந்த பாடசாலை அபிவிருத்தி நிதியம் மீளாய்வாண்டில் ஒன்றிணைந்த நிதிக்கூற்றிலிருந்து அகற்றப்பட்டதாக குறிப்பினால் காட்டப்பட்டிருந்தது. 2012 சனவரி 01 இல் உள்ளவாறு அக் கணக்கில் காணப்பட்ட ரூபா 350,224,315 மீதி நிறுத்திவைக்கப்பட்ட இலாபத்திலிருந்து ரூபா 368,526,144 தொகையாக குறைக்கப்பட்டமையால் ரூபா 18,301,829 வேறுபாடு காணப்பட்டது.

(இ) சனாதிபதி நிதியத்தினால் வழங்கப்படுகின்ற உயர்தர புலமைப் பரிசிலுக்காக மீளாய்வாண்டில் ரூபா 49,485,000 தொகையினை நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் பங்களிப்புச் செய்திருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 49,038,600 ஆகக் காணப்பட்டமையால் வேறுபாடு ரூபா 446,400 ஆகும்.

(ஈ) மீளாய்வாண்டில் அபிவிருத்தி லொத்தர் சபையிடமிருந்து மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நிதியத்திற்குக் கிடைத்திருந்த இலாபப் பங்கு ரூபா 605,000,000 ஆன போதிலும், ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களின் படி அது ரூபா 600,000,000 எனக் காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 5,000,000 வேறுபாடு காணப்பட்டது.

(உ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வரையறுக்கப்பட்ட நெசனல் வெல்த் கோபரேசன் கம்பனியில் மேற்கொள்ளப்பட்டிருந்த முதலீட்டின் பெறுமதி ரூபா 5,454,277,011 ஆகக் காணப்பட்ட போதிலும், அக் கம்பனியினால் அனுப்பப்பட்டிருந்த மீதி உறுதிப்படுத்தலின் படி அது ரூபா 5,864,837,065 ஆகக் காணப்பட்டது.

### 2.2.4 போதிய அதிகாரத்தால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பாடசாலை அபிவிருத்தி நிதியத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியினை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்தமையால் கிடைக்கும் வட்டியினை பாடசாலை அபிவிருத்தி நடவடிக்கைகளிற்காக பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், இந்த நிதியத்துக்கு உரித்தற்ற ஏனைய நிலையான வைப்புக்களிலிருந்து கிடைத்திருந்த ரூபா 189,977,762 வட்டி பாடசாலை அபிவிருத்தி நடவடிக்கைகளிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வரும் கணக்கு விடயங்களிற்கு எதிரே காண்பிக்கப்பட்டுள்ள உறுதிப்படுத்தல்கள் மற்றும் சான்றுகள் சமர்க்கப்பட்டிராமை காரணமாக அவற்றைக் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த / மெய்மையாய்வு செய்ய முடியவில்லை.

| | கணக்கு விடயம் | பெறுமதி<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|
| (அ) | முன்னுரிமைப் பங்குகளில் முதலீடு | 200,000,000 | பங்குச் சான்றிதழ் அல்லது உறுதிப்படுத்துகின்ற ஏனைய ஆவணங்கள் |
| (ஆ) | அபிவிருத்தி லொத்தர் சபையில் முதலீடு | 2,200,000 | சான்றிதழ்கள் அல்லது உறுதிப் படுத்துகின்ற ஏனைய ஆவணங்கள் |

(இ) நிதியத்தின் துணைக் கம்பனியான இலங்கை தகவல் தொழில்நுட்ப (உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட) கம்பனியின் நிதிக்கூற்றுக்களை நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நிதிக்கூற்றுக்களுடன் ஒன்றிணைக்கையில் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்ட நிதி ஆண்டுகளிற்காக சீராக்கல்களை செய்வதற்காக பயன்படுத்தப்பட்டிருந்த அடிப்படை மற்றும் செய்கை வேலைப்பத்திரங்கள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. இதன்

பிரகாரம் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற மீதிகளின் சரியான தன்மையினை கணக்காய்வில் உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது.

(ஈ) 2003 நவம்பர் 13 ஆந் திகதி வரையறுக்கப்பட்ட நெசனல் வெல்த் கோபரேசன் கம்பனியுடன் கைச்சாத்திடப்பட்டிருந்த உடன்படிக்கையின் படி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நிதி முகாமைத்துவத்திற்காக முகாமைத்துவக் கட்டணமொன்றை செலுத்துவதற்கு இணங்கப்பட்டிருந்த போதிலும், 2004 ஆம் ஆண்டிலிருந்து 2012 ஆம் ஆண்டு வரை செலுத்தப்பட்டிருந்த ரூபா 67,197,369 தொகையான முகாமைத்துவக் கட்டணத்தின் கணிப்பீட்டு அடிப்படையினை தெளிவுபடுத்துவதற்கு நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் தவறியிருந்தது.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க நல்லாளுகை மீதான பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பந்தி | மீளாய்வாண்டில் கணக்காய்வுக் குழுவை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிலையத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக் கையின் 5(அ)(i) ஆம் பிரிவு | இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள காணிக்கான வாடகையாக அந்த நிறுவனத்தின் ஆண்டிற்கான தேறிய இலாபத்தில் 20 சதவீதம் அல்லது ரூபா 8,000,000 ஆகிய பெறுமதிகளில் கூடியதை அறவிட வேண்டிய போதிலும், 2005 முதல் 2012 ஆண்டு வரையான காலத்திற்கான ரூபா 67,293,879 குத்தகை அறவிடப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களின் படி, 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் தொழிற்பாடுகளின் விளைவுகள் ரூபா 838,535,935 மிகையொன்றானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 805,547,029 ஆகக் காணப்பட்டது. அதற்கமைய, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 32,988,906 சாதகமான வளர்ச்சி அவதானிக்கப்பட்டது. ஏனைய வருமானம் ரூபா 45,194,253 இனாலும் உப கம்பனிகளின் இலாபம் ரூபா 259,405,451 இனாலும் அதிகரித்திருந்தமையும் நிர்வாக செலவினம் ரூபா 67,216,708 இனாலும் நிதிக் கிரயம் ரூபா 203,649,155 இனாலும் அதிகரித்திருந்தமையே நிதி விளைவின் அதிகரிப்புக்கு பிரதான காரணிகளாக காணப்பட்டன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நிதியத்தை முகாமைத்துவம் செய்வதற்காக நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு முழுமையான பங்கு மூலதன உரித்துடையதாக 2003 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட நெசனல் வெல்த் கோபரேசன் தனியார் கம்பனியில் முதலீடு செய்யப்பட்ட தொகை ரூபா 200,000,000 ஆகும். 2004 ஆம் ஆண்டு முதல் 2007 ஆம் ஆண்டு வரையான காலத்தில் வரையறுக்கப்பட்ட நெசனல் வெல்த் கோபரேசன் கம்பனியிடமிருந்து எவ்வித பங்கிலாபமும் கிடைத்திருக்காத போதிலும், 2003 ஆம் ஆண்டின் இலாபத்தைப் பயன்படுத்தி 2003 நவம்பர் 12 ஆந் திகதி ரூபா 100,000,000 இற்கு உபகாரப் பங்குகள் வழங்கப்பட்டிருந்தன. கம்பனியினால் சாதாரணப் பங்குகளிற்காக பங்கிலாபம் செலுத்தப்படுவதற்குப் பதிலாக குறித்த நிதியினை நிறுத்திவைத்து உபகாரப் பங்குகள் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டில் மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளிற்கான திரும்பல் வீதம் 8.74 சதவீதமாக காணப்பட்டதுடன் வரையறுக்கப்பட்ட நெசனல் வெல்த் கோபரேசன் கம்பனியினால் முகாமைத்துவம் செய்யப்பட்ட முதலீடுகளிற்கான திரும்பல் 8.95 சதவீதமாக இருந்தது. நம்பிக்கை பொறுப்பு நிதியத்தினால் செய்யப்பட்ட முதலீடுகளிற்கான திரும்பலுக்கும் கம்பனியினால் செய்யப்பட்ட முதலீடுகளிற்கான திரும்பலுக்கும் இடையே ஒத்த பெறுமதிகள் காண்பிக்கப்பட்டமையால்

நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் நிதியினை முதலீடு செய்வதற்காக வருடாந்தம் மேலதிக கிரயமொன்றை செய்து ஏனைய இரண்டு கம்பனிகளை நடாத்திச் செல்லல் பயனற்றதாகும் என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையுயும்

### 5.1 சிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2002 மே 24 ஆந் திகதிய பீஈ/பீஎவ் 21 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவுற்று 60 நாட்களிற்குள் நிதிக்கூற்றுக்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கவேண்டிய போதிலும், 2012 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 பெப்ரவரி 24 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளிற்கான ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் இவ் வறிக்கைத் திகதி வரைக்கும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று தாபிக்கப்படாதிருந்தமையால் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் எதுவும் இடம்பெற்றிருக்கவில்லை. இருப்பினும், அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்தல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) சொத்துக்கள் கட்டுப்பாடு
(இ) நிதிக் கட்டுப்பாடு
(ஈ) முதலீடுகள்

ஒப்பம்: காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி